Université de Jaffna, Sri Lanka

1974 - 2024

# La Voie d'Avenir

## 50 ans de quête académique

Anciens Élèves de l'Université de Jaffna

France

Juin 2025

A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 1 5/27/2025 8:20:47 AM

Titre du Livre
**La Voie d'Avenir**

Auteur | Anciens Élèves de l'Université de Jaffna, Royaume-Uni

Éditeur | UOJ France 50

Page de couverture & Conception du livre
S. Poongunran
spkunran@gmail.com

Date de publication : 08 Juin 2025

Nombre de pages | VIII+84

Imprimé au Royaume-Uni par

**JR Print**
61 Hoe Street, Walthamstow E17 4SA, UK
+442085036643



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 2 5/27/2025 8:20:49 AM

## நூலுருவாக்கக் குழுவினர்:

சிவசிறி தங்கராஜா
அல்போன்ஸஸ் ஜொஸ்ஸி
திவ்வியநாதன் வரதராசா
புவனேந்திரன் வேல்முருகு
சுந்தரம்பிள்ளை பூங்குன்றன்
பி. எல். மனுவேற்பிள்ளை
றொனி மருசலீன்
லக்ஷ்மன் குலசிங்கம்
விதுஷா வசிட்டன்
கைலேந்திரா செல்வேந்திரா
நிதிராஜ் தேவராஜா

வெளியீடு:
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பழைய மாணவர்கள், பிரான்ஸ்
08 யூன் 2025



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 3 5/27/2025 8:20:50 AM

# Contenu


*LES PIONNIERS 1974/75, CHEFS DE DÉPARTEMENTS* ......................................................1

பூவரசம் பூக்களின் மாலை......................................................................6

வாழ்க்கை நெடுகிலும் நினைவுகள் தொடரும் பல்கலைக் காலம்........................................7

*Rôle des anciens élèves dans le développement de l'université et de la communauté* ..........................11

சமூகத்தினதும் பல்கலைக் கழகத்தினதும் வளர்ச்சியில் பழைய மாணவர் அமைப்புகளின் பங்கு........................15

*Trying to visit a time loop, while searching for "book" inside a book about a book, with the help of early Tamil scholars* ........................19

தமிழ் - ஏளனமா இல்லை ஏற்றமா?..............................................24

*Tamil et Français: deux identités, une seule personne*..........................................29

பிரான்சில் தமிழர்கள்: ஒரு சுருக்கமான வரலாறு ..................................32

*Entre deux mondes : Le regard d'une Tamoule née en France sur le Sri Lanka*..............................40

*Un pays jamais vu, une famille jamais connue*..............................................43

பொன் பூச்சொரிய ..............................................45

*Entre épices et équations: voyage au cœur d'une double culture* ..............................46

பகிடிவதை முற்றாக ஒழிக்கப்பட வேண்டியது..............................................47

ஐயமிட்டுண் - தமிழர் சமூக வளர்ச்சிக்கான வழிகாட்டும் நடைமுறை..............................51

*Ma Connexion au Sri Lanka : Une Histoire d'Origine et de Nostalgie*..............................54

பேர்சரிக் காசில் வந்த 'அம்பலம்'..............................................56

*une enfant de la diaspora*..............................................60

தமிழ் மொழியைப் பாதுகாப்பதில் உலகத் தமிழர்களின் சமூகப் பொறுப்பு ....................62

புலம் பெயர் நாடுகளில் பிள்ளைகளை வளர்ப்பதில் தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்..............................................65

*Entre deux mondes un seul cœur*..............................................68

எதிர்ப்பு உணர்வை உரிமைக் குரலாக்கிய அரங்கு -..............................................70

*la langue tamoule, dans la dispora* ..............................................73

வேரடி மண்ணுக்கு நீர் பாய்ச்சும் புலம்பெயர் தேசம் . . . ..............................................74

*RÉFUGIÉS SRI-LANKAISE DANS LA DIASPORA*..............................................77

*Un plaidoyer pour ma culture* ..............................................78

பல்கலைக்கழக வரலாற்றில் மைல்கல் - கலைப்பீடத்தின் பொன்விழா.......................... 80

*Les jeunes issus de l'immigration sri-lankaise en France : les défis d'une génération.* ....................82




A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 4 5/27/2025 8:20:50 AM

The Association of Commonwealth Universities

Secretary General and Chief Executive
Professor Colin Riordan CBE

Woburn House
20-24 Tavistock Square
London WC1H 9HF
United Kingdom

**To**

**Vice-chair of the Organizing Committee**
**Graduate of University of Jaffna, Class of 1988**

On this momentous occasion of the 50th anniversary of the University of Jaffna, I send very best wishes to the staff, students and alumni of your remarkable institution.

University of Jaffna has not only enriched the futures of thousands of young people, but also contributed immensely to the development of Sri Lankan society at large – true to its core values of Excellence, Integrity, Accountability, Freedom of Thought and Expression, Co-creation, Community Engagement, Respect for Conversation of Nature, University in Diversity and Discernment.

As you mark this milestone, I, on behalf of all staff at the Association of Commonwealth Universities, honour your institution's position as an integral part of the Sri Lankan higher education ecosystem, impacting countless lives in the country and beyond.

We are proud to call your esteemed university part of a prestigious family of over 400 institutions in more than 40 countries globally.

With profound respect and heartfelt congratulations,

C. de la Rey

Professor Chery de la Rey
Chair of the Council
The Association of Commonwealth Universities

Founded in 1913
Patron: His Majesty King Charles III
Registered charity number: 314137
VAT registration number: 195 9141 72
OISC registration number: N201000012

www.acu.ac.uk



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 5 5/27/2025 8:20:50 AM

No: 98

அலுவலகம்
කාර්යාලය
Office } 021 221 9375/76

தொலைநகல்
ෆැක්ස්
Fax } 021 221 9374

இணையதளம்
වෙබ් අඩවිය
Website } www.np.gov.lk

மின்னஞ்சல்
විද්‍යුත් තැපෑල
E-mail } governornp@gmail.com

எனது இல
මගේ අංකය
My No } G/NPC/ PRO/09/Greetings/2025

**நாகலிங்கம் வேதநாயகன்**
**නාගලිංගම් වේදනායහන්**
**Nagalingam Vethanayahan**

**ஆளுநர், வட மாகாணம்**
**ආණ්ඩුකාරවර, උතුරු පළාත**
**Governor, Northern Province**

ஆளுநர் செயலகம்
ආණ්ඩුකාරවර, කාර්යාලය
Governor's Secretariat

பழைய பூங்கா, கண்டி வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், இலங்கை.

පැරණි උද්‍යානය, නුවර පාර,
චුණ්ඩිකුලි, යාපනය, ශ්‍රී ලංකාව.

Old Park, Kandy Road,
Chundikuli, Jaffna, Sri Lanka.

திகதி
දිනය
Date } 21/05/2025

## வாழ்த்துச் செய்தி

இலங்கைத் தீவின் வடபால், தமிழினத்தின் தன்னிகரில்லா உயர்கல்விச்சாலையும் அதன் பெருமைமிகு கல்விப் பாரம்பரியத்தின் ஒப்பற்ற அடையாளமாகவும் திகழும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமுதாயம் யாழ் பல்கலைக்கழகத்தின் பொன் அகவையைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் அதற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரிதும் மன மகிழ்ச்சியடைகின்றேன்.
தமிழினம் கடந்துவந்த வரலாற்றுப் பாதையில் அதற்கான செல்நெறியையும் வழிகாட்டுதல்களையும் தவறாமல் தந்திருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக்கத்தின் வகிபங்கை மீட்டிப்பார்க்கும் போது அது ஆழமாக உணர்த்தி நிற்கும் தடங்கள் இன்றும் பசுமையாக நிழலாடுகின்றன.

சமூக விஞ்ஞானம், மானுடப் பண்பியல், தூய மற்றும் பிரயோக விஞ்ஞானக் கற்கைகள், மருத்துவம், பொறியியல், தொழில்நுட்ப காட்சிப்புலக் கலைகள் மற்றும் அளிக்கைக் கற்கைகள், முகாமைத்துவம், பாரம்பரிய மருத்துவம், விவசாயம் என சுமார் பன்னிரண்டு பீடங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு முக்கிய நிறுவனமாக விளங்குவதுடன் ஆயிரக் கணக்கான இளநிலை மற்றும் முது நிலைப் பட்டதாரிகளுக்கு சேவையாற்றி வருகின்றது. யாழ்ப்பாணம் மட்டுமல்லாது கிளிநொச்சி மாவட்டத்திலும் அதன் விரிவாக்கம், கல்வியை அனைவரும் அணுகக்கூடியதாகவும் சமூகத்தின் தேவைகளுக்குப் பொருத்தமானதாகவும் மாற்றுவதற்கான ஆழ்ந்த அர்ப்பணிப்புக்களைப் பிரதிபலிக்கின்றது.

இவ்வாறாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆற்றிவரும் பணிகள் இங்கிருந்து வெளிவந்த விதைகள் வழியாக உலகின் கண்முன் நிரூபணச் சான்றுகளாக நிமிர்ந்து நிற்கின்றன. இந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்றுத்தேர்ந்து பிரான்ஸ் நாட்டிலே வசிக்கும் பழைய மாணவர்கள் பல்கலைக்கழக அன்னையின் பொன் அகவையைக் கொண்டாடும் நிகழ்வை வாழ்த்துவதில் வடக்கு மாகாண ஆளுநராகிய நான் மிக்க அகமகிழ்வடைகிறேன். அதுமட்டுமல்லாமல் இச்சந்தர்ப்பத்தில், நானும் இப் பல்கலைக்கழகத்தில் கற்றுத்தேர்ந்து இன்று இப்பதவியை அலங்கரிப்பதற்கு உறுதுணையாகவிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்திற்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதுடன், இப் பொன் விழாக் கொண்டாட்டத்தில் வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு கிடைத்த சந்தர்ப்பமானது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியையும் தருகின்றது.

இந்த நாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நீங்கள் அனுபவித்த மனதை விட்டகலாத நினைவுகளை மீண்டும் ஒருமுறை மீட்டிப்பார்க்கும் வாய்ப்புக்களைத் தருவதோடு உங்களை இன்றளவிலும் உயர்த்தி நிற்கும் கல்வித்தாயை நன்றியோடு மகிமைப்படுத்தும் வண்ணமிகு தினமாகவும் அமையும் என்பது நிதர்சனமாகும்.

இன்றளவில் மாத்திரமல்லாது, விதைகளாகவும் விழுதுகளாகவும் என்றும் தொடரும் பல்கலைக்கழகத்தினுடான உங்கள் அன்புறவுக்குத் தலைவணங்கி அனைவருக்கும் என் மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாகலிங்கம் வேதநாயகன்
ஆளுநர்
வடக்கு மாகாணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

மெய்ப்பொருள் காண்பது அறிவு

***Professor. S. Srisatkunarajah***
***Vice Chancellor***
*B.Sc(Hons) Jaffna, PGDE(Merit) OUSL, Ph.D Heriot-Watt,*
*Professor in Mathematics*

எமது இல. / මගේ අංකය / My Number }    உமது இல. / ඔබේ අංකය / Your Number }    **Date :** 20.05.202

## துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

ஈழத் தமிழர்களின் தனிப்பெரும் அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தாய், தனது பொன்னகவை நிறைவில் திழைத்திருக்கும் இவ்வேளையில், உலகெங்கும் பரந்து வாழும் அன்னையின் புதல்வர்கள் தாங்கள் வாழும் இடங்களில் எல்லாம் அன்னைக்குப் பொன்னகவைப் பெருவிழா எடுத்துக் கொண்டாடி வருகிறார்கள். அந்த வரிசையில், பிரான்ஸ் தேசத்தில் வாழும் பழைய மாணவர்கள் இணைந்து கொண்டாடும் "பொன்விழா" நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தி வரைவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

புலம்பெயர் தேசங்களெங்கும் நிறைந்திருக்கும் நீங்கள், அன்னையின் மடியில் தவழ்ந்த்திருந்த காலத்தை எளிதில் மறந்திருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். இடர் நிறைந்த காலப் பகுதிகளில் கற்றுத் தேர்ந்தவர்கள் நீங்கள். சொல்லெணாத் துன்பங்களை நேரிற்கண்டு அனுபவித்தவர்கள். சோதனைகளைச் சாதனைகளாக்கி மிளிர்ந்தவர்கள். நெருக்கடிகளுக்கு மத்தியில் உங்களைத் தலைநிமிரச் செய்த பல்கலைக்கழக அன்னையை மறந்துவிடாமல் அவளுக்கு மகுடம் சூட்டி மகிழும் உங்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களும், பாராட்டுதல்களும் உரித்தாகட்டும்.

நீங்கள் கற்றதோடும் – பெற்றதோடும் நின்று விடாமல் அன்னையில் பிள்ளைகள் அனைவருக்கும் நன்மை பயக்கும் வகையில் பல்கலைக்கழகத்தில் இப்போது பயிலும் பிள்ளைகளுக்கு உங்களில் பலர், பலவகையான உதவிகளைப் புரிந்து வருகிறீர்கள். பல்கலைக்கழகத்தில் தற்போது பயிலும் மாணவர்களின் பசியாற்றும் பெரும் பணியைச் செய்து வரும் "சமுதாயச் சமையலறை"ச் செயற்றிட்டத்துக்கு உங்களில் பலர் பங்காளிகளாகத் தோள் கொடுத்துத் துணைநிற்பதை இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

அன்னையின் புதல்வர்கள் ஒற்றுமையாக ஒன்றுகூடி மகிழ்ந்திருக்கும் இந்தப் பொன்விழா இனிதே நிறைவுபெற எனது உளம்கனிந்த வாழ்த்துக்கள்.

எமது பல்கலைக்கழக வளாகத்தினுள் அமர்ந்திருந்து அருளாட்சி புரிகின்ற எல்லாம் வல்ல ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் அருட்காட்சம் உங்கள் அனைவரது இல்லத்திலும், உள்ளத்திலும் நிறைந்திருக்க வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

**பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா**
*துணைவேந்தர் – கணிதவியல் பேராசிரியர்*

Prof.S.Srisatkunarajah
B.Sc(Hons) Jaffna, PGDE(Merit) OUSL
Ph.D Heriot - Watt
Professor in Mathematics
Vice Chancellor
University of Jaffna

த.பெ. எண் 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
තැ.පෙ. අංකය 57, තිරුනෙල්වේලි,යාපනය.
**P.O. Box 57, Thirunelvely, Jaffna.**

Telephone : +94 212 222 294
+94 212 222 006
Fax : +94 212 222 294

E-mail : vc-office@univ.jfn.ac.lk
Website : www.jfn.ac.lk



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 7 5/27/2025 8:20:51 AM

எமது இல
මගේ අංකය
My Number

உமது இல
ඔබගේ අංකය
Your Number

යාපනය විශ්ව විද්‍යාලය - ශ්‍රී ලංකාව
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
UNIVERSITY OF JAFFNA - SRI LANKA
කලා පීඨය
கலைப்பீடம்
Faculty of Arts

த.பெ எண்.57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

තැ. පෙ. අංකය 57
තිරුනෙල්වේලි
යාපනය

P.O Box 57,
Thirunelvely,
Jaffna.

தொலைபேசி / Telephone: 021 222 2311, 021 222 3091

ஈ.மெயில் / E.Mail: deanarts@univ.jfn.ac.lk


19.05.2025

உளம் நிறைந்த வாழ்த்துகள்..!

ஈழத்தமிழினத்தின் உச்சநிலை உயர்கல்வி நிறுவனமாகவும் அதன் புலமைத்துவப் பாரம்பரியத்தின் குறியீடாகவும் போற்றப்படும் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம் தமிழர்தம் வரலாற்றில் தனியிடத்தைக் கொண்டிருக்கின்றது.

அதன் நீண்ட கல்விப் பயணத்தின் பேறாக, உலகம் சிறக்கப் பணியாற்றும் ஆயிரக்கணக்கான ஆளுமைகளை தனது விழுதுகளாக உருவாக்கி, ஆழ வேர் கொண்டு தனது தாய்மை மேலிட இன்றும் தளராது இளம் வித்துக்களை கல்விச்செழுமை கொண்டவர்களாக உருவாக்கி வருகின்றது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கலை, விஞ்ஞானம், பொறியியல், விவசாயம், மருத்துவம், தொழில்நுட்பம், முகாமைத்துவம், நுண்கலை வெளிப்பாடுகள் எனத் துறைகள் பலவற்றிலும் தனக்கெனத் தனியிடம் பேணும் பல்கலைக்கழகமாக மாத்திரமன்றி, தமிழ்ச்சமூகத்தின் வழிகாட்டியாகவும் அதன் உணர்வுமையமாகவும் திகழும் கல்வித் தாயவளுக்கு ஐம்பது ஆண்டுகள் நிறைவு என்பதில் பெருமைகொள்ளாதவர்கள் எவரும் இருக்கமுடியாது.

அத்தாயவள் பிள்ளைகளாக உருவாகி, இன்றைய நாட்களில் அவள்தம் சிறப்பை தமது அறிவாலும் அனுபவங்களாலும் புலத்தில் உலகின்முன் உறுதிப்படுத்தி நிற்கும் அத்துணை உறவுகளுக்கும் களத்திலிருந்து அன்புமிக்க வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

நீங்கள் அனைவரும் எட்டியிருக்கும் உயரங்கள், இங்குள்ள மாணவர்கள் அனைவருக்கும் கலங்கரை விளக்காகத் திசைகாட்டும் என்பதில் நிறைந்த நம்பிக்கை எமக்குண்டு. உங்கள் அனைவரதும் இந்த நேயமிகும் நினைவுகூரல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் உங்களுக்குமான உறவுப் பிணைப்பை இன்னமும் வலிதாக்கும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பொன்னகவையைக் கொண்டாடும் இத்தருணத்தில் பிரான்ஸ் தேசத்தில் வாழும் அதன் பழைய மாணவர்களால் முன்னெடுக்கப்படும் இப்பொன்விழா நிகழ்விற்கு கலைப் பீடாதிபதியாக எனது மனம் நிறைந்த வாழ்த்துகளை மீண்டும் தெரிவிப்பதில் பேருவகை அடைகின்றேன்.

S. Raguram

பேராசிரியர் சி. ரகுராம்
கலைப் பீடாதிபதி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 8 5/27/2025 8:20:52 AM

## Université du Sri Lanka – Campus de Jaffna

# LES PIONNIERS 1974/75
# CHEFS DE DÉPARTEMENTS



Assis (de gauche à droite) : Prof. K. Indrapala (Doyen des Sciences Humaines et Chef du Département d'Histoire), Prof. K. Kailasanathakurukkal (Chef du Département de Civilisation Hindoue), M. L.H. Sumanadasa (Vice-Chancelier), Prof. K. Kailasapthy (Président et Chef du Département de Tamoul), Prof. P. Kanagasabapathy (Doyen des Sciences et Chef du Département de Mathématiques et Statistiques), M. K.P.G. Wijyasurendra (Sous-registraire)

Debout (de gauche à droite) : Dr. S. Mageswaran (Chef du Département de Chimie), Prof. V.K. Ganeshalingam (Chef du Département de Zoologie), M. K. Ratnatilake (Trésorier adjoint), M. R.S. Thambiah (Bibliothécaire en chef), Prof. K. Kunaratnam (Chef du Département de Physique)

Absent : Prof. S. Gamlath (Chef du Département de Sinhala)



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 1 5/27/2025 8:20:52 AM

## யாழ்ப்பாண வளாகத்தின் தலைவர்கள் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்கள்



### பேராசிரியர் கே. கைலாசபதி

*ஆகஸ்ட் 1974 – ஜூலை 1977 (தலைவர்)*

*யாழ்ப்பாண வளாகத்தின் முதலாவது தலைவராகப் பேராசிரியர் கே. கைலாசபதி பணியாற்றினார். அவர் இலங்கையின் பேராதெனியாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பின்னர், லேக் ஹவுஸ் நிறுவனத்தில் 'தினகரன்' தமிழ் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் கல்வித்துறையில் சேர்ந்தார். 1968 இல், இங்கிலாந்தின் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் தமிழ் வீரர்களுக்கான பாடல்கள் தொடர்பான தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றார். இவரது வாழ்நாளில் பத்து புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளார்.*



### பேராசிரியர் கே. இந்திரபாலா

*ஆகஸ்ட் 1977 – ஆகஸ்ட் 1977 (தலைவர்)*

*யாழ்ப்பாண வளாகத்தின் மானிடவியல் துறையின் முதல் பீடாதிபதியாக இருந்தார். 1960இல் பேராதெனிய பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் சேர்ந்தார். 1965இல், லண்டன் பல்கலைக்கழகத்தில் "இலங்கையில் திராவிட குடியிருப்புகள் மற்றும் யாழ்நாட்டின் உருவாக்கம்" எனும் தலைப்பில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். இவர் வரலாற்று அறிஞர், தொல்லியலாளர் மற்றும் பல நூல்களை எழுதியவர்.*



### பேராசிரியர் எஸ். வித்தியானந்தன்

*ஆகஸ்ட் 1977 – டிசம்பர் 1978 (தலைவர்)*
*ஜனவரி 1, 1979 – ஜூன் 30, 1988 (முதலாவது துணைவேந்தர்)*

*1944இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். 1950 இல் லண்டனில் உள்ள SOAS இல் "பத்துப்பாட்டு" பற்றிய மொழியியல் ஆய்வுக்காக தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். 1952 இல் பேராதெனியாவில் தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். 1977இல் யாழ்ப்பாண வளாகத் தலைவராக நியமிக்கப்பட்டு, 1979 தொடக்கம் முதலாவது துணைவேந்தராக 1988 வரை பணியாற்றினார்.*



### பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம்

*ஜூலை 1988 – ஆகஸ்ட் 1988*

*1963 இல் பேராதெனியாவில் விலங்கியல் விரிவுரையாளராகப் பணியைத் தொடங்கினார். 1970இல் இங்கிலாந்தின் இம்பீரியல் கல்லூரியில் பூச்சியியல் தொடர்பான ஆராய்ச்சிக்காக தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். 1988இல் குறுகிய காலத்திற்கு துணைவேந்தராக இருந்தார். இவர் விலங்கியல் துறையின் முதல்வராகவும், விஞ்ஞானப் பீடாதிபதியாகவும் இருமுறை பணியாற்றியவர்.*



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 2 5/27/2025 8:20:53 AM

## யாழ்ப்பாண வளாகத்தின் தலைவர்கள் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்கள்



**பேராசிரியர் அ. துரைராசா**

*செப்டம்பர் 1988 – மார்ச் 1994*

*கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் மண்ணியல் பொறியியலில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். இவரது பதவிக்காலத்தில் பொறியியல் மற்றும் விவசாயப்பீடங்களைத் தொடங்க முயற்சித்தார். உள்நாட்டு யுத்தக் காலத்தில், மிகுந்த சிரமங்களின் மத்தியில் யாழ் பல்கலைக் கழகத்தை இயக்கியவர்.*



**பேராசிரியர் கு. குணரத்தினம்**

*ஏப்ரல் 1994 – ஜூலை 1996*

*1958இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பௌதீகவியலில் BSc பட்டம் பெற்றார். 1963 இல் லண்டனில் உள்ள இம்பீரியல் கல்லூரியில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். மேலும் DIC பட்டங்களை பெற்றார். பௌதீகவியல் துறை மற்றும் கணினி விஞ்ஞானத் துறையின் தலைவராகவும் விஞ்ஞானபீடத்தின் பீடாதிபதியாகவும் இருந்தார்.*



**பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை**

*ஜூலை 1996 – மார்ச் 2003*

*1981இல் புவியியல் துறையின் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். 1991 முதல் 1997 வரை கலைப்பீட பீடாதிபதியாக இருந்தவர். அவர் கற்பித்தல் திட்டங்களை மாற்றி, புவியியல் துறையை மேம்படுத்தினார். பின்னர் துணைவேந்தராக 2003 வரை இருந்தார்.*



**பேராசிரியர் எஸ். மோகனதாஸ்**

*மார்ச் 2003 – மார்ச் 2006*

*1971 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இரசாயனவியலில் BSc பட்டம் பெற்றார். 1978இல் ஆஸ்திரேலியாவின் அடிலைட் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். தென்னை ஆராய்ச்சி நிலையம் மற்றும் பனை அபிவிருத்திச் சபை பணியாற்றியவர். விவசாயப்பீடத்தின் பீடாதிபதியாக இருந்தவர். தற்போது வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது வேந்தராக இருக்கிறார்.*



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 3 5/27/2025 8:20:53 AM

## யாழ்ப்பாண வளாகத்தின் தலைவர்கள் மற்றும்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்கள்



**பேராசிரியர் எஸ்.ஆர்.எச். ஹூல்**

*மார்ச் 2006 – ஜூன் 2006*

*1982 இல் அமெரிக்காவின் கார்னேகி மெலன் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். தற்போது அமெரிக்காவின் மிச்சிகன் ஸ்டேட் பல்கலைக்கழகத்தில் மின் மற்றும் கணினிப் பொறியியலின் பேராசிரியராகவுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் குறுகிய காலத்திற்கு துணைவேந்தராக இருந்தார்.*



**பேராசிரியர் ஆர். குமரவடிவேல்**

*ஜூன் 2006 – டிசம்பர் 2007*

*1975இல் இங்கிலாந்தின் பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தில் வெப்பவியக்க வியலில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். பௌதீகவியல் துறையின் நிறுவுனப் பேராசிரியராவார். விஞ்ஞானபீடப் பீடாதி பதியாகவும், பின்னர் துணைவேந்தராகவும் பணியாற்றினார்.*



**பேராசிரியர் என். சண்முகலிங்கம்**

*டிசம்பர் 2007 – மார்ச் 2011.*

*1981 இல் சமூகவியலாளராக யாழ் பல்கலைக்கழகத்தில் பணியைத் தொடங்கினார். பின்னர் B.Ed., MA மற்றும் PhD பட்டங்களைப் பெற்றார். சமூக மற்றும் அரசியல் அறிவியல் துறையின் முதல்வராகவும் இருந்தார்.*



**பேராசிரியர் (திருமதி) வி. அரசரத்தினம்**

*ஏப்ரல் 2011 – ஏப்ரல் 2017*

*சென்னை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களில், முறையே BSc மற்றும் MSc பட்டங்கள் பெற்றார். 1997இல் யாழ் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். உயிர்வேதியியல் துறைத் தலைவராகவும், மருத்துவபீடப் பீடாதிபதியாகவும் பதவிகள் வகித்துள்ளார்.*



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 4 5/27/2025 8:20:53 AM

## யாழ்ப்பாண வளாகத்தின் தலைவர்கள் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்கள்



**பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரன்**

*மே 2017 – மே 2019*

*1982இல் யாழ் பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் BSc பட்டம் பெற்றார். 1991 இல் இங்கிலாந்தின் சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாகவும், பின்னர் துணைவேந்தராகவும் இருந்தார். யாழ் பல்கலைக்கழகத்தில் தனது BSc ஐ கற்றுமுடித்த முதலாவது துணை வேந்தராவர்.*



**பேராசிரியர் க. கந்தசாமி**

*மே 2019 – ஆகஸ்ட் 2020 (தகுதியான அதிகாரியாக நியமிக்கப்பட்டவர்)*

*1973இல் பேராதெனியாவில் பௌதீகவியல் BSc பட்டம் பெற்றார். 1980 இல், இங்கிலாந்தில் உள்ள கீல் பல்கலைக்கழகத்தில் திண்மநிலைப் பௌதிகவியலில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். பல்கலைக் கழகத்தின் முன்னணி உறுப்பினர்களில் ஒருவர்.*



**பேராசிரியர் எஸ். சிறீசற்குணராஜா**

*ஆகஸ்ட் 2020 – இதுவரை*

*1983 இல் யாழ் பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் BSc பட்டம் பெற்றார். 1988, இல் ஸ்கோட்லாந்தின் ஹெரியட்-வாட் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். 2004இல் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் பின்படிப்பு டிப்ளோமா சான்றிதழும் பெற்றார். ஜூலை 2013 முதல் 2016 வரை விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாகவும் இருந்தார். ஆகஸ்ட் 28, 2020இல் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார்.*



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 5 5/27/2025 8:20:53 AM

# பூவரசம் பூக்களின் மாலை

ஓடும் பேருந்தின் கண்ணாடியிலும்
உலைமூடியிலும்
வண்டில் மாட்டின்
சலங்கை கட்டியிருந்தது

இருட்டில் பளபளக்கும்
ஓநாய்களின் கண்கள்
வேலிப் பூவரசில் ஒட்டியிருந்தன

தொழுவத்துப் பசுவின்
பனிக்குடம்
உடைந்திருந்தது

வீசிய கைகளுக்கு சிக்காமல்
காதோரம் சிணுங்கியது சலனம்

நனைந்துபோன
சீமெந்துக் கதிரைகளில்
இன்னுமிருந்தது
மணிப்புறாவின் கால்தடங்கள்

சுமப்பதற்கு யாருமின்றி
மலைவேம்பின்
நிழலில் கிடந்தன
சிலுவைப்பாடுகள்

நிலவில் நனைந்து கிடந்தது காடு
செம்பாட்டுப் புழுதியில் அலசியும்
குதிரைமுகம் விலகவில்லை

உப்புவிளையும் தோள்களையும்
அந்துப்பூச்சிகள் திருடிப்போனதில்
நெற்குதிர்கள் நிறையவில்லை

ஆறுகள் உப்பைத் தின்றன
கிளையிலேயே கிடந்தது வெறுமை
அணில் கொந்திய மாம்பழம்
காற்றில் அலைந்து கிடந்தது

மந்தைகளின் மொச்சையில்
வியர்த்துக் கிடந்தது தெரு
முனையிலிருந்தே மணியடிக்கும்
தபால்காரன் வரவேயில்லை
அவனும்
எங்கோ தொலைந்து போனான்.

- லக்ஷ்மன் குலசிங்கம்



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 6 5/27/2025 8:20:57 AM

# வாழ்க்கை நெடுகிலும் நினைவுகள் தொடரும் பல்கலைக் காலம்

**கிங்ஸ்லி பேர்னாட்**

இலங்கையின் வடமாகாணத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அப்பிராந்தியத்தின் கலாசார சமூக பண்பாடு மற்றும் அரசியல் நிலைப்பாடுகளுடன் ஆழமான பிணைப்பைக் கொண்டிருக்கும் ஒரு சிறந்த வளமாகும்.

1974 ஒக்டோபர் மாதம் 6ம் திகதி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது வளாகமாக திறந்துவைக்கப்பட்ட இந்த நிறுவனம் கலை மற்றும் விஞ்ஞான துறைகள் சார்ந்த கற்கைநெறிகளுடன் உருவானது. அப்போது குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே அங்கு உள்வாங்கப்பட்டிருந்தனர்.

இந்தக் கட்டுரையில் யாழ்ப்பாண வளாகத்தில் இணைந்து கொண்ட எமது முதலாவது அணி மாணவர்கள் எத்தகைய நெருக்கடிகளின் பின்புலத்தில் அரசாங்கத்திடம் கோரிக்கைகளை முன் வைக்க வேண்டியிருந்தது என்பதையும் அதன் வழியாக அப்போதைய இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க இந்தப் பல்கலைக்கழகத்தை நிறுவ வேண்டிய அவசியம் ஏற்படுத்தப் பட்டதையும் குறிப்பிட்டு எழுத விரும்புகிறேன்.

1974ம் ஆண்டின் முற்பகுதியில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வளாகங்களுக்கு மாணவர்கள் உள்வாங்கப் பட்டனர். அப்போது இலங்கையில் ஒரேயொரு பல்கலைக்கழகம் இலங்கைப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் இருந்தது. அதற்கு கொழும்பு, களனி மற்றும் இன்றைக்கு மொறட்டுவை பல்கலைக்கழகம் என்றழைக்கப்படும் கட்டுப்பொத்த போன்ற வளாகங்கள் இருந்தன.

அந்த வருடம் கட்டுப்பொத்த வளாகத்துக்கு தெரிவான மாணவர்களில் 130 பேருக்கான இடப்பற்றாக்குறை ஏற்பட்டதால் அவர்கள் வேறு வளாகங்களுக்கும் வேறு கற்கைநெறிகளுக்கும் செல்லுமாறு கேட்கப்பட்டனர். ஆனால் அதற்காகவும் அவர்கள் அடுத்துவரும் ஆண்டின் உள்நுழைவுக் காலம் வரை பொறுத்திருக்க வேண்டும் எனவும் அரசாங்கம் முடிவு செய்திருந்தது.

இந்த நிலை மாணவர்கள் மத்தியில் ஒருவித விரக்தி நிலையை ஏற்படுத்தியிருந்தது. பல்கலைக்கழக நுழைவுக்காக ஒரு வருடம் காத்திருப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கவில்லை. இந்தப் பின்னணியில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் இருந்து கட்டுப்பொத்த வளாகத்துக்கு தெரிவான மாணவர்கள் சிலர் ஒன்றிணைந்து ஏனைய மாணவர்களுக்கும் அழைப்பு விடுத்தனர். ஒரு பத்திரிகை விளம்பரத்தின் மூலம் இந்த அறிவிப்பை செய்திருந்தார்கள். அவர்களின் அழைப்புக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து அதிக மாணவர்கள் பதிலளித்தார்கள். நாம் எல்லோரும் ஒன்றாகி இன்றைக்கு பல்கலைக்கழகமானியஆணைக்குழு என அழைக்கப்படும் அன்றைய பல்கலைக் கழக செனட் மாளிகையில் கொள்கை வகுப்பாளர்களை சந்தித்தோம். நாம் ஒருவருடத்தை காத்திருப்புக்காக



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 7 5/27/2025 8:21:02 AM

செலவிடாமல் அந்த வருடத்திலேயே பல்கலைக்கழகத்தினுள் நுழைவதற்கான மூலோபாயங்களை ஆராயவேண்டியிருந்தது. அன்றைக்கு ஒரே பல்கலைக் கழகமாக இருந்ததால் துணைவேந்தரும் ஒருவரே. மதிப்புக்குரிய எல். எச். சுமணதாச அப்போது துணைவேந்தராக இருந்தார். அவர் எமது கோரிக்கைக்கு இசைவாய் இருந்தார். பெரும் அக்கறையோடு எமது கல்விக்கான சாத்தியத்தை அணுகினார் எனினும், எல்லா வளாகங்களின் இடங்களும் வளங்களும் நிரப்பப்பட்ட சூழலில் அவராலும் எமக்கு உதவ முடியாமற் போயிற்று.

ஆனாலும் நாம் எமது நம்பிக்கையை கைவிடவில்லை. எமது பிரசதேசத்தை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்தியிருந்த திரு. வாசுதேவ நாணயக்கார, காலஞ்சென்ற திரு. சரத் முத்தெட்டுகம ஆகியோரை தொடர்பு கொண்டு எமது கோரிக்கையை பாராளுமன்றத்தில் ஒலிக்கச் செய்தோம். அதன் பின்னர் பல்வேறு சந்திப்புகள், தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் என்ற பெருமுயற்சிகளின் முடிவில், யாழ்ப்பாணத்தில் ஒரு வளாகத்தை நிறுவவும் அதில் எமக்கான இடத்தை வழங்கவும் ஒப்புக்கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினதும் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியினதும் கட்டடங்கள் மற்றும் வளங்களை பெற்றுக்கொண்டு யாழ்ப்பாண வளாகம் உதயமானது. கோரிக்கை வைத்தவர்களில் 95% ஆனவர்கள் அந்த ஆண்டிலேயே யாழ்ப்பாண வளாகத்தில் இணைந்தோம். முதலாவது மாணவர் அணியாக இணைந்துகொண்ட வரலாற்றின் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது.

யாழ் நோக்கி தபால்கள் கொண்டுவரும் இரவுப் புகைவண்டி, பனைமரங்கள் நிறைந்த மணல் நிலப்பரப்பு என்கிற மனப்படிமம் என்பதைத் தாண்டி யாழ்ப்பாணம் பற்றி வேறெதுவும் எனக்கு தெரிந்திருக்கவில்லை. ஆனால் பட்டம் பெறும் ஆர்வம் மட்டுமே எம்மை யாழ்ப்பாணம் போகத் தூண்டியது. அந்த புதிய சூழலை எதிர்கொள்ளத் தயாரானோம்.

நான் தென்னிலங்கையில் வளர்ந்தவன் என்றாலும் வடக்கின் சமூக பெறுமானங்களையும் கலாசார அடிப்படையையும் புரிந்துகொள்வதற்கு அதிக நாட்கள் எடுத்துக்கொள்ளவில்லை. அவிசாவளையைச் சேர்ந்த எனது தந்தையும் தாயும் ஆசிரியர்களாக இருந்தவர்கள். கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி அதை நோக்கி உழைப்பை கொண்டிருந்த பின்புலத்தில் யாழ்ப்பாணக் கல்விச் சிந்தனையை விளங்கிக் கொள்வதில் சிரமம் ஏதுமிருக்கவில்லை. அதுமட்டுமன்றி இனம், மதம் பற்றிய அச்சங்களும் எனக்கு இருந்ததில்லை.

யாழ்ப்பாணம் வந்த புதிதில் தென்னிலங்கையைச் சேர்ந்த நாம் வெளிநாட்டவர்களாகவே வரவேற்கப் பட்டோம். எமது வளாக மாணவர்கள் மட்டுமன்றி வீதியில் சந்தித்த பொதுமக்களும் அப்படித்தான் எம்மை வரவேற்றார்கள். எமக்கும் வெளியிடத்தில் இருந்து போனவர்களாக எமது நம்பிக்கைகள் சுயமதிப்புடன் அந்த சமூகத்தில் கலந்திருக்கவும் முடிந்தது. யாழ்ப்பாண வாழ்வியல் முறைமைகளிலும் கலாசாரத்திலும் வேருன்றியிருந்த மக்கள் எமது விழுமியங்களை அங்கீகரிக்கவும் மதிக்கவும் கூடிய ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தியிருந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களின் வாழ்க்கை முறையைப் பற்றிப் பேசும் போது அந்த மக்களின் கடின உழைப்



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 8 5/27/2025 8:21:02 AM

பையும் அதன் பின்னால் கட்டப் பட்டிருக்கும் உளவியலையும் பாராட் டாமல் இருக்க முடியாது. அதிகாலை 4 மணிக்கெல்லாம் தமது நிலத்தில் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் விவசாயிகளை பார்க்க முடிந்தது. அதிகாலை 6 மணிக்கெல்லாம் கூட பேராசிரியர்களை சந்தித்து கல்வியில் விளக்கங்களைக் கேட்க முடிந்தது. அது மட்டுமன்றி தென்னிலங்கையர்க ளாக, முற்றிலும் புதியவர்களாக இருந்த எம்மை அந்த மக்கள் ஏற்றுக்கொண்டதும் நெகிழ்வோடு பழகியதும் அந்த மக்களின் மீதான எனது மதிப்பும் மரியாதையும் நாளுக்கு நாள் அதிகரிக்கத் தொடங்கியது.

யாழ் பல்கலைகழகத்தில் கல்விகற்ற நான்கு வருடங்களில் 2 வது வருடத்தில் இருந்து விஞ்ஞானபீட மாணவர் சங்கத்தின் தலைவராக என் சக தோழர்கள் என்னைத் தெரிவுசெய்தனர். தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவராகவும் நான் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டதால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது மாணவர் தலைவராக இருந்த வாய்ப்பும் எனக்கு கிட்டியிருந்தது. இன நல்லிணக்கம் ஆரோக்கியமான நிலையில் இருந்ததால் இவையெல்லாம் சாத்தியப்பட்டிருந்தது .

இன்றைக்கு இன நல்லிணக்கம் பற்றி பலரும் பல ஊடகங்களும் பேசி வருகின்றனர். உரிமைகள் பற்றியே அதிக கருத்துகளை வெளியிடுகிறார்கள். எனினும் பல்வேறு சிறுபான்மை சமூகங்களுடன் வாழ்ந்து கற்றுக்கொண்ட எனது தனிப்பட்ட அனுபவம் என்ன வென்றால் அவர்கள் உரிமைகளைக் கேட்கவில்லை, சிறப்பு நிலைகளை கேட்கவில்லை, மாறாக தம்மையும் சமனானவர்களாக, சக மனிதர்களாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்கிறார்கள். அவர்கள் பிளவுகளை தவிர்த்து ஒன்றிணையவே விரும்புகிறார்கள் என்ப தாகும். நான் பயணத்தின் நடுவில் யாழ்ப்பாணத்தில் சில நிமிடங்கள் தரித்து நின்றுவிட்டு இதைச் சொல்லவில்லை. நான்கு ஆண்டுகள் அந்த மக்களோடு வாழ்ந்துவிட்ட அனுபவத்தில் சொல் கிறேன்.

யாழ்ப்பாணத்தில் எனக்கு கல்வி புகட்டிய பேராசிரியர்கள் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றுதற்குரியவர்கள். அறி வுத் தேடலில் ஆய்வுரீதியிலான அணுகு முறையை கையாள எம்மைத் தூண்டிய அவர்கள் மீது பெருமதிப்பு இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் கல்வி ஒரு சிறப்பு அந்தஸ்தை பெற்றது என்பதை இங்கு பதிவு செய்வது பொருத்தமானது. நாங்கள் மருத்துவமனைக்கு செல்லும் போது அங்கிருக்கும் மருத்துவர்கள் மாணவர்களுக்கு முதலில் சிகிச்சை என முன்னுரிமை கொடுப்பார்கள். இது ஒரு சிறிய எடுத்துக்காட்டு மட்டுமே.

நான் பல்கலைக் கழகத்தில் இருந்த காலத்தை தவிர எமது பல்கலைக்கழகம் சந்தித்துவந்த சவால்களையும் வளர்ச்சி களையும் இங்கே குறிப்பிடாமல் தவிர்க்க முடியாது.

1978ல் உருவாக்கப்பட்ட மருத்துவ பீடம் நாட்டின் சிறந்த மருத்துவக் கல்விப்பீடமாக திகழ்கிறது. படிப்படியாக ஒவ்வொருதுறையாக விரிவு பெற்று 1979ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனித்த பல்கலைக்கழகமாக அங்கீகாரத்தைப் பெற்றது.

1980 களில் விவசாயத்துறையும், பொறி யியல் துறையும் உருவாக்கப்பட்டன. தொடர்ந்து 2009 வரையிலும் இடம்பெற்ற போர்ச்சூழல் எல்லா வகையான நெருக்கடிகளையும் கொடுத்தது. ஆசிரிய வளம் குறைந்தது. பலர் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியிருந்தனர் இருந்த



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 9 5/27/2025 8:21:02 AM

போதும் கல்வி, உட்கட்டமைப்பு என்பவற்றுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் பல்கலைக்கழகம் தொடர்ச்சியாக இயங்கி வந்தமை இதன் சிறப்பம்சமாகும். அத்தோடு இந்த நெருக்கடியான காலத்திலும் தமிழ் மக்களின் அறிவு சார்ந்த ஆய்வுகளுக்கும் கலாசாரத்தை பாதுகாப்பதற்கும் துணை நின்றது. சாமானியர்களாக இருந்த எமக்கு தேசிய ஒளியையும் சுதந்திரத்தையும் கல்வியின் வழியாக வழங்கியது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

பல்கலைக்கழக கல்வியின் தோற்றுவாயாக இருந்த மதிப்பிற்குரிய பெஞ்சமின் டிஸ்ரேலி காமன்ஸ், «ஒரு பல்கலைக்கழகம் கல்வியினூடாக வாழ்க்கைக்குத் தேவையான ஒளி, மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை கொடுக்கும் இடமாக இருக்க வேண்டும்» என்று பரிந்துரைத்தார்.

அந்த கோட்பாட்டின் புரிதலோடு எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியுள்ள பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகளும் வகுப்புவாத பிரிவினைச் சிந்தனைகளை வென்று சாதிப்பார்கள் என்பது உறுதி.

இந்த பொன்விழா மலருக்கான இந்த கட்டுரையை நிறைவு செய்யும் தறுவாயில் எனக்கும் எமது பல்கலைக் கழகத்துக்குமான உணர்வு பூர்வமான இன்னுமொரு விடயத்தை குறிப்பிடாமல் இந்த கட்டுரை நிறைவுபெறாது. என் வாழ்க்கைத் துணையை, என் அன்பு மனைவியை எமது பல்கலைக் கழகத்திலேயே சந்தித்தேன். அவரும் எமது முதலாவது மாணவர் அணியைச் சேர்ந்தவர்.

பொன்விழா ஆண்டில் எமது பல்கலைக் கழகத்தின் கல்விச் சேவையை வியந்து நன்றியறிதலுடன் பாராட்டுகிறேன். மேலும் மேலும் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கொழும்பு வாழ் பழைய மாணவர் சங்கத்தில் இருந்து நாம் எமது கல்வி வேரினை தேடிச் செல்வோம் என நினைக்கிறேன். எங்கள் வழிகாட்டிகளில் பெரும்பாலானோர் அங்கு இல்லை. ஆனால் எமது சகாக்கள் எம்மைச் சந்திப்பார்கள்.

நன்றி.

*கட்டுரை ஆசிரியரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கட்டுரையின் தமிழாக்கம்.*

**கிங்ஸ்லி பேர்னாட் - யாழ் பல்கலைக்கழக முதலாம் அணியிற் பயின்ற இவர், பல்தேசிய கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், வர்த்தக சேம்பர்ஸ் மற்றும் சேவை நிறுவனங்கள் உட்பட அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்த முதல் தொகுதி மாணவர்களில் ஒருவராக எழுத்தாளர் கிங்ஸ்லி பேர்னாட் இருந்தார், குறிப்பாக லயன்ஸ் இன்டர் நேஷனல் - 306 பி 2 இலங்கை மாவட்ட ஆளுநராக 2009-2010 காலப் பகுதியில் நியமிக்கப்பட்டார்.**





A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 10 5/27/2025 8:21:02 AM

# Rôle des anciens élèves dans le développement de l'université et de la communauté

*Professor Nadaraja Sreeharan*

La célébration du 50e anniversaire d'une université ou d'un établissement constitue une étape importante. À l'occasion de ces 50 ans d'existence de l'Université de Jaffna, je voudrais revenir sur certains événements et moments historiques clés qui ont conduit à la création d'une université dans la région nord, à Jaffna.

Le premier événement de ce genre remonte à 200 ans, lorsqu'un groupe de missionnaires américains arriva au Sri Lanka, alors connu sous le nom de Ceylan. Après leur arrivée à Colombo, ils ne s'y installèrent pas et ne se rendirent nulle part ailleurs sur l'île. Ils se dirigèrent directement vers la région tamoule du Nord. Les historiens ont débattu des raisons de ce phénomène. Je suis convaincu que les missionnaires reconnaissaient l'importance de l'éducation et de la santé dans le patrimoine culturel des populations tamoules. Ils furent chaleureusement accueillis par les populations du Nord et, en retour, y établirent plusieurs institutions.



L'un de ces établissements était un institut d'enseignement supérieur à Vaddukoddai, ma ville natale. Ils l'ont baptisé le Séminaire « Batticotta », car ils avaient du mal à prononcer « Vaddukoddai ». Ce séminaire, fondé il y a 200 ans, est devenu plus tard le Jaffna College, puis, en 1974, le premier campus de l'Université de Jaffna.

Ils ont également créé deux établissements de santé à Manipay, dont la toute première école de médecine occidentale d'Asie et un hôpital annexe : le Green Memorial Hospital. Cet hôpital existe toujours aujourd'hui en tant qu'institution à but non lucratif.

En reconnaissance des contributions du révérend Samuel Green à l'enseignement médical et aux soins de santé dans la région, lors de la création de la Faculté de médecine de Jaffna, dans les années 1980, nous avons créé le Prix commémoratif Samuel Green, une récompense prestigieuse décernée au meilleur étudiant de dernière année sur trois ans.

Le deuxième événement historique, moins connu, s'est produit après l'indépendance, dans les années 1950 et 1960. J'étais alors un jeune étudiant en médecine générale



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 11 5/27/2025 8:21:02 AM

et en médecine traditionnelle, et je me souviens très bien de l'appel passionné du peuple tamoul à créer une université pour la communauté tamoule du Sri Lanka. Ce mouvement était connu sous le nom de Mouvement universitaire tamoul. Parmi les figures clés de cette initiative figuraient le révérend père S. J. V. Chelvanayagam et d'éminents universitaires tels que le professeur C. J. Eliezer (mathématicien), le professeur Arasaratnam (historien) et le révérend père Thaninayagam (érudit tamoul), entre autres.

Malheureusement, pour des raisons politiques, ce rêve ne s'est pas réalisé. Mais en 1974, nous avons finalement reçu non pas une université tamoule, mais une université nationale laïque. L'Université de Jaffna n'a cessé de se développer et compte aujourd'hui parmi les plus grandes universités du Sri Lanka. Elle n'égale peut-être pas encore Colombo ou Peradeniya en termes de prestige, mais c'est une institution profondément ancrée.

Le succès de l'université ne réside pas seulement dans sa croissance physique – nouveaux campus et facultés – mais aussi dans vous, les anciens élèves. La véritable mesure du succès d'une université se mesure à la qualité et aux réalisations de ses anciens élèves. Je peux témoigner de mon expérience personnelle. Nombre d'entre vous, y compris d'anciens étudiants en médecine devenus professionnels, et d'autres dans divers domaines, occupent des postes importants et éminents – dans les universités, le secteur de la santé, le monde des affaires, etc.

Ceci m'amène à une remarque personnelle. À l'approche de mes 80 ans, je repense encore avec nostalgie à mon voyage à Jaffna pour occuper la chaire de médecine. La question est maintenant : quelle est la prochaine étape ?

Nous avons réfléchi au passé, mais comment pouvons-nous façonner l'avenir de l'Université de Jaffna ? Plus important encore, quel rôle les anciens élèves peuvent-ils jouer dans ce nouveau chapitre ?

Les anciens élèves de toute université sont une ressource inestimable. On l'oublie souvent. Si l'on examine de nombreuses grandes universités occidentales, il existe une relation formelle entre les anciens élèves et l'université. Voyez ce qui se passe à l'Université d'Oxford ce mois-ci : elle élit un nouveau chancelier, et tous les anciens élèves participent au vote. Cela illustre le rôle essentiel que peuvent jouer les anciens élèves.

Au Sri Lanka, nous ne disposons peut-être pas de telles structures formelles, mais cela ne nous empêche pas d'en faire plus. Je sais que nombre d'entre vous contribuent déjà, comme la Fondation Lift et le groupe des anciens élèves étrangers de la Faculté de médecine de Jaffna, que je connais personnellement. Aussi modestes soient-elles, nos contributions comptent. Et alors que nous célébrons le 50e anniversaire, je vous encourage tous à vous unir pour créer une association mondiale officielle des anciens élèves de l'Université de Jaffna.

Comme le dit le dicton tamoul :

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு – Même la plante la plus fragile gagne en force lorsqu'elle est cueillie.

Unissons-nous Voilà notre défi. Unissons-nous.



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 12 5/27/2025 8:21:02 AM

Deuxièmement, j'ai été heureux d'entendre – et j'en ai discuté avec certains d'entre vous – que se rassembler seul ne suffit pas. Nous devons planifier. Élaborons un plan stratégique. Trop souvent, dans les universités ou les organisations caritatives, nous réalisons de nombreuses petites actions à différents endroits. Mais les efforts modestes et dispersés n'ont pas toujours un impact réel. Pour être véritablement efficaces, nous devons mutualiser nos ressources et nous concentrer sur des activités efficaces à Jaffna.

Les anciens élèves ne peuvent pas y parvenir seuls. Nous devons établir un partenariat formel avec l'Université de Jaffna. J'ai discuté avec le vice-chancelier et d'autres personnes ; ils sont ouverts à cette idée. Mais nous devons montrer notre engagement et notre intérêt.

Je suggère de commencer par un ou deux projets bien choisis, pas plus. Ces projets devraient avoir deux objectifs clairs :

1. *1. Impact sociétal : une université ne peut fonctionner de manière isolée. En collaborant avec l'université, nous devons sélectionner un projet qui réponde aux besoins des communautés défavorisées et améliore leur bien-être.*
2. *2. Visibilité internationale : En tant qu'anciens élèves occupant des postes dans le monde entier, nous pouvons contribuer à renforcer la présence et la réputation internationales de l'Université de Jaffna.*

Mais il ne s'agit pas seulement de ce que nous faisons, mais aussi de la manière dont nous le faisons.diminuer le rôle de chaque groupe d'anciens élèves. C'est l'unité dans la diversité. Chaque faculté peut poursuivre son travail, mais ensemble, nous pouvons accomplir bien plus.

Alors, quel est notre rôle ? En un mot : Donner (கொடுத்தல்).

L'ancien président américain Bill Clinton a écrit un livre intitulé « Donner ». Il y évoque les différentes façons de donner, que ce soit par le biais d'œuvres caritatives ou en tant qu'ancien élève d'université. On pense souvent, à tort, que donner ne concerne que l'argent. Certes, l'argent est important. Mais donner uniquement de l'argent, sans plan, peut créer dépendance et perturbations. Nous en constatons déjà les signes dans notre pays.

Nous devons donner de l'argent avec un but précis. Mais il existe d'autres formes de don : donner de notre temps, partager notre expertise, constituer des équipes collaboratives. Plus important encore, nous devons donner avec amour, compassion et gratitude.

La gratitude est profondément ancrée dans la culture tamoule. Nous avons tant reçu de l'université ; il est temps de donner en retour.

Permettez-moi de conclure par cette réflexion :

Swami Sivananda a dit un jour :

« Donner sans compassion, c'est comme construire un temple sans idole.»

Cela n'a aucun sens. Aucun but.

Donnons donc avec compassion, pour l'amélioration de la société.

De nombreuses organisations de la diaspora accomplissent un excellent travail :



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 13 5/27/2025 8:21:02 AM

associations caritatives, réseaux d'anciens élèves, etc. Des études ont montré que les organisations de la diaspora les plus performantes sont celles qui agissent non seulement comme des êtres humains, mais aussi comme des amphibiens. Autrement dit, elles s'adaptent et se sentent à l'aise aussi bien dans leur pays d'origine que dans leur pays d'accueil.

Pour être efficaces, nous devons être pleinement engagés dans notre pays d'accueil, non seulement sur le plan professionnel ou financier, mais aussi connectés et enracinés. Cela nous donne accès à des financements, à des réseaux et à une crédibilité. Cela nous permet également de donner pour les bonnes raisons : non pas par perte d'identité, mais par conviction.

Nous devons également être attentifs aux personnes sur le terrain. Ce sont elles qui dirigent les institutions et les systèmes. Nous pouvons apporter notre soutien, mais nous devons le faire avec respect et collaboration. J'ai beau être un ancien professeur de médecine, à mon retour, je me consacre à servir. Tel est notre rôle.

Ce ne sont donc pas des conférences ; je m'adresse autant à moi-même qu'à vous. Ce sont des pistes de réflexion pour travailler ensemble à un avenir meilleur pour notre peuple.

En conclusion, je tiens à féliciter les organisateurs de ce merveilleux événement, qui a réuni tant de personnes et mis en valeur la richesse de notre culture à travers la musique, la danse et la convivialité.

* Cet article est basé sur le discours donné par le Professeur Sreeharan au Jubilée d'Or de l'Université de Jaffna, qui s'est déroulé en Angleterre le 30 Novembre 2024.

*Le Professeur Sreeharan fut le professeur fondateur en médecine à la faculté de médeLe Professeur Sreeharan fut le professeur fondateur en médecine à la faculté de médecine de l'Université de Jaffna. Il a joué un rôle clé dans la transformation de l'hôpital de Jaffna en hôpital d'enseignement. Il fut également professeur invité de médecine dans plusieurs établissements prestigieux autour du monde, dont le King's College de Londres. Il a contribué en tant que vice-président senior et directeur médical européen à GlaxoSmithKline (GSK), y dirigeant la recherche et le développement. Le Professeur Sreeharan a obtenu ses diplômes de MBBS et de MD à l'Université du Sri Lanka (Colombo) et son doctorat à l'Université de Leeds (Royaume-Uni). Il a été membre du Royal College of Physicians (Londres, Glasgow et Aberdeen) et a contribué aux conseils d'examen médical au Royaume-Uni et aux États-Unis.*



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 14 5/27/2025 8:21:02 AM

# சமூகத்தினதும் பல்கலைக் கழகத்தினதும் வளர்ச்சியில்

## பழைய மாணவர் அமைப்புகளின் பங்கு*

**பேராசிரியர் நடராஜா சிறீஹரன்**

*** 2024 ஆம் ஆண்டு நொவம்பர் 30ஆம் திகதி லண்டனில் நடைபெற்ற யாழ் பல்கலைக்கழக பொன்விழா நிகழ்வில் பேராசிரியர் சிறீஹரன் வழங்கிய உரையின் எழுத்து வடிவாக்கம்.**

எந்த ஒரு பல்கலைக் கழகத்தினதோ, அல்லது நிறுவனத்தினதோ, 50வது ஆண்டு விழா ஒரு முக்கியமான மைல் கல்லாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 50 ஆண்டு வாழ்க்கையை நாம் கொண்டாடும் இந்நேரத்தில், ஒரு பல்கலைக்கழகம் வடமாகாணத்தில், அதுவும் யாழ்ப்பாணத்தில் உருவாக வழிவகுத்த முக்கியமான வரலாற்று நிகழ்வுகளை பற்றி நினைவுகூர விரும்புகிறேன்.

முதல் நிகழ்வு 200 ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்றது. அமெரிக்க மிஷனரிகள் சிலர் இலங்கையில் வந்து இறங்கினர். அவர்கள் கொழும்பில் தங்கவில்லை, தீவின் வேறு பகுதிகளுக்கும் செல்லவில்லை. பதிலாக, நேராக வடமாநிலத்திற்கே — அதாவது தமிழர் வாழும் பகுதியிற்கே சென்றார்கள். வரலாற்றாசிரியர்கள் இதற்கான காரணங்களைப் பற்றி விவாதித்துள்ளனர். என் நம்பிக்கை என்னவென்றால், அந்த மிஷனரிகள், கல்வி மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை தமிழர்களின் பண்பாட்டு மரபில் அடையாளம் கண்டனர். அவர்களை, வடமாநில மக்கள் மிக்க உவப்புடன் வரவேற்று உபசரிப்பு வழங்கினார்கள், அதற்குப் கைமாறாக, இந்த மிஷனரிகள் பல நிறுவனங்களை வடக்கில் நிறுவினர்.

அந்த நிறுவனங்களில் ஒன்றாக, வட்டுக்கோட்டையில் ஒரு உயர் கல்வி நிறுவனத்தை உருவாக்கினார்கள் — அது எனது பிறந்த ஊராகும். அவர்கள் அதை "பற்றிக்கோட்டா செமினரி" என்று அழைத்தனர், ஏனெனில் "வட்டுக்கோட்டை" என்ற வார்த்தையை உச்சரிக்க அவர்களுக்கு கடினமாக இருந்தது. இந்தச் செமினரி, 200 ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கப்பட்டு, பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரியாக மாறி, இறுதியில் 1974இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் வளாகமாக அமைந்தது.

அவர்கள் மானிப்பாயிலும் இரண்டு மருத்துவ நிறுவனங்களைத் தொடங்கினர். இதில் ஒன்றுதான், ஆசியாவிலேயே முதன்முறையாக உருவாக்கப்பட்ட மேற்கத்திய மருத்துவப் பள்ளியாகும். இதனுடன் சேர்த்து கிரீன் நினைவு மருத்துவமனையையும் நிறுவினர். அந்த மருத்துவமனை இன்று வரை இலாப நோக்கமில்லாத ஒரு நிறுவனமாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

மருத்துவக் கல்வியிலும், சுகாதாரத் துறையிலும் சாமுவேல் கிறீன் (*Samuel Green*) அவர்கள் செய்த பங்களிப்பைப் பாராட்டி, 1980களில் யாழ் மருத்துவப்



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 15 5/27/2025 8:21:02 AM

பீடத்தை ஆரம்பித்தபோது, *Samuel Green Memorial Prize* என்ற விருதை ஏற்படுத்தினோம் — மூன்று ஆண்டுகளில் சிறந்த பெறுபேறு எடுக்கும் மாணவருக்குக் கிடைக்கும் மிகமுக்கியமான விருது இது.

இரண்டாவது வரலாற்று நிகழ்வு, பரவலாக அறியப்படாத ஒன்றாகும். இது சுதந்திரத்திற்குப் பிந்தைய 1950 மற்றும் 60களில் நடைபெற்றது. அந்தக் காலத்தில் நான் ஒரு இளைய க.பொ.த. சாதாரண தர மாணவனாக இருந்தேன். தமிழர்களிடமிருந்து ஒரு பல்கலைக்கழகம் தேவை எனும் உறுதியான கோரிக்கை எழுந்ததை நான் நன்கு நினைவுகொள்கிறேன். இந்த இயக்கம் "தமிழ் பல்கலைக்கழக இயக்கம்" என அழைக்கப்பட்டது. இதில் S. J. V. செல்வநாயகம், கணிதமேதை பேராசிரியர் C. J. எலியேசர், வரலாற்றாளர் பேராசிரியர் அரசரட்ணம், மற்றும் தமிழ் அறிஞர் வணக்கத்துக்குரிய தனிநாயகம் அடிகளார் ஆகியோர் முக்கிய பங்கு வகித்தனர்.

அந்தக் கனவு அரசியல் காரணங்களால் நனவாகவில்லை. எனினும், 1974இல், நாம் ஒரு தமிழ் பல்கலைக்கழகத்தை அடையாத போதிலும், ஒரு தேசிய பல்கலைக்கழகத்தைப் பெற்றோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நாளுக்கு நாள் வளர்ச்சியை அடைந்து, இன்று இலங்கையின் மிகப்பெரிய பல்கலைக்கழகங்களில் ஒன்றாக விளங்குகிறது. கொழும்பு அல்லது பெராதெனியாவின் புகழுடன் ஒப்பிடக் கூடிய அளவில் இல்லாவிட்டாலும், இது ஒரு ஆழமான வேர் கொண்ட நிறுவனமாக திகழ்கின்றது.

பல்கலைக்கழகத்தின் வெற்றியினை அதன் வளாகங்களோ, கட்டிடங்களோ தீர்மானிப்பது இல்லை — அது பழைய மாணவர்களாகிய உங்களின் மூலம் தான் தீர்மானிக்கப்படுகிறது. ஒரு பல்கலைக்கழகத்தின் உண்மையான வெற்றி அதன் பழைய மாணவர்கள் எத்தனை உயர்நிலைகளில் இருக்கின்றனர் என்பதிலேயே தெரிகிறது. எனது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் இதை நான் கூறுகிறேன். பலருக்கு நான் ஆசானாக இருந்திருக்கிறேன் — இன்று அவர்கள் மருத்துவர்களாக, பேராசிரியர்களாக, வணிகவியலாளராக அல்லது பிற துறைகளில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் இருக்கிறார்கள்.

இது என்னை ஒரு தனிப்பட்ட நினைவுக்கு கொண்டு செல்கிறது. எனது 80வது வயதை அணுகும் இந்த நேரத்தில், அந்த 1970களில் யாழ்ப்பாணத்திற்கு வந்து மருத்துவத் துறையின் முதல் நாற்காலியை ஏற்ற அனுபவத்தை நினைவுகூர்கிறேன். இப்போது கேள்வி என்னவென்றால்: அடுத்தது என்ன?

நாம் கடந்த காலத்தைப் பற்றி சிந்தித்தோம் — ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் எதிர்காலத்தை எப்படி வடிவமைக்கலாம்? இன்னும் முக்கியமாக, பழைய மாணவர்கள் அதில் என்ன பங்கு வகிக்கலாம்?

எந்த ஒரு பல்கலைக்கழகத்துக்கும் அதன் பழைய மாணவர்கள் ஒரு மதிப்புமிக்க வளமாக இருக்கிறார்கள். ஆனால் நாம் அதை பெரும்பாலும் கவனிக்கவில்லை. மேலைநாட்டு பல்கலைக்கழகங்களில் பலவற்றில் பழைய மாணவர்களும் பல்கலைக்கழகத்துடன் அதிகாரபூர்வ உறவுகளில் இருக்கின்றனர். உதாரணமாக, இந்த மாதம் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் புதிய துணை வேந்தரைத் தேர்ந்தெடுக்கின்றனர் — அந்த வாக்களிப்பில் பழைய



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 16 5/27/2025 8:21:02 AM

மாணவர்களும் பங்கேற்கின்றனர். இது பழைய மாணவர்களின் பங்கு எவ்வளவு முக்கியமானதென்பதை காட்டுகிறது.

இலங்கையில் இப்படி அதிகாரபூர்வ அமைப்புகள் இல்லாமலிருக்கலாம். ஆனால் அதற்குப் பதிலாக நாம் செய்யக்கூடிய விடயங்களை நாம் மேற்கொள்ளவேண்டும். *LIFT Foundation*, மருத்துவப் பீட பழைய மாணவர் குழு போன்ற பலர் ஏற்கனவே பங்களித்து வருகின்றீர்கள். எவ்வளவு சிறிய பங்களிப்பாக இருந்தாலும், அதற்கென்று ஒரு தாக்கம் இருக்கிறது. 50வது ஆண்டு விழாவை முன்னிட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கான உலகளாவிய பழைய மாணவர் சங்கத்தை உருவாக்கும் பணியை நாம் தொடக்கவேண்டும். இது ஒற்றுமை வழியாக பல்துறை ஒத்துழைப்பு — ஒவ்வொரு பீடமும் தனது பணி தொடரலாம், ஆனால், நாம் ஒன்றாக சேர்ந்தால் , மேலும் பலம் சேர்க்கலாம்.

தமிழ் பழமொழி ஒன்று சொல்லுகிறது: "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு." அதுவே நம் சவால். ஒன்றிணைவோம்.

இரண்டாவதாக, பலர் கூறியது போல, ஒன்று கூடுவது மட்டும் போதாது — திட்டமிட வேண்டும். நம் பங்களிப்புகள் சிறு சிறு முயற்சிகளாக இல்லாமல், ஒரு திட்டத்தின் கீழ், ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமையவேண்டும். இதில் நம் பல்கலைக்கழகத்துடன் நம் பழைய மாணவர்கள் ஒரு திட்டமிட்ட ஒத்துழைப்பை உருவாக்க வேண்டும்.

இது ஆரம்பத்தில், ஒன்று அல்லது இரண்டு திட்டங்களாக இருக்கட்டும். அவை இரண்டு நோக்கங்களை கொண்டிருக்கவேண்டும்:

சமுதாயத் தாக்கம் – பல்கலைக்கழகம் தனிமையில் செயல்பட முடியாது. சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்யும் திட்டங்களைத் தேர்வு செய்யவேண்டும்.

சர்வதேச புகழ் – உலகம் முழுவதும் உள்ள பழைய மாணவர்கள் பல்கலைக் கழகத்தின் சர்வதேச கண்ணியத்தை உயர்த்த முடியும்.

ஆனால், நாம் என்ன செய்கிறோம் என்பதைக் காட்டிலும், எப்படி செய்கிறோம் என்பதுதான் முக்கியம்.

நமது பங்களிப்பு ஒரே சொல்லில் சொல்வதானால்: கொடுத்தல்.

முன்னாள் அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் *Giving* என்ற புத்தகத்தில், பல்வேறு வகையான கொடுத்தலை பற்றி எழுதுகிறார் — பணம் மட்டுமல்ல. நேரம், அறிவு, அனுபவம், ஒத்துழைப்பு — இவை அனைத்தும் கொடுத்தல். ஆனால் அந்த கொடுத்தல், அன்போடு, கருணையோடு, நன்றியோடு இருக்கவேண்டும்.

நன்றி என்பது தமிழ் பண்பாட்டில் ஆழமாக பதியப்பட்டிருக்கிறது. நம் பல்கலைக்கழகத்திடம் நாம் பெற்றது பல — இப்போது திருப்பிக்கொடுக்க நேரம் வந்திருக்கிறது.

அறிஞர் சிவானந்தர் கூறியது போல:

"கருணை இல்லாமல் கொடுத்தல், உருவம் இல்லாத கோவிலைக் கட்டுவது போல."

அதற்கு அர்த்தமில்லை. நோக்கம் இல்லை. நாம் கொடுக்கவேண்டும் — கருணையோடு, நலனுக்காக.

பல்வேறு தமிழ் அமைப்புகள் உலகெங்



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 17 5/27/2025 8:21:02 AM

கிலும் சிறப்பாக செயற் படுகின்றன. ஆய்வுகள் கூறுவதாவது, இடம்பெயர்ந்த சமூக அமைப்புகளில், வெற்றிகரமாக செயற்படுபவை, "உருவ மாறக்கூடிய வையாக" இருக்கின்றன என்பதாகும். அதாவது, தாயகத்திலும், புலம் பெயர்ந்து தாங்கள் வாழும் நாட்டிலும் ஒத்துழைக்கக்கூடியவையாக இருப்பவையே வெற்றி பெறுபவை. அதுவே நமக்கான வழி.

அதே சமயம், நாம் எமது தாயகத்தில் செயற்படுவோரின் உணர்வுகளையும் மதிக்கவேண்டும். அவர்கள் நிறுவனங் களை இயக்குகின்றனர். நாம் அவர்களுக்கு உதவலாம் — ஆனால் மரியாதையோடு, ஒத்துழைப்போடு செயற்பட வேண்டும்.

இவை சிந்திக்கவேண்டிய எண்ணங்கள். நாம் ஒன்றிணைந்து, நம் மக்களின் எதிர்காலத்திற்கு பணியாற்றுவோம்.

முடிவில், இந்நிகழ்வை சிறப்பாக ஒழுங்கமைத்த அனைத்து அமைப்பாளர் களுக்கும் வாழ்த்துகள் — இசை, நடனம், நட்பு மூலம் நம் பண்பாட்டை வெளிப்படுத்தியதற்காக நன்றிகள்.

**பேராசிரியர் சிறீஹரன்,**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஆரம்ப நிறுவுநற் பேராசிரியராகப் பணியாற்றியவர். யாழ்ப்பாண மருத்துவமனையை ஒரு போதனா மருத்துவமனையாக மாற்றுவதில் அவர் முக்கிய பங்கு வகித்தார். உலகளாவிய ரீதியிலுள்ள பல பிரசித்திபெற்ற மருத்துவக்கல்வி நிறுவனங்களிலும், குறிப்பாக லண்டனிலுள்ள கிங்ஸ் கல்லூரியிலும், வருகைதருப் பேராசிரியராக பணியாற்றி வருகின்றார்.**

**பேராசிரியர் சிறீஹரன், GlaxoSmithKline (GSK) நிறுவனத்தில் மூத்த துணைத் தலைவராகவும், ஐரோப்பிய மருத்துவப் பணிப்பாளராகவும் பணியாற்றியதுடன், அந்த நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளை வழிநடத்தியவர். அவர் தனது MBBS மற்றும் MD பட்டங்களை இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் (கொழும்பு வளாகம்) PhD பட்டத்தை இங்கிலாந்தின் லீட்ஸ் பல்கலைக்கழகத்திலும் பெற்றார்.**



**மேலும், இவர் மருத்துவர்களுக்கான றோயல் கல்லூரி (லண்டன், கிளாஸ்கோ மற்றும் அபெர்டீனில்) உறுப்பினராகவும், இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் உள்ள மருத்துவப் பரீட்சைச் சபைகளிலும் பணியாற்றியுள்ளார்.**



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 18 5/27/2025 8:21:02 AM

# Trying to visit a time loop, while searching for “book” inside a book about a book, with the help of early Tamil scholars

***Dr Jean-Luc Chevillard***
*HTL (Paris) & Tamilex (Hamburg)*
*https://www.tamilex.uni-hamburg.de/team/chevillard.html*



The love of “embedded languages”,[1] such as Classical Tamil —செந்தமிழ்—, Latin, Ancient Greek, Vedic Sanskrit, is something that progressively grows on one, through practice, just like the love of music comes through the practice of music and the love of poetry comes through the practice of poetry. It creates its own reward through the mental vision expansion which it provides. An embedded language is a language which exists on top of another language with which it can historically be related or not, and some kind of mental time-sharing is performed by the concerned language users, in a manner which will only be suggested here, by providing a few snippet views. The end result is that the group of those who have been initiated have access to another man-made universe, which is a kind of time-loop, periodically visited in the case of செந்தமிழ் by the current continuators of the activity of ancient புலவர். Inside that time loop, which is historically multi-layered, one can find some of the past creations of Tamil poets, preserved

1 I am importing the technical expression „embedded language” from the usage of the computer scientist Michael KAY, as seen on p. 39 of the 2008 book XSLT 2.0 and XPath 2.0 Programmer’s Reference (4th edition). Kay uses it for explaining the relationship between XPath, the “embedded language”, on the one hand, and XSLT or XQuery, the “host language” on the other hand. My point is that by embedding in the context of an artistic performance —or of a religious ritual— a statement in செந்தமிழ் inside a context where ordinary Tamil —as “host language”— is used, one accesses another plane of human activity, which has its own rules. And this is how the time loop, which stands outside normal time, is created.



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 19 5/27/2025 8:21:03 AM

in anthologies, some of them such as the எட்டுத் தொகை being the most ancient layer, and others such as the தேவாரம், divided into ஏழு திருமுறை, belonging to a more recent layer. One also finds texts such as the தொல்காப்பியம் —an ancient grammatical treatise centred on poetry— or such as the திவாகரம் —an ancient poetical vocabulary— which must have been progressively created as "guides" for the students who wanted to become புலவர்.

Although I was not born in Tamil Nadu or in Sri Lanka, it was the effect of my lucky star at birth that I would meet at some point with that thing of beauty which I have sometimes called the Tamil "triglossia", where we see the native masters of ordinary Tamil diglossia (இரட்டை வழக்கு) add to that capacity the conquest of செந்தமிழ், as an effect of their untiring முயற்சி. And since that encounter took place in Tamil Nadu, from 1981 onwards, forty-four years ago, with the help of many friends and teachers, who spoke with me, read books with me, and sometimes even gave me some of their books — this has been for me the occasion for countless discoveries and an inexhaustible source of intellectual stimulations—I have thought that a good way of contributing to this magazine issue, celebrating the Jubilee of Jaffna university and its intellectual life, was to revisit the several occasions where I had received help from books prepared by Tamil scholars from Sri Lanka, such as is the case with the one whose cover appears in Figure 1, where we read the well-known name of ஆறுமுக நாவலர் (1822-1879). Similarly, I shall evoke later a book composed by another Sri Lankan Tamil scholar சீ. கணேசையர் (1878-1958)—See Figure 2.

Being born in 1956, I belong to a generation which believes in the value of physical books, although my relationship with them is probably not identical to the relationship of earlier generations, because I have seen in my lifetime the birth of the Internet and of E-mail, the rise of the PC, the appearance of the CD and its relative decline, the creation of Unicode and many other things, which make today's present.

One of the concrete consequences of my encounter with the Tamil universe is that there are several places in two countries on this continent, namely France and Germany, where I am surrounded by many Tamil books, which I have progressively accumulated in the course of 44 years, and that their number still regularly increases. I also have in many hard disks, inside folders generally identified by the string "DiBo" —for «Digital Books»— collections of .jpg, .png, .tiff and other types of image files, as well as .pdf files, which all result from the act of photographing or scanning printed books or manuscripts —they are another form of books— this operation


Jean-Luc Chevillard
உ
கணபதி துணை.
தொல்காப்பியம்.
சொல்லதிகாரம்.
இது
வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த
சேனாவரையருரையோடு
யாழ்ப்பாணத்து நல்லூர்
ஆறுமுகநாவலரவர்களால்
பலபிரதிருபங்களைக்கொண்டு பரிசோதித்தபடி,
சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலைத்
தருமபரிபாலகர்
ஸ்ரீமதி பொ. பவானியம்மையவர்களால்
சென்னபட்டணம்
வித்தியாநுபாலனயந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.
இரண்டாம் பதிப்பு.
ஸ்ரீமுக வருஷம் தைமீ.
இதன் விலை ரூபா-உ.
1934.
(Registered Copyright.)

*Figure 1: ஆறுமுக நாவலர் 1934 edition of சேனாவரையம்*



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 20 5/27/2025 8:21:03 AM

having been made by me or by colleagues or friends with whom I was in touch, or in the context of some research projects in which I was involved.

Using digital books has of course many advantages, the first coming to mind being probably the absence of weight for a traveller, because the reasonable 23kg limit which flight companies impose on most suitcases is quickly reached if one carries physical books. But the weight constraint is probably not the most compelling reason for digitizing books if one is passionate about books and does not like to read on screen. The most compelling reasons are preservation —avoiding the putting of a precious original into danger— and universal sharing, and I shall try to illustrate them in what follows, selecting an appropriate entry point, among many possibilities, inside the நூலகம் which is my memory.

This being a short essay, I shall limit my evocation of books in the Tamil universe —alias தமிழ் கூறும் நல்லுலகம்— to a single book, but even that is not so easy to accomplish because the book which I have in mind is in fact a "book about a book", as is already announced in my title, and also because I have several editions of it —see Figure 1 and Figure 2— and the 1938 one by சி. கணேசையர் has so many footnotes —or குறிப்புரை— and is preceded by so many introductory pages that it could be called "a book about a book about a book". And finally, because using English for talking about a Tamil "time loop" is bound to introduce an unavoidable bias, since the smallest English-Tamil / Tamil-English dictionary which I possess —Basic Tamil Dictionary / அடிப்படைத் தமிழ் அகராதி, LOCKWOOD * லாக்வுட், 1994, Madras— gives two translations for "Book", which are நூல் and புத்தகம்/புஸ்தகம், it has appeared to me that a suitably restricted topic for this short article might to see what is found when searching for occurrences of புத்தகம் or of நூல் inside the "book about a book" which I have evoked but not yet named, but even that turns out to be too vast a topic and I shall have to choose which of the search results I can briefly present.

The natural entry point in my case is the content of a book, a text called சேனாவரையம், represented inside my library by several physical books, one of which —see Figure 1— was sufficiently small —114mm by 205 mm— and light —282g— to be carried inside my pocket almost every day for several years. That text was the topic of my Ph.D. in linguistics, defended in December 1990, which consisted in studying and translating it in French. It was composed by சேனாவரையர் —henceforth C— who seems to have lived in the 13th and the 14th century. It is a detailed commentary of the சொல்லதிகாரம், second book of the famous


ஓம்
தொல்காப்பிய முனிவரால் இயற்றப்பட்ட
தொல்காப்பியம்
சொல்லதிகார மூலமும்
சேனாவரையருரையும்

இவை
தமிழ் வித்துவான்
புன்னாலைக்கட்டுவன், பிரமஸ்ரீ சி. கணேசையர்
எழுதிய
உரைவிளக்கக் குறிப்புக்களுடன்
"ஈழகேசரி" அதிபதி
நா. பொன்னையா அவர்களால்
தமது
சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில்
பதிக்கப்பட்டன
உரிமை பதிவு] 1938 [விலை ரூபா 5

*Figure 2: கணேசையர் 1938 edition of சேனாவரையம்*



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 21 5/27/2025 8:21:03 AM



*Figure 3: the நாண் controlling the leaves of a திவாகரம் MS (BnF indien 239, Paris)*

தொல்காப்பியம் and this is why we can call it "a book about a book". Because of that, my Ph.D. thesis also contains a complete French translation of the தொல்காப்பியம் சொல்லதிகாரம் —henceforth TC.

Let us now move forward and try to find references to புத்தகம் and to நூல் inside the சேனாவரையம், which is a text of ca. 60,000 word-forms. More precisely, those "words-forms" are the occurrences of ca. 8,000 distinct strings, which means that a sizeable share of them occur many times, whereas others are rare. Counting the words —or dictionary entries— is of course more difficult because a word such as நூல், which occurs 25 times inside the C, appears under several case forms, such as நூல், நூலை, நூலான், நூலின், etc, and the variety of forms seen is increased by the effect of sandhi rules. We shall start with the word which has the smaller number of occurrences, namely புத்தகம், which is seen three times. We are for instance told by C, when he comments on TC413, a சூத்திரம் dealing with case compounds, that the compound form *சாத்தன் புத்தகம்* can be glossed by the explicit form *சாத்தனது புத்தகம்* "The book of *சாத்தன்*", where the genitive form *சாத்தனது* is used.

After that simple example, we find inside the commentary by C to TC449, a much more sophisticated one, which involves a riddle in the form of a four-line stanza, composed in the நேரிசை வெண்பா meter. This is a riddle —or *பிசி*— because the poem —using *உயர்திணை* forms— seems to describe women but is in fact a physical description of what C reveals to be a *புத்தகம்* "book", for the sake of those who would not have guessed. The poem is provided in (1), below, with a separation between metrical lines, following the presentation seen in the 1938 edition by சி. கணேசையர் —see Figure 2— which contains many explanatory footnotes and is more bulky —145 mm by 220mm— and three times heavier —829g— than the 1934 edition mentioned before.

(1) எழுதுவரிக் கோலத்தா ரீவார்க் குரியார்
தொழுதிமைக் கண்ணணைந்த தோட்டார் — முழுதகலா
நாணிற் செறிந்தார் நலங்கிள்ளி நாடோறும்
பேணற் கமைந்தார் பெரிது [C's illustration for line 4 in TC449]

The reason for C to provide this verse is that he needs to provide an illustration for the fourth line in TC449. That line is provided in (2), below:

(2) மெய்ந்நிலை மயக்கி னாஅ குநவு(ம்) "And those which occur (ஆஅகுந) on the basis of a confusion (*மயக்கின்*) with respect to the ontological status (மெய்ந்நிலை) [TC449, line 4]

It is not so easy to elegantly translate the poem into English because English lacks the natural distinction which Tamil makes between *உயர்திணை* (U) "They-U" and *அஃறிணை* (A) "They-A". The expression கோலத்தார் "they-U have a beautiful configu-



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 22 5/27/2025 8:21:03 AM

ration", which is deceivingly referring to women must be mentally transformed into "they-A have a beautiful configuration" in order to be applied to a book (புத்தகம்). Of course, both the terms which specify கோலத்தார் namely வரி ("lines") and எழுது ("which are painted/written") can equally be applied to women and to books. Time does not allow me to do full justice to the poem, but I must at least point out that through the passage முழுதகலா // நாணிற் செறிந்தார், where நாண் is either the "bashfulness" of women or the "string" which keeps together the leaves —see Figure 3— we recognize easily the type of "book" which is described in this poem, namely a palm-leaf manuscript.

எ ழு து வ ரி க ெ க ா ல த த ா ரீ வ ா ா க கு
ரி ய ா ா ெ த ா ழு தி ை ம க க ண ண ஊ ந
த ெ த ா ட ட ா ா மு ழு த க ல ா ந ா ணி ற
ெ ச றி ந த ா ா ந ல ங கி ள ளி ந ா ெ ட ா
று ம ெ ப ண ற க ை ம ந த ா ா ெ ப ரி து

*Figure 4: Facsimilé of what verse (1) would look like in a palm-leaf MS*

As already indicated, I have in my library several copies of C's commentary, but I should add to that I have also worked on palm-leaf MS, and that it is important to emphasize that the existence of printed books for many of the works of ancient Tamil literature does not suppress the need to preserve the ancient artefacts preserved in many libraries around the world. Establishing the text of those ancient works is very much a work in progress, which must be continued, and it was certainly the wish of the scholars who made the first editions, that their work would be continued and improved upon. It is however quite a challenge to read the content of a manuscript, because the writing system which we see in them is quite different from the modern writing system seen in books printed in 2025. I shall illustrate this by displaying now —see Figure 4— a facsimile[2] of what the poem shown in (1) would like like in a palm-leaf manuscript. The main difficulties are:

- The fact that no புள்ளி is used
- The fact that கே is not distinguished from கெ, etc, because there is only one type of கொம்பு.
- The fact that ர and ர் are not distinguished from the symbol —called கால்— which distinguishes க from கா, ச from சா, etc

I must now leave the reader in the middle of the field, wondering how scholars in the past could make use of such an ambiguous system. The answer lies probably in the fact that much of their knowledge was oral, and that written knowledge was secundary to that oral knowledge. Imagining their knowledge transmission methods is a difficult but worthy challenge and it is the only way to maintain our access to the time loop in which their minds operated. "We must run as fast as we can, just to stay in place", as Lewis Carrol once wrote.

2 I have discussed some of the arguments for making facsimile transcriptions in a presentation made in February 2024 during the கணித்தமிழ்மாநாடு 24 organized by the Tamil Virtual Academy. My presentation "For the sake of future Tamil philologists/ புத்தம்புது புலவர்களுக்காக" is available online at: https://shs.hal.science/halshs-04455964v1



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 23 5/27/2025 8:21:03 AM

# தமிழ் – ஏளனமா இல்லை ஏற்றமா?

**மதுரமணி இராசையா**

'நூறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது தமிழ்' என்று தமிழறிஞராகக் கருதப்படுகின்ற தேவநேய பாவனார் கூறியிருப்பார். இதற்கு மேலாக 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன்தோன்றிய மூத்தகுடி' என்று அறிஞர் அண்ணா போன்றோர் மேடைகளில் முழங்கியிருப்பார்கள். இன்றைய அறிவியல் ஆய்வின்படி மனிதன் – ஹோமோ சப்பியன் சப்பியனின் வயது *300,000* வருடங்கள்தான். மனித நாகரீகத்தின் தொடக்க நிகழ்வான விவசாயம் ஆரம்பித்தது கிட்டத்தட்ட *12,000* ஆண்டுகளுக்கு முன்னர்தான். மொழி, கலை, கலாசாரம் என்பன அதற்குப் பிந்தியனவாகவே இருக்க முடியும். அதனால் இன்றைய நம் சிறார்களுக்கு மேற்சொல்லப்பட்ட தற்பெருமிதங்கள் மிகவும் கேலிக்குரியதாக அமையலாம். எளிய தமிழில் சொன்னால் இவை அண்டப் புளுகுகள் ஆகும். பொதுவாக இன்றைய தமிழுலகம், குறிப்பாக ஈழத்தவர்கள் மிக அற்ப விடயங்களையே மிக மேலானதென்று தற்புகழ்ச்சி அடைபவர்கள் என்பது உண்மைக்குப் புறம்பானது அன்று. அப்படியாயின் தமிழ் சிறப்பானது இல்லையா என்ற கேள்விக்கு மிகச் சுருக்கமாகப் பதில்கூற முனைகிறது இக் கட்டுரை.

அண்மையில் வெளிவந்த மனித வரலாற்றைச் சுருக்கமாகவும், சிறப்பாகவும் சொல்கின்ற நூலாகப் புகழ்பெற்ற வரலாற்றுப் பேராசிரியர் யுவல்கராரி (*Yuval Harari*) அவர்களின் 'சப்பியன்' '*Sapiens*' என்ற புத்தகத்தைக் கூற முடியும். அவ்வாசிரியரின் ஆய்வின்படி, ஐரோப்பியரின் ஆசிய வருகைக்கு முன்பு, உலகின் மூன்றில் இரண்டு பங்கு பொருளாதாரத்தைத் தாங்கி நின்றவர்கள் இந்தியரும், சீனருமே. அந்த நாட்களில் உலகின் பல நாடுகளுடன் கடல் வாணிபத்தில் கோலோங்கியவர்கள் தமிழரும் சீனரும் ஆவர். சீனருக்கும் தமிழருக்குமான தொன்று தொட்ட உறவைக் காட்டுவதற்காகவோ என்னவோ சீன அதிபர் 'சீ ஜின்பிங்' இந்திய அதிபர் மோடியைச் சந்திக்க இந்தியா வந்தபோது தமிழகத்தின் மகாபலிபுரத்தைத் தேர்ந்தெடுத்திருந்தார். தமிழகம், கேரளம், இலங்கை போன்ற நாடுகளில் காணப்படுகின்ற சீனக் கல்வெட்டுக்களிலுள்ள தமிழ் குறிப்புக்கள் இவ் உறவினை வலுப்படுத்தும் சான்றுகளாக இருக்கின்றன. மாவோ காலத்திலிருந்து இன்றுவரை சீன வானொலியில் தமிழ் சேவை இருக்கின்றமையையும் குறிப்பிடலாம்.

உலகின் இன்றைய பொருளாதாரத்தை நோக்கும்போது இந்தியாவின் பொருளாதார வளரச்சியானது மிகவும் குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் (*GDP*) கருத்தில் கொண்டால் அதாவது மாநில வாரியாகவும், தனியொரு இந்தியரின் பங்களிப்பாகவும் எண்ணும்போது



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 24 5/27/2025 8:21:03 AM

தமிழ்நாடே முதலிடத்தில் இன்றும் இருக்கிறது – (*GDP Contribution/ Population*). இந்தியப் பொருளாதாரத்தைத் தாங்கி நிற்பதில் தமிழர் முதன்நிலை வகிக்கிறார்கள். இந்தியாவின் பெருமைக் குரிய துறைகளில் ஒன்றான விண்வெளி ஆராய்ச்சித் துறையில் தமிழ் நாட்டின் பங்களிப்பைக் கூறத்தேவையில்லை. குக்கிராமங்களின் அரச பாடசாலை களில் கல்வி பயின்ற பல தமிழர்கள் இஸ்ரோ (*ISRO*) விற்கு தலைமை தாங்குகின்றமையும் நிலவின் முக்கி யத்தை மீட்டெடுத்துள்ள அதில் நீர் இருக்கையின் கண்டுபிடிப்பானது மயில்சாமி அண்ணாத்துரை அவர்கள் தலைமையில் நிகழ்ந்தமை யாவும் தமிழ்நாட்டுக் கல்வியின் தரத்தை உயர்த்திப் பிடித்துக் காட்டுகின்றன. இவை எல்லாவற்றுக்கும் மகுடமாக இந்தியாவின் அறிவியலில் நோபல் பரிசுகளை வென்ற நான்கு அறிவியலாளர்களில் (*Scientists*) மூவர் தமிழ்நாட்டில் பிறந்தவர்களாக இருக் கிறார்கள். ஒரு பெங்காலி ஊடக வியலாளர் இதை "இந்தியாவின் மூளை வளத்தில் முக்கால் பங்கை தமிழ்நாடு பிரதிபலிக்கிறது" எனக் கூறியிருக்கிறார். உலகில் யாருமே சளைத்தவர்கள் அல்ல; நாமும் கூடத்தான் . . .

முழுமையான ஒரு மொழிக்கு திட்டமான இலக்கணம், செறிவான இலக்கியம் இருக்கும். அதற்கு எழுத்து வடிவம் அவசியமாகும். இந்தியாவைப் பொறுத்தவரையில் வடமொழியானது மொழிக்குரிய இயல்புகளைக் கொண்டி ருந்ததோடு அது வலிமையானோரின் மொழியாகவும் இருந்ததால் தமிழ் இந்தியாவின் மூலமொழியாகக் கருதப்பட்டதோடு, தமிழ் உட்பட அனைத்து மொழிகளும் வடமொழி வழிவந்ததாகச் சொல்லப்பட்டது. அத்தோடு மேற்குலக மூலமொழிகளில் முக்கியமான இலத்தீனுக்கும் அதன் வளர்ச்சியில் குறிப்பாக இலக்கணத்துக்கு பங்களிப்பு வழங்கியிருக்கிறது. இதனால் இலத்தீன் மொழி வந்த ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஸ், இத்தாலி, இறஸ்சியன் உட்பட அனேக ஐரோப்பிய மொழிகள் 'இந்தோ ஐரோப்பிய மொழிகள்' (*Indo European Languages*) எனப்படுகின்றன. இவற்றால் சில ஆண்டுகளுக்கு முன்புவரை வடமொழியே முதன்முதலில் தோன்றிய மொழியென ஏற்றுக்கொள்ளப்பட்டது.




கீழடியில் கண்டெடுக்கப்பட்ட தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட ஓடுகள்



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 25 5/27/2025 8:21:03 AM

அதன் தொன்மைக்குச் சான்றாக அசோக மன்னனின் பிரமி எழுத்துக்களாலான கல்வெட்டுக்கள் கருத்தில் கொள்ளப்பட்டன. 1856ஆம் ஆண்டு றொபேட் கால்வெல் *(Robert Carwell)* அவர்கள் வெளியிட்ட 'திராவிட மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம்' என்ற ஆய்வு நூல் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்றவற்றின் மொழிநடை ஒத்ததாகவும் அவை ஆரிய மொழிகளான வடமொழி, மராட்டி, குஜராத்தி, இந்தி, பஞ்சாப் போன்றவற்றின் மொழிநடையிலிருந்து வேறுபட்டிருப்பதையும் நிறுவிக் காட்டினார். இதுவே திராவிட மொழிகளின் அடையாளத்தை உலகுக்குச் சான்றுகளோடு தெரிவித்த முதல் நிகழ்வாகக் கொள்ளமுடியும். இதன் பின்பு தமிழும் வடமொழியும் 'எது சிறப்பானது' என்ற தொடச்சியான சர்ச்சைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. வடமொழி கடவுளின் மொழி தமிழ் கீழோரின் மொழியென வடநாட்டாரும், வடமொழி புரட்டுமொழி, தமிழ் மக்களது மொழி என்று தமிழர்களும் தொடர்ந்து மோதிக்கொண்டேயிருந்தனர்.

இந்தியாவின் தொன்மையான நாகரீகம் சிந்துவெளி நாகரீகம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அதில் ஆய்வு செய்த ஜோன் மார்சல் *(John Marshall)* உள்ளிட்ட மேற்குலக ஆய்வாளர்களால் அது ஆரிய நாகரீகமாக இருக்க முடியாது என்று விளக்கப்பட்டிருந்தாலும் இந்திய அரசானது அதை நிராகரித்ததோடு மட்டுமன்றி அந்த ஆய்வின் தொடர்ச்சியையும் நிறுத்திவிட்டது. அது கற்பனைக் கதைகளின் சான்றுகளைத் தேடி தொல்பொருளாய்வுக்கு ஒதுக்கும் நிதியின் பெரும்பகுதியை விரயமாக்கிக்

### நோபல் பரிசுபெற்ற தமிழர்கள்



சீ. வீ. ராமன்



சந்திரசேகர் சுப்ரமணியம்



வெங்கட்ராமன் இராமகிருஷ்ணன்



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 26 5/27/2025 8:21:04 AM

கொண்டிருக்கிறது. இந்த வகையில் கீழடியிலும் அகழாய்வில் ஈடுபட்டு அப்படியான சான்றுகள் எதுவும் கிடைக்காத்தால் அதை இடைநிறுத்தி விட்டது. அங்கே கிடைத்த சில தொன்மங்கள் தமிழறிஞர்களின் கவனத்துக்கு வந்ததால், தமிழ்நாட்டு அரசின் உதவியோடு அவர்கள் நீதி மன்றில் வழக்காடி நிறுத்திவைத்த அகழ்வாய்வை அமர்நாத் இரமகிருஸ்ணன் தலைமையில் தொடர்ந்தார்கள்.

2016ஆம் ஆண்டு தமிழுக்கு மிக முக்கியமான ஆண்டாகும். கீழடி அகழ்வு ஆய்வின் விளைவு தமிழை அரியணையில் ஏற்றிய ஆண்டு இது. கீழடியில் கிடைத்த புதைபொருள்கள் சங்க இலக்கியங்களில் கூறப்பட்ட வாழ்வியலை எடுத்தியம்பின. அது மட்டுமன்றி அதிலே கிடைத்த பானை ஓடுகளில் தமிழியால் எழுதப்பட்டிருந்த சொற்கள் தமிழ்ச் சொற்களாகவும் அந்தத் தமிழியின் வயது அசோக கல்வெட்டிலிருந்த பிரமி எழுத்துக்களைவிட நூற்றாண்டுகளுக்கு முந்தியனவாகவும் காணப்பட்டுள்ளதால் தமிழ்தான் வடமொழியை விட பழைமையான மொழியென்பது நிரூபணமாகியிருக்கிறது.

வடமொழி இலக்கியங்கள் பெரும்பாலும் வழிபாட்டு முறைகளை விளக்குவனவாயிருக்கின்றன. அதன் மனித வாழ்வியலைச் சொல்லும் 'மனு சாத்திரம்' நாகரீக உலகால் அதாவது அறிவியல் சார்ந்த உலகால் ஏற்றுக் கொள்ள முடியாததாய் இருக்கின்றது. அதே நேரத்தில் தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலானவை மனித வாழ்வியலையும் அறத்தையும் வலுயுறுத்துகின்றன. இன்று உலகின் பல நாடுகளின் கவனத்தை ஈர்த்த திருக்குறள் எம் முன்னோர் தந்த விலையுயர்ந்த சொத்து. அதன் பெரும்பகுதி இன்றைய நாகரீக உலகாலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய அறத்தை வலியுறுத்தி நிற்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எண்மானத் *(digital)* தொழில்நுட்பம் போன்று பெரிய தகவல்களை இரு வரிகளில் பொதிந்து வைத்துத் தந்துள்ளார் வள்ளுவர். பெண்களை சமையலறையில் உலகமே வைத்திருந்த காலத்தில் தமிழ்ப்பெண் அறிஞர்கள் இருபத்தியேழுக்கும் மேல் இலக்கியப் படைப்பாளிகளாக இருந்திருக்கிறார்கள் என்றால் நம் முன்னோரின் வாழ்வியலின் மகிமை எவ்வளவென்று புரிந்திருக்கும். சாதாரண பாமரருக்கும் புரியக்கூடிய அறத்தை விளக்கும் பல நூல்களை ஔவை தந்திருக்கிறார்.

இன்று பல உலகத் தலைவர்களால் உரைக்கப்படும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் பாட்டு உலகை வியக்க வைத்திருக்கிறது. அந்தக் காலத்தில் 50 மைல் தூரமே கடக்க முடியாத தூரமாக இருந்தபோது உலகிலுள்ள அனைவரையும் உறவினராகக் கொண்ட மனித நேயத்தின் உச்சத்தினை வலியுறுத்துகின்ற செய்யுள் அது. எம் முன்னோரின் மனிதநேயத்துக்கு மெருகூட்டும் கண்டுபிடிப்பு அண்மையில் நிகழ்ந்திருக்கிறது. சிவகலையில் கண்டெடுக்கப்பட்ட இரும்புக் கருவிகள், இரும்பு ஆயுதங்கள், இரும்பு பிரித்தெடுக்கும் உலைகள் போன்றன உலக வரலாற்றை மீள எழுதச் செய்துள்ளன. இதற்கு முன் துருக்கி நாட்டில்தான் கி.மு. 1800 ஆண்டளவில்



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 27 5/27/2025 8:21:04 AM

இரும்புக் காலம் தொடங்கியதாகக் கொள்ளப்பட்டது. சிவகலை ஆய்வானது இக்காலத்தை கி.மு. 3345இற்குப் பின் தள்ளி தமிழகமே இரும்புக் காலத்தைத் தொடக்கி வைத்ததாக நிறுவுகிறது. இந்தக் கண்டுபிடிப்பும் நம் முன் னோரது அறத்தின் செழுமைக்கு மேலும் வலுவூட்டுகின்றது. 5000 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பினால் ஆயுதம் செய்தவர்கள், பல நாடுகளுக்கு சென்று வாணிபம் புரிந்தவர்கள் எல்லா மக்களையும் உறவினராகக் கொண்டவர்களே அன்றி, அவர்களை ஆக்கிரமிக்க முயலவில்லை. இதனையே பூங்குன்றனார் தன் ஒரே ஒரு பாட்டில் பதிவுசெய்துள்ளார்.

கீழடியில் கிடைத்த எழுத்துருக்களில் பெரும்பாலானவை சிந்துவெளி எழுத்துக் களுடன் ஒத்துப்போகின்றன. சிந்துவெளி நாகரீகத்தின் காலம் (கிட்டத்தட்ட கி.மு. 3000) ஆரியர் இந்தியாவுக்கு முதன் முதல் வந்த காலத்துக்கு (கி.மு. 1500) மிகவும் முந்தியது. அப்படியாயின் திராவிட நாகரீகம்தானா சிந்துவெளி? இதை நிறுவ வேண்டியவர்கள் நம் இளைய தலைமுறையினர். குறிப்பாகப் புலம்பெயர்ந்துள்ள இளைய தமிழர்கள். நீங்கள் அனேகம்பேர் கமலகாசனின் 'ஹேராம்' திரைப்படத்தைப் பார்த்திருப் பீர்கள். அத்திரைப்படத்தில் ஏறத்தாழ 5 நிமிடங்களுக்குக் காட்டப்படுகின்ற சிந்துவெளி அகழ்வாராய்ச்சிக் காட்சிக்கு அத் திரைப்படத்தின் நிதியில் பெரும் பாகத்தைச் செலவழித்திருந்தார்கள். அந்த அகழாய்வை அரசு நிறுத்துகிறது. அப்போது சாருகாசன் 'ஐயாயிர மாண்டுகளுக்கு முன்பே பாப்பாவுக்குப் பாவை தந்த நாகரீகம்' என்று குமுறுவார். 'ஐயாயிரம் வருஷமாய் இங்குதானே இருக்கிறது. திரும்ப வருவோம்' என்று சாருகாசனுக்கு ஆறுதல் கூறுவதுபோல் நாம் திரும்பவும் அதை ஆய்வு செய்ய வேண்டும் என்பதை நாசூக்காகக் கூறியிருப்பார் கமலகாசன். நம் முன்னோர்கள் விட்டுச் சென்ற பல புதையல்கள் இன்னும் அமிழ்ந்திருக்கின்றன. அவற்றை மீட்டு நம் முன்னோர்களுக்குச் சளைத்தவர்கள் அல்ல நாமென்று நம் இளையவர்கள் நிச்சயமாக நிரூபிப்பார்களாக.

**மதுரமணி இராசையா, 1986 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் BSc பட்டம் பெற்றார்; அமெரிக்காவில் அறிவியல் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். மதுரமணி LIFT அறக்கட்டளையின் நிறுவன உறுப்பினராக உள்ளார், இவர் தற்போது கனடாவில் வசிக்கிறார்.**





A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 28 5/27/2025 8:21:04 AM

# Tamil et Français: deux identités, une seule personne

Je suis né en France. J'ai toujours vécu ici. J'ai grandi dans un environnement français, avec l'école de la République, la langue française comme langue principale, les références culturelles de la société dans laquelle je suis plongé tous les jours. C'est ici que je me suis construit, c'est ici que j'ai appris à parler, à penser, à me comporter. À ce niveau-là, il n'y a pas de doute : je suis français. À 100 %. Et je le revendique.

Mais ça, ce n'est qu'une partie de moi.

Parce qu'à la maison, il y avait aussi un autre univers. À la maison, il y avait la langue tamil, les habitudes différentes, les valeurs transmises par mes parents, les coutumes, les traditions. Il y avait le respect envers les aînés, les plats traditionnels qu'on ne retrouvait pas à la cantine, les films tamils qui tournaient à la télé, les fêtes religieuses qu'on célébrait avec la famille ou la communauté. Et tout ça, ça n'a jamais disparu. Même si parfois, j'étais plus ou moins dedans, c'est resté là, comme un fil qui me relie à mes origines.

Et c'est là qu'il est important de le dire : je ne suis pas "entre deux cultures". Je suis les deux. Je ne suis pas à moitié français et à moitié tamil. Je suis à 100 % les deux. C'est cette double identité qui fait de moi la personne que je suis aujourd'hui, et je n'ai pas à choisir entre les deux. Les deux me définissent. Être tamil, être français, ce n'est pas contradictoire. C'est une richesse. C'est ma force.

Quand j'étais petit, je sentais bien qu'il y avait des différences. Parfois, je ne pouvais pas vraiment les nommer, mais je les vivais. À l'école, mes amis parlaient de ce qu'ils faisaient à la maison, de la manière dont ils parlaient avec leurs parents, des choses qu'ils avaient le droit de faire. Et moi, souvent, je ne me reconnaissais pas là-dedans. Chez moi, ce n'était pas pareil. Les horaires étaient différents. La façon de parler aussi. Le rapport aux parents, à l'autorité, à la religion, tout ça n'était pas pareil.

Et au début, je me posais des questions. Est-ce que c'est moi qui suis "à côté" ? Est-ce que je suis trop "différent" ? Avec le temps, j'ai compris que non. Je n'étais pas à côté. J'étais simplement dans une autre réalité. Une réalité où il faut apprendre à jongler entre deux logiques, deux mondes. Et ce n'est pas facile tous les jours, c'est vrai. Mais ça m'a appris à m'adapter, à prendre du recul, à mieux comprendre les autres. À être plus attentif à la différence.

Quand j'étais plus jeune, je n'étais pas vraiment investi dans la culture tamil. Je connaissais certaines choses, bien sûr, mais je n'y prêtais pas trop attention. C'était là, en fond, un peu comme une bande-son



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 29 5/27/2025 8:21:04 AM

que tu entends tous les jours sans forcément l'écouter. Je savais que c'était important pour mes parents, je participais aux fêtes ou aux traditions quand il fallait, mais je ne me sentais pas forcément connecté.

Et puis, petit à petit, les choses ont changé. Ça ne s'est pas fait en un jour, ni d'un coup. C'est venu doucement, au fil des rencontres, des discussions, des événements. Quand je suis arrivé à la fac, j'ai commencé à fréquenter des gens qui me ressemblaient un peu plus, qui partageaient cette même identité entre ici et ailleurs. Et je ne sais pas pourquoi, mais ça a réveillé quelque chose. Comme si, en voyant d'autres jeunes tamils fiers de leur culture, j'avais eu envie, moi aussi, de m'en rapprocher vraiment.

Depuis, je m'y suis reconnecté. J'écoute de la musique tamil, je regarde des films que je n'aurais jamais pris le temps de voir avant. J'ai redécouvert des fêtes que je connaissais à peine. Et surtout, j'ai commencé à comprendre ce que cette culture pouvait m'apporter : une profondeur, une richesse, une histoire, une identité forte. Ce n'est pas juste un folklore. C'est quelque chose qui peut vraiment nous ancrer.

Aujourd'hui, je peux le dire : j'aime cette culture. J'aime ses couleurs, ses sons, ses valeurs. J'aime la générosité des fêtes, la chaleur humaine, le respect des anciens, le sens de la famille, même si parfois, tout n'est pas simple à concilier avec la société d'ici.

Il y a aussi des choses dans la culture tamil que j'aime profondément… mais que j'ai parfois du mal à expliquer à ceux qui ne la connaissent pas. Certaines traditions, comme les cérémonies de puberté ou les rituels religieux, peuvent paraître "bizarres" ou "exotiques" aux yeux des autres. Et ce n'est pas toujours facile d'en parler. Pas parce que j'en ai honte, mais parce que les mots manquent pour faire comprendre l'importance symbolique, émotionnelle, spirituelle de tout ça.

Quand tu vis entre deux cultures, tu dois souvent jouer le rôle de "traducteur". Tu expliques à tes amis français pourquoi cette cérémonie a lieu, ce qu'elle signifie. Et tu expliques parfois à tes parents certains codes français qu'ils ne comprennent pas toujours. Tu te retrouves à faire le lien. Et parfois, ça fatigue. Mais souvent, ça t'apprend beaucoup.

Aujourd'hui, avec un peu plus de recul, je vois ma double culture comme une force. Même si ça m'a parfois mis dans des situations compliquées, même si j'ai dû apprendre à me situer, à me comprendre… je n'échangerais ça pour rien au monde.

Être à la fois tamil et français, ce n'est pas un tiraillement. C'est une richesse. Ça m'a appris à voir le monde sous plusieurs angles, à être plus ouvert, plus attentif. Et surtout, ça m'a donné une identité solide, pas toujours facile à porter, mais belle à construire.

Je tiens également à remercier la France pour les nombreuses opportunités qu'elle m'a offertes, et pour celles qu'elle m'offre encore aujourd'hui. Grâce à ce pays, j'ai eu accès à une éducation, à des ressources, et à un environnement qui m'ont permis de



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 30 5/27/2025 8:21:04 AM

grandir, de m'épanouir, et de me réaliser. La France m'a permis d'ouvrir des portes, d'aller au-delà de ce que mes parents pouvaient imaginer. J'ai appris ici, non seulement la langue, mais aussi une vision du monde, un sens du collectif, une capacité à me remettre en question, à m'ouvrir aux autres.

Je remercie aussi mes origines tamils, pour les racines solides qu'elles m'ont données. Le Tamil, ma langue, ma culture, mon histoire… Ces racines sont précieuses. Elles m'ancrent, me rappellent d'où je viens et ce qui m'a forgé. Elles m'ont appris l'importance du respect, de la famille, du travail et de la persévérance. Grâce à ces racines, je suis celui que je suis aujourd'hui, fier de mes origines et de ma culture. Et encore aujourd'hui, je redécouvre, chaque jour, la richesse de ces origines, et je me sens toujours aussi reconnaissant envers mes deux héritages.

Je suis tamil et français, et c'est ça qui fait mon identité. Je ne suis pas les deux par moitié. Je suis les deux à part égale, fièrement, sans conflit, mais avec un profond respect pour ce que chaque culture m'a apporté. Ma place est ici, entre ces deux mondes, et j'en suis fier. Je suis à la fois français, avec ce que cela représente pour moi, et tamil , avec les racines et l'histoire que cela implique. Ces deux identités m'enrichissent chaque jour, et je m'engage à les vivre pleinement, sans jamais devoir faire un choix.

Le Tamil, c'est moi. Le Français, c'est moi. Les deux, ensemble, c'est mon identité. Et j'en suis fier.



***THEVAGNANAM Rabezan***
***Étudiant en licence de Sciences de l'ingénieur***
***Sorbonne Université***





A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 31 5/27/2025 8:21:04 AM

# பிரான்சில் தமிழர்கள்: ஒரு சுருக்கமான வரலாறு



**சிவா சின்னப்பொடி**

உலகளாவிய புலம்பெயர்வு சமூகங்களில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்துள்ள தமிழ் புலம்பெயர் சமூகம், பிரான்சிலும் ஒரு முக்கியமான அங்கமாகத் திகழ்கிறது. இந்தியாவில் உள்ள தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்கள், இலங்கையைச் சேர்ந்தவர்கள் மற்றும் பிரான்சின் வெளிநாட்டுப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனப் பல்வேறு பூர்வீகங்களைக் கொண்ட 550,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் பிரான்சில் வசிக்கின்றனர்.[1] பிரான்சின் *réunion* தீவில் மட்டும் சுமார் 220,000 தமிழ் வம்சாவளியினர் உள்ளனர்.[1] பிரான்சில் வாழும் தமிழர்களின் வரலாற்றை சுருக்கமாகவும் அதே நேரத்தில் விரிவாகவும் எடுத்துரைப்பதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். இந்த ஆய்வில், தமிழர்களின் ஆரம்பகால குடிபெயர்வு, பல்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்த அவர்களின் குடியேற்ற அலைகள், அவர்கள் பிரான்சில் குடியேறிய முறைகள், அவர்களின் கலாசாரப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள், சமூக-பொருளாதார ஒருங்கிணைப்பு மற்றும் பிரான்சில் அவர்கள் சந்தித்த முக்கியமான வரலாற்று நிகழ்வுகள் போன்ற முக்கிய கருப்பொருள்கள் கணக்கிலெடுக்கப்பட்டுள்ளன.

பிரான்சில் வாழும் தமிழர்கள் பல்வேறு புவியியல் இருப்பிடங்களிலிருந்து வந்தவர்கள் என்பது கவனிக்கத்தக்கது. ஒவ்வொரு தமிழ் சமூக குழுவினரும் பிரான்சுடனான தனித்துவமான வரலாற்றுப் பாதையையும், குடியேற்றத்திற்கான காரணங்களையும், வருகைக்குப் பிந்தைய சமூக-பொருளாதார நிலைமைகளையும் கொண்டுள்ளனர். இந்தப் பன்முகத்தன்மையைப் புரிந்துகொள்வது பிரான்சில் உள்ள தமிழ் புலம்பெயர் சமூகத்தைப் பற்றிய ஒரு நுணுக்கமான கண்ணோட்டத்தைப் பெற அவசியமாகும். மேலும், இந்தியாவின் சில பகுதிகளிலும் பிரான்சின் வெளிநாட்டுப் பிரதேசங்களிலும் பிரெஞ்சு காலனித்துவம் நீண்ட காலமாக இருந்தது, இது பிற்காலங்களில் தழிழர்கள் பிரான்சுக்குக் குடியேறுவதற்கு முன்பே அவர்களுக்குப் பிரான்சுடனான தொடர்புகளை ஏற்படுத்தியது. இந்த முந்தைய தொடர்புகள் சிலருக்கு குடியேற்றத்தின் ஆரம்ப கட்டங்களை எளிதாக்கியது. பிரான்சின் கடல் கடந்த மாவட்டங்களான *réunion* தீவு,



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 32 5/27/2025 8:21:04 AM

மார்டினிக் குவாட்டலூப், பிரெஞ்சு கயானா முதலான பல பிரதேசங்களில் ஏற்கனவே உள்ள தமிழ் சமூகங்களின் இருப்பு, பிரான்சுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான நீண்டகால உறவை எடுத்துக்காட்டுகிறது.

## பிரெஞ்சு பிரதேசங்களில் தமிழர்களின் ஆரம்பகால வருகை

## பிரெஞ்சு காலனித்துவ இந்தியா:

*17ஆம் நூற்றாண்டு முதலே பிரான்சு இந்தியாவில் சில பகுதிகளை காலனியாக வைத்திருந்தது. இதில் குறிப்பாக புதுச்சேரி ஒரு முக்கியமான வணிக மையமாக விளங்கியது.[2] இந்த பிரெஞ்சு ஆதிக்கத்தின்போது, புதுச்சேரியைச் சேர்ந்த பல தமிழர்கள் பிரெஞ்சு அரசாங்கத்தின் நிர்வாக அமைப்பில் இணைந்து பணியாற்றினர். இவர்களில் சிலர் ஆரம்ப காலத்திலேயே பிரான்சுக்குக் குடியேறத் தொடங்கினர்.[1] பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியின் செயல்பாடுகளும், தொழிலாளர்களாகத் தமிழர்களை பிரான்சுக்கும் reunion னுக்கும் அனுப்பியதும் குறிப்பிடத்தக்கது. 1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னரும், பிரான்சு தனது சில பகுதிகளைத் தக்கவைத்துக்கொண்டது. ஆனால், 1954ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தத்தின்படி பிரெஞ்சுப் பகுதிகளில் வசித்தவர்களுக்கு பிரெஞ்சு அல்லது இந்திய குடியுரிமையைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அப்போது, பலர் பிரெஞ்சு குடியுரிமையைத் தேர்ந்தெடுத்து பிரான்சுக்கு, குறிப்பாக பாரிசுக்குக் குடிபெயர்ந்தனர்.[2] இந்த ஆரம்பகால குடியேற்ற அலை, பிற்காலங்களில் வந்த அகதிகள் உட்பட மற்ற குடியேற்றக்காரர்களுடன் ஒப்பிடும்போது வேறுபட்ட சமூக-பொருளாதார பின்புலத்தையும் ஒருங்கிணைப்பு அனுபவத்தையும் கொண்டிருந்தது. பிரெஞ்சு நிர்வாகத்துடனான அவர்களின் பரிச்சயம் மற்றும் பிரெஞ்சு மொழி அறிவு ஆகியவை பிரான்சில் வேலைவாய்ப்பு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் அவர்களுக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தது*

## பிரெஞ்சு வெளிநாட்டுப் பிரதேசங்கள்

*இந்த பிரதேசங்களில் தமிழர்கள் 17ஆம் நூற்றாண்டு முதலே குடியேறத் தொடங்கினர். Réunion னில், குறிப்பாக, கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக தமிழர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் புதுச்சேரியிலிருந்துகொண்டுவரப்பட்ட னர்.[1] 1848ஆம் ஆண்டு அடிமை முறை ஒழிக்கப்பட்ட பின்னர், தோட்ட உரிமையாளர்களுக்குத் தொடர்ந்து தொழிலாளர்கள் தேவைப்பட்டதால், புதுச்சேரியிலிருந்து அதிக எண்ணிக்கையில் தமிழர்கள் வரவழைக்கப்பட்டனர்.[11] Réunion னில் தமிழ் தொழிலாளர்கள் "மால்பார்கள்" என்று அழைக்கப்பட்டனர்.[3] இன்று Reunion னில்*

**சிவா சின்னப்பொடி என்று அறியப்பட்ட மூத்த ஊடகவியலாளர், சிவநேசமூர்த்தி சின்னப்பொடி சமூக செயற்பாட்டாளரும் ஆவார். அவரது கட்டுரைகள் பல நூலுருப் பெற்றிருக்கின்றன. புலம்பெயர் தமிழர்களின் குறிப்பாக பிரான்ஸ் நாட்டில் தமிழ்மக்களின் வாழ்வியல் விடயங்களை ஆவணப்படுத்தும் அவரது செயற்பாடுகள் பெருத்த வரவேற்பை பெற்றவை.**



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 33 5/27/2025 8:21:04 AM

கணிசமான தமிழ் மக்கள் தொகை உள்ளது. அவர்கள் பிரெஞ்சு சமூகத்துடன் ஒருங்கிணைந்துவிட்டதால், அவர்களின் அடுத்த தலைமுறையினரிடையே தமிழ் மொழி பயன்பாடு குறைந்து பிராந்தியமயமாக்கப்பட்ட பிரெஞ்சு மொழியே (கிரேயோல் ) முக்கிய மொழியாக உள்ளது. *Réunion* னில் உள்ள பெரிய தமிழ் மக்கள் தொகை, "மால்பார்கள்" என்ற தனித்துவமான அடையாளத்தையும், சில கலாசார ஒருங்கிணைப்பையும் (மொழி இழப்பு, கிறிஸ்தவ மதமாற்றம்) கொண்டுள்ளது. இது பிரான்சின் பல்வேறு சூழல்களில் தமிழ் குடியேற்றம் மற்றும் ஒருங்கிணைப்பின் மாறுபட்ட விளைவுகளை எடுத்துக்காட்டுகிறது. *Réunion* னில் தமிழர்கள் பிரெஞ்சு குடிமக்களாகத் தொடர்வது, பிரான்சின் பெரு நிலப்பரப்பில் உள்ள புலம்பெயர் சமூகங்கள் எதிர்கொள்ளும் குடியுரிமை சிக்கல்களிலிருந்து வேறுபடுகிறது. இது பிரான்சின் வெளிநாட்டுப் பிரதேசங்களுக்கான அணுகுமுறையைச் சுட்டிக்காட்டுகிறது.[4]

## பிரான்சின் முக்கிய நிலப்பரப்பிற்கு முதல் குடியேற்ற அலை

முக்கிய நிலப்பரப்பான பிரான்சுக்கு வந்த முதல் குடியேற்றக்காரர்கள் பெரும்பாலும் இந்தியாவில் இருந்த முன்னாள் பிரெஞ்சுப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அவர்களில் பலர் புதுச்சேரியில் பிரெஞ்சு அரசாங்கத்தில் பணியாற்றிய நடுத்தர வகுப்பினராக இருந்தனர். *1954*ஆம் ஆண்டு புதுச்சேரி இந்தியாவுடன் இணைக்கப்பட்ட பிறகு, பிரெஞ்சு குடியுரிமையைத் தேர்ந்தெடுத்தவர்கள் பிரான்சுக்குக் குடிபெயர்ந்தனர்.[2] இந்த ஆரம்பகால குடியேற்றக்காரர்கள் பெரும்பாலும் சிறந்த பிரெஞ்சு மொழித் திறன்களைக் கொண்டிருந்ததால், அவர்களுக்கு வேலை கிடைப்பது எளிதாக இருந்தது.[2] சிலர் கல்வி அல்லது தொழில் வாய்ப்புகளைத் தேடியும் வந்தனர்.[2]

பிரெஞ்சு இந்தியாவிலிருந்து வந்த ஆரம்பகால குடியேற்றக்காரர்களின் மொழித் திறன், பிரெஞ்சு தொழிலாளர் சந்தை மற்றும் சமூகத்தில் அவர்கள் ஒருங்கிணைவதற்கு உதவியது. பிற்காலங்களில் வந்த மொழித் தடைகளை எதிர்கொண்ட குடியேற்றக்காரர்களிடமிருந்து அவர்கள் வேறுபட்டனர். புதுச்சேரியிலிருந்து நிகழ்ந்த குடியேற்ற முறைகள், காலனித்துவ உறவுகளின் நீடித்த தாக்கத்தையும், தேசியம் மற்றும் வசிப்பிடம் தொடர்பான தனிநபர்களின் தேர்வுகளையும் காட்டுகின்றன.

## இலங்கைத் தமிழ் அகதிகளின் வருகை

*1983*ஆம் ஆண்டு இலங்கையில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, பிரான்சுக்கு இலங்கைத் தமிழர்களின் வருகை கணிசமாக அதிகரித்தது.[1] வன்முறை, துன்புறுத்தல் மற்றும் உள்நாட்டுப் போரிலிருந்து தப்பிக்கும் நோக்கில் அவர்கள் பிரான்சுக்கு அகதிகளாக வந்தனர்.[1] அந்த காலகட்டத்தில் பிரான்சின் குடியேற்றக் கொள்கைகள் ஒப்பீட்டளவில் சாதகமாக இருந்ததால், பலர் அங்கு தஞ்சம் புகுந்தனர்.[5] *1990* களில் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்தது. இறுதியில் முன்னாள் பிரெஞ்சு இந்தியாவிலிருந்து வந்தவர்களை விட இலங்கை தமிழர்கள் அதிகமாகினர்.[1] இவர்கள் மொழித் தடைகள் மற்றும் தகுதி இருந்தும் பொருத்தமான வேலைகளைக் கண்டுபிடிப்பதில் சிரமம் போன்ற பல சவால்களை எதிர்கொண்டனர்.[2]

இந்த நிகழ்வு பிரான்சில் உள்ள தமிழ் சமூகத்தின் கலவையையும் பண்புகளையும்



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 34 5/27/2025 8:21:04 AM

அடிப்படையில் மாற்றியது. பிரான்சுக்கு முதலில் வந்த இலங்கை அகதிகள், ஆரம்பகால குடியேற்றக்காரர்களை (புதுச்சேரி) விட அதிக ஒருங்கிணைப்பு சவால்களை எதிர்கொண்டனர். பிரெஞ்சு மொழித் திறன் கொண்ட புதுச்சேரி குடியேற்றக்காரர்களுக்கும் (மொழித் தடைகளை எதிர்கொண்ட இலங்கை அகதிகளுக்கும் இடையிலான ஒருங்கிணைப்பு அனுபவங்களின் வேறுபாடு, ஒரு புதிய சமூகத்தில் வெற்றிகரமாக ஒருங்கிணைவதற்கு தமிழ் மொழியைத் தண்டி பிரெஞ்சு மொழித் திறனின் முக்கிய பங்கை வகித்தது.[2] இந்த ஒப்பீடு ஒரே புலம்பெயர் சமூகத்திற்குள் உள்ள வெவ்வேறு குடியேற்றக் குழுக்களின் சமூக-பொருளாதார விளைவுகளைப் பாதிக்கும் ஒரு முக்கிய விடயத்தை எடுத்துக்காட்டுகிறது. இது இலங்கை அகதிகள் போன்ற யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாகப் பிரான்சுக்கு புலம்பெயர்ந்து வந்த மக்களுக்கு மொழித் தேர்வின் அவசியத்தை உணர்த்துகிறது.

## பிரான்சில் குடியேற்றம் மற்றும் சமூக உருவாக்கம்

பிரான்சில் தமிழ் மக்கள் தொகை பெரும்பாலும் பாரிஸ் பிராந்தியத்தில் குவிந்துள்ளது.[1] பாரிசின் 10வது வட்டாரத்தில் உள்ள லா சாப்பல் பகுதியைச் சுற்றி அமைந்துள்ள "(Little jaffna)" குட்டி யாழ்ப்பாணம் என்ற தமிழ் பகுதி உருவானது முக்கியத்துவம் வாய்ந்தது.[1] இந்த பகுதி தமிழ் வணிகங்கள், உணவகங்கள், கடைகள் மற்றும் கலாசார நடவடிக்கைகளின் மையமாக மாறியது.[!] இந்த மையங்கள் உருவாகுவதில் சமூக வலைப்பின்னல்கள் மற்றும் சங்கங்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.[6] இந்த பகுதிகளில் தமிழ் ஊடகங்களும் (செய்தித்தாள்கள், வானொலி நிலையங்கள்) உள்ளன.[6]

"குட்டி யாழ்ப்பாணம் உருவானது, புலம்பெயர் சமூகங்கள் இனக்குழுமப் பகுதிகளை உருவாக்கும் போக்கைக் காட்டுகிறது. இவை கலாசாரப் பாதுகாப்பு, சமூக ஆதரவு மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கான முக்கிய இடங்களாகச் செயல்படுகின்றன. இந்தச் செறிவு கலாசார நடைமுறைகளைப் பராமரிக்கவும், புதிதாக வந்தவர்களுக்கு ஒரு சமூக உணர்வை வழங்கவும், இன தொழில் முனைவோர் வாய்ப்புகளை உருவாக்கவும் உதவுகிறது. புலம்பெயர் சமூகத்தின் அடையாளத்தை வடிவமைப்பதில் இடஞ்சார்ந்த செறிவின் பங்கை இது எடுத்துக்காட்டுகிறது. பாரிஸ் முழுவதும் ஆரம்பத்தில் சிதறிக்கிடந்த தமிழர்கள், பின்னர் ஒரு மையப்படுத்தப்பட்ட சமூகத்தை உருவாக்கியதன் பின்னல் அவர்களது கடின உழைப்பும் சமூக அக்கறையும் இருந்தது.

## கலாசார அடையாளம் மற்றும் பாதுகாப்பு

பிரான்சில் உள்ள தமிழ் புலம்பெயர் சமூகம் தங்கள் மொழி (தமிழ்), மதம் (இந்து மற்றும் கிறிஸ்தவம்) மற்றும் கலாசார மரபுகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இளைய தலைமுறையினருக்கு தமிழ்மொழி மற்றும் கலாசாரத்தை கற்பிப்பதற்காக வார இறுதிப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன.[1]

பிரான்சில் தமிழ்க் கல்வி இன்னும் முழுமையாக அரசால் அங்கீகரிக்கப்படவில்லை என்றாலும், புலம்பெயர்ந்தோர் சமூகத்தின் முயற்சிகள் மற்றும் சில கல்வி நிறுவனங்களின் ஆதரவுடன் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. தமிழ்ச் சோலை போன்ற



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 35 5/27/2025 8:21:04 AM

பல அமைப்புகள் பிரான்சில் பல தமிழ் பள்ளிகளை நடத்தி வருகின்றன. அவை தரமான தமிழ் கல்வியை வழங்க முயற்சிக்கின்றன.

பாரிஸில் உள்ள ***Institut national des langues et civilisations orientales (INALCO)*** போன்ற நிறுவனங்கள் கீழை மொழிகள் மற்றும் நாகரிகங்களில் சிறப்பு கவனம் செலுத்துகின்றன. இங்கு தமிழ் மொழி ஒரு முக்கிய ஆய்வுப் பகுதியாக உள்ளது. *INALCO*வில் தமிழ் மொழி மற்றும் நாகரிகத்தில் இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டப்படிப்புகள் வரை படிக்க வாய்ப்புகள் உள்ளன. தமிழ் இலக்கியம், வரலாறு. சமூகம் மற்றும் சமகால பிரச்சினைகள் போன்ற பல்வேறு தலைப்புகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

*INALCO* பாரிஸில் அமைந்துள்ளது. இது கீழைத்தேச மொழிகள் மற்றும் நாகரிகங்களை கற்பிப்பதிலும் ஆய்வு செய்வதிலும் பிரான்சின் முன்னணி நிறுவனமாகும். *INALCO*வில் தமிழ் மொழிப் பிரிவு மிகவும் வலுவானது. இங்கு வழங்கப்படும் படிப்புகள் பின்வருமாறு:

- ***Licence* (இளங்கலை):** தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் நாகரிகத்தின் அடிப்படைகளை உள்ளடக்கியது.
- ***Master* (முதுகலை):** தமிழ் மொழி மற்றும் நாகரிகத்தின் குறிப்பிட்ட துறைகளில் ஆழமான அறிவை வழங்குவது. இலக்கியம், மொழியியல், வரலாறு அல்லது சமூகம் போன்ற சிறப்பு பிரிவுகளில் கவனம் செலுத்த முடியும்.
- ***Doctorat* (முனைவர்):** தமிழ் மொழி மற்றும் நாகரிகம் தொடர்பான குறிப்பிட்ட தலைப்புகளில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது.

பாரிசில் இந்து கோவில்கள் மத மற்றும் கலாசார வாழ்வின் மையங்களாகத் திகழ்கின்றன.[1] தைப்பொங்கல், தீபாவளி மற்றும் தேர்த்திருவிழா போன்ற தமிழ் பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன.[2] தமிழ் மற்றும் பிரெஞ்சு கலாசாரங்களுக்கு இடையே உணவு உட்பட கலாசார பரிமாற்றங்களும் நிகழ்ந்துள்ளன.[2]

பள்ளிகள் மற்றும் கோவில்கள் போன்ற கலாசார நிறுவனங்களை நிறுவுவது. புதிய கலாசாரச் சூழலில் தங்கள் பாரம்பரியத்தைப் பாதுகாக்க தமிழ் புலம்பெயர் சமூகத்தின் ஒரு நனவான முயற்சியை நிரூபிக்கிறது. இது சமூகத்திற்கு கலாசார தொடர்ச்சியின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டுகிறது. இந்த நிறுவனங்கள் கலாசார விழுமியங்கள், மொழி மற்றும் மத நம்பிக்கைகளை அடுத்த தலைமுறைக்கு கடத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இது பிரெஞ்சு சமூகத்திற்குள் ஒரு தனித்துவமான தமிழ் அடையாளத்தை பராமரிக்க உதவுகிறது. பிரான்சில் பாரம்பரிய பண்டிகைகளை கொண்டாடுவது, புலம்பெயர் சமூகத்தின் கலாசார நடைமுறைகளை பராமரிக்கவும், அவர்கள் தத்தெடுத்த தாயகத்தில் ஒருமைப்பாடு மற்றும் பகிரப்பட்ட அடையாளத்தை உருவாக்கவும் உள்ள விருப்பத்தை எடுத்துக்காட்டுகிறது. இந்த நிகழ்வுகள் முக்கியமான சமூகக் கூட்டங்களாக செயல்படுகின்றன. கலாசாரப் பிணைப்புகளை வலுப்படுத்துகின்றன மற்றும் கலாசார வெளிப்பாடு மற்றும் பரிமாற்றத்திற்கான வாய்ப்புகளை வழங்குகின்றன. ஒரு "பிரெஞ்சு தமிழ் அடையாளம்" உருவாகி வருவது கலாசார கலப்பினமாக்கலின் ஒரு செயல்முறையை அறிவுறுத்துகிறது. குறிப்பாக



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 36 5/27/2025 8:21:04 AM

பிரான்சில் பிறந்து வளர்ந்த இளைய தலைமுறையினர் மத்தியில் தமிழ் பாரம்பரியம் மற்றும் பிரெஞ்சு கலாசாரத்தின் கூறுகள் கலக்கப்படுகின்றன.[6] இந்த வளர்ந்து வரும் அடையாளம் பாரம்பரியத்திற்கும் ஒருங்கிணைப்பிற்கும் இடையிலான சிக்கலான நிலைமையை பிரதிபலிக்கிறது. இரண்டு வெவ்வேறு கலாசார சூழல்களின் தொடர்புகளிலிருந்து புதிய கலாசார வடிவங்களும் வெளிப்பாடுகளும் உருவாகின்றன.

## சமூக-பொருளாதார ஒருங்கிணைப்பு மற்றும் சவால்கள்

வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்த தமிழ் குடியேற்றக்காரர்களின் சமூக பொருளாதார ஒருங்கிணைப்பு அனுபவங்கள் மாறுபட்டவை. ஆரம்பத்தில் வந்த பல குடியேற்றக்காரர்கள், குறிப்பாக இலங்கை அகதிகள், மொழித் தடைகள் காரணமாக வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்வி பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டனர்.[1] பிரெஞ்சு மொழியைக் கற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மற்றும் அரசாங்கத்தின் வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டங்களுக்கான கோரிக்கைகள் இருந்தன.[1] இலங்கைத் தமிழர்கள் பெரும்பாலும் உணவகங்கள், சுத்தம் செய்யும் பணிகள் மற்றும் கட்டுமானத் தொழில்களில் ஈடுபட்டனர்.[7] பிற்காலத் தலைமுறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.[1]

மொழித் திறன் குறைவாக இருந்த அகதிகள் எதிர்கொண்ட சவால்களையும், வேலைவாய்ப்பு வாய்ப்புகளை வழங்குவதில் இனக்குழும வலைப்பின்னல்களின் பங்கும் இலங்கைத் தமிழர்கள் குறிப்பிட்ட சில பொருளாதாரத் துறைகளில் ஆரம்பத்தில் குவிந்திருப்பதைக் காட்டுகிறது. இந்த முறை பல அகதிகள் புலம்பெயர் சமூகங்களில் பொதுவானது. ஆரம்பத்தில் குறைவான திறமை தேவைப்படும் துறைகளில் வேலைவாய்ப்பு கிடைப்பது, மொழி மற்றும் பிற திறன்களை வளர்க்கும்போது பொருளாதாரத்தில் ஒரு பிடிப்பை வழங்குகிறது. தமிழ் புலம்பெயர் சமூகத்திற்குள் காணப்பட்ட தலைமுறை தலைமுறையாக சமூக-பொருளாதார முன்னேற்றம், ஆரம்பகால குடியேற்றக்காரர்களின் குழந்தைகள் தொழில்முறை வாழ்க்கையைத் தொடர்வது, காலப்போக்கில் சமூக-பொருளாதார முன்னேற்றத்தின் ஒரு செயல்முறையை சுட்டிக்காட்டுகிறது. இது புலம்பெயர் சமூகங்களில் ஒரு பொதுவான முறை. இந்த மேல்நோக்கிய நகர்வு பிரெஞ்சு கல்வி முறை மற்றும் தொழிலாளர் சந்தையில் அடுத்த தலைமுறையினர் வெற்றிகரமாக ஒருங்கிணைந்ததைக் காட்டுகிறது.

## முக்கியமான வரலாற்று நிகழ்வுகள் மற்றும் அரசியல் ஈடுபாடு

தற்போது பிரான்சில் தமிழ் புலம்பெயர் சமூகத்தின் அரசியல் ஈடுபாடும் அதிகரித்து வருகிறது.புலம்பெயர்ந்த தமிழர்களின் இரண்டாவது தலைமுறையினர் உள்ளூர் அரசியலில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளனர்.[8] தமிழ் ஈழத்தை அங்கீகரிக்கக் கோரும் முயற்சிகள் மற்றும் போர்க்குற்ற விசாரணை தொடர்பான கோரிக்கைகளையும் இவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.[9]

இலங்கை உள்நாட்டுப் போர் பிரான்சில் உள்ள இலங்கை தமிழ் புலம்பெயர் சமூகத்திற்கு ஒரு மையக் குறிப்புப் புள்ளியாகத் தொடர்கிறது. இது அவர்களின் கூட்டு அடையாளம், அரசியல் செயல்பாடு மற்றும் நீதி மற்றும் அங்கீகாரத்திற்கான



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 37 5/27/2025 8:21:04 AM

கோரிக்கைகளை வடிவமைக்கிறது. மோதல் மற்றும் இடம்பெயர்வு பற்றிய இந்தப் பகிரப்பட்ட அனுபவம் புலம்பெயர் சமூகத்திற்குள் ஒரு வலுவான ஒற்றுமை உணர்வையும், அவர்களின் தாயகம் தொடர்பான அரசியல் பிரச்சினைகளில் ஒருமுகப்படுத்தப்பட்ட கவனத்தையும் வளர்த்துள்ளது. பிரெஞ்சு உள்ளூர் அரசாங்கத்தில் தமிழர்களின் அதிகரித்து வரும் அரசியல் பங்கேற்பு பிரெஞ்சு அரசியல் அமைப்பில் அவர்களின் வளர்ந்து வரும் ஒருங்கிணைப்பையும், பிரெஞ்சு சமூகத்திற்குள் தங்கள் குரல்களைக் கேட்கவைக்க வேண்டும் என்ற விருப்பத்தையும் குறிக்கிறது.[8] இந்த ஈடுபாடு தாயக அரசியலில் மட்டும் கவனம் செலுத்துவதிலிருந்து, அவர்கள் தத்தெடுத்த நாட்டின் அரசியல் வாழ்க்கையிலும் பங்கேற்பது என்ற மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இது ஒரு முதிர்ச்சியடைந்த புலம்பெயர் சமூகமாகத் தமிழ்ச்சமூகம் மாறிவருவதை உணர்த்துகிறது.

## வளர்ந்து வரும் பிரெஞ்சு தமிழ் அடையாளம்

வெவ்வேறு பூர்வீகங்களைக் (இந்தியா, இலங்கை) கொண்ட தனிநபர்களை உள்ளடக்கிய ஒரு தனித்துவமான பிரெஞ்சு தமிழ் அடையாளம் உருவாகியுள்ளது.[6] பிரான்சில் பிறந்து வளர்ந்த இளைய தலைமுறையினர் தங்கள் இரட்டை அடையாளங்களை (பிரெஞ்சு மற்றும் தமிழ் சிறந்த முறையில் கையாள்கிறார்கள்.[6] இந்த அடையாளத்தை வடிவமைப்பதில் மொழி (தமிழ் மொழியுடன் சரளமாக பிரெஞ்சு பேசுவது) முக்கிய பங்கு வகிக்கிறது.[1] இதில் கலாசாரக் கலப்பும், புதிய கலாசார வெளிப்பாடுகளும் உருவாகும் சாத்தியக்கூறுகள் உள்ளதாய் மறுக்க முடியாது.[2]

வெவ்வேறு பூர்வீகங்கள் இருந்தபோதிலும், ஒரு ஒருங்கிணைந்த "பிரெஞ்சு தமிழ் அடையாளம்" இப்போது உருவாகி வருவது மறுக்க முடியாது - ஆரம்பத்தில் பூர்வீகத்தின் அடிப்படையில் வேறுபாடுகள் இருந்தாலும், காலப்போக்கில், பிரான்சில் தமிழராக இருப்பது பற்றிய அனுபவமும் செயற்பாடுகளும் இந்த முந்தைய வேறுபாடுகளை மீறி ஒரு கூட்டு அடையாளத்தை வளர்க்கிறது இளைய தலைமுறையினர் சரளமாகப் பிரெஞ்சு பேசுவது பிரெஞ்சு சமூகத்தில் அவர்களின் ஒருங்கிணைப்பு மற்றும் அவர்களின் பிரெஞ்சு தமிழ் அடையாளத்தை உருவாக்குவதில் ஒரு முக்கிய காரணியாகும். இது இரண்டு கலாசார சூழல்களிலும் திறம்பட செல்ல அவர்களுக்கு உதவுகிறது.[1] மொழித் திறன் சமூக, கல்வி மற்றும் தொழில்முறை ஒருங்கிணைப்பிறகு முக்கியமானது. இளைய தலைமுறையினர் தங்கள் அடையாளத்தை எவ்வாறு உணர்கிறார்கள் மற்றும் வெளிப்படுத்துகிறார்கள் என்பதில் குறிப்பிடத் தக்க பங்கு வகிக்கிறது.

பிரான்சில் தமிழர்களின் வரலாற்றுப் பயணம் பல கட்டங்களைக் கடந்துள்ளது. பல்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்த குடியேற்ற அலைகளும், அவற்றின் காரணங்களும் தனித்துவமானவை. தமிழ் சமூகம் பிரெஞ்சு சமூகத்திற்கு கலாசார, பொருளாதார மற்றும் சமூக ரீதியாகப் பல பங்களிப்புகளைச் செய்துள்ளது. அவர்கள் பல சவால்களை எதிர்கொண்டாலும், பிரான்சில் தமிழ் அடையாளத்தின் பரிணாமம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பிரான்சில் தமிழ் புலம்பெயர் சமூகத்தின் நீடித்த பாரம்பரியம் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கிறது.



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 38 5/27/2025 8:21:05 AM

அட்டவணை 1: பிரான்சில் தோராயமான தமிழ் மக்கள் தொகை (தோற்றம் வாரியாக)

| தோற்றம் | தோராயமான மக்கள் தொகை | ஆண்டு மதிப்பீடு |
|---|---|---|
| இந்திய வம்சாவளித் தமிழர்கள் (தமிழ்நாடு & புதுச்சேரி) | *100,000+* | *2017* |
| இலங்கைத் தமிழ் வம்சாவளியினர் | *200,000* | *2023* |
| *Réunion* தமிழ் வம்சாவளியினர் | *220,000* | *2017* |
| மார்டினிக் & பிரெஞ்சு கயானா தமிழ் வம்சாவளியினர் | *33,000* | |

## மேற்கோள்கள்


1. *Tamils in France, https://en.wikipedia.org/wiki/Tamils.in France*
2. *The Vibrant Tamil Diaspora in Paris I Indian Diaspora, https://www.indiandiaspora.org/news/vibrant-tamil-diaspora-paris*
3. *About: Tamils in France, https://dbpedia.org/page/Tamils in France*
4. *Tamils in Re-Union: Losing Cultural Identity-Analysis Eurasia Review, https://www.eurasiareview.com/12102018-tamils-in-re-union-losing-cultural-identity-analysis/*
5. *Sri Lankan Tamils In Paris: Little Jaffna In The Heart Of France | The New Locals - Part 2/8,, https://m.youtube.com/watch?v=rCgb9yk4rs8*
6. *The Three Faces of the French Tamil Identity - Tamil Culture.com, https://tamilculture.com/the-three-faces-of-the-french-tamil-identity*
7. *WSWS speaks to Tamil immigrants and refugees in France-World Socialist Web Site, https://www.wsws.org/en/articles/2012/04/tami-a28.html*
8. *Politically French, culturally Tamil, https://www.tamilquardian.com/content/politically-french-culturally-tamil*
9. *10 years after the civil war, Sri Lankan Tamil community in Paris, https://cherwell.org/2019/07/01/10-years-after-the-civil-war-sri-lankan-tamil-community-in-paris-demand-justice/*




A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 39 5/27/2025 8:21:05 AM

# Entre deux mondes : Le regard d'une Tamoule née en France sur le Sri Lanka

Quand je pense au Sri Lanka, mon pays d'origine, c'est comme si un ouragan silencieux se levait en moi. Une tempête d'émotions, souvent contradictoires, toujours puissantes : la fierté et la tristesse, la curiosité et l'appréhension, l'amour et la douleur. J'ai l'impression de tendre la main vers quelque chose de précieux, mais d'intangible. C'est un peu comme essayer d'attraper un souvenir qui ne m'appartient pas vraiment. Née à Paris de parents tamouls ayant fui la guerre civile, j'ai grandi loin de cette île qui m'habite pourtant chaque jour.

Je n'ai mis les pieds au Sri Lanka que deux fois. Deux voyages qui m'ont secouée bien plus que je ne l'aurais imaginé. J'étais venue pour découvrir, pour comprendre, peut-être même pour «retrouver mes racines» — mais je ne m'attendais pas à ressentir ce poids. Cette sensation de décalage, ce sentiment d'être à la fois chez moi et totalement étrangère. C'est difficile à expliquer. Le Sri Lanka que j'avais construit dans mon esprit depuis l'enfance — à travers les récits de mes parents, les documentaires, les photos, les récits de guerre chuchotés à table — ne ressemblait pas exactement à celui que j'ai découvert.

Mes parents m'ont transmis leur histoire à petites doses, comme on verse de l'eau sur une plante fragile. Ils avaient peur de trop en dire, de me faire porter un poids que je n'étais pas prête à porter. Mais leur silence parlait autant que leurs mots. Je les voyais changer de ton, détourner les yeux, s'arrêter au milieu d'un souvenir. Leur douleur était palpable. Partir en France n'avait rien d'un projet de vie. C'était un sursaut de survie. Un arrachement. Un exil.

Et moi, dans tout ça ? Moi, j'ai grandi dans un entre-deux. Un espace flottant entre ici et là-bas. En France, on me ramène toujours à mes origines. On me demande «d'où je viens vraiment», on s'étonne de mon prénom, de mes plats, de mes vêtements les jours de fête. Au Sri Lanka, je suis «la Française», celle qui parle tamoul avec un accent, qui ne comprend pas toujours les codes sociaux, qui demande ce que signifie une offrande, qui ne sait pas nouer seule son sari. Cette double altérité me blesse parfois. Je me demande souvent : qui serais-je si mes parents n'avaient pas quitté Jaffna ? Est-ce que je serais plus enracinée ? Plus entière ?

Et pourtant, je ne suis pas sans racines. Elles sont là, dans les gestes simples de l'enfance : les prières murmurées par ma mère, les récits de temples que mon père m'offrait comme des contes, les cours de tamoul du samedi matin où l'on riait en essayant d'écrire avec grâce un alphabet complexe. Elles sont là dans les parfums de la cuisine, dans la musique carnatique qui résonnait parfois dans notre salon, dans les éclats de voix des films tamouls que je regardais avec fascination. C'est une culture que j'ai apprise à aimer comme on apprend une langue étrangère — avec effort, avec passion, parfois avec maladresse.

Mon premier voyage au Sri Lanka, je l'ai fait à 15 ans. Je me souviens de l'odeur de la terre après la pluie, des klaxons inces-



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 40 5/27/2025 8:21:05 AM

sants, des sourires timides de mes cousins, de l'intensité du soleil sur ma peau. Je me souviens aussi de la gêne, du regard des gens qui m'identifiaient tout de suite comme «autre». J'ai ressenti une forme de honte, ou plutôt de frustration : pourquoi ne puis-je pas me fondre dans ce paysage qui devrait être le mien ? Pourquoi ai-je ce sentiment d'être spectatrice plutôt qu'actrice ?

Mais tout n'était pas douloureux. Il y a eu des moments de pure tendresse. Le regard d'une tante qui me reconnaissait dans mes gestes, une grand-mère qui m'a bénie sans un mot, les longues discussions avec de jeunes Tamouls de mon âge à l'université, qui m'ont accueillie sans jugement. Ces étudiants, certains nés après la guerre, d'autres marqués dans leur chair par les conséquences du conflit, étaient curieux. Curieux de savoir comment on vit «là-bas», ce que veut dire être Tamoul en France. Nous avons échangé sur nos parcours, nos rêves, nos combats. J'ai été frappée par leur résilience, leur soif d'avenir malgré un passé si lourd. Ces moments ont été précieux. Ils m'ont permis de tisser un lien concret avec cette jeunesse dont je me sens finalement très proche.

Si je devais retourner à Jaffna aujourd'hui, je rêverais d'organiser des ateliers d'échange culturel, de monter un projet commun entre jeunes de la diaspora et étudiants locaux. Par exemple, des cercles de parole où chacun pourrait raconter son histoire. Ou encore des projets artistiques : un documentaire, une exposition de photos, un recueil de poèmes trilingues (tamoul, anglais, français), une pièce de théâtre sur l'exil, la mémoire, le retour. Il y a tant à faire. Tant de ponts à construire entre nos deux mondes.

Et si les contraintes administratives le permettent — si les passeports, les visas, les frontières se faisaient un peu plus souples — alors pourquoi ne pas rêver plus grand ? Imaginer de véritables programmes d'échange entre étudiants de la diaspora et ceux de Jaffna. Étudier ensemble, créer ensemble, réfléchir ensemble à l'avenir de notre communauté. Cela ne serait pas qu'un geste symbolique. Ce serait une manière concrète de renforcer les liens, de transmettre les savoirs dans les deux sens, de dépasser les blessures de l'exil par l'action et le partage.

Ce ne serait pas seulement guérir le passé, ce serait inventer un avenir commun, par-delà les frontières.

La célébration des 50 ans de l'Université de Jaffna m'a profondément touchée. Ce lieu, que mes parents évoquaient avec respect, est bien plus qu'un établissement académique. C'est un symbole. Un lieu de savoir, de résistance, de transmission. Voir cette institution honorée malgré tout ce qu'elle a traversé, c'est un acte de foi en notre peuple, en notre capacité à renaître sans jamais oublier. Même à Paris, même dans mon quotidien d'ingénieure, ce moment a résonné en moi. Comme un rappel que je fais partie de cette histoire, que ma place existe, même si elle est différente.

Je ne suis pas seule dans cette quête. Nous sommes nombreux, enfants de la diaspora, à chercher notre équilibre entre deux cultures, deux langues, deux réalités. Parfois, ce tiraillement est épuisant. Mais il est aussi une richesse. Une chance. Car nous avons une perspective unique. Nous sommes des passeurs. Des ponts. Et je crois que c'est cela, notre mission : maintenir vivant ce fil entre passé et présent, entre là-bas et ici, entre ce que nous sommes et ce que nous aurions pu être.



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 41 5/27/2025 8:21:05 AM

Je ne suis peut-être pas née au Sri Lanka. Mais il vit en moi. Dans mes gestes, mes silences, mes choix. Et chaque jour, par mes mots, par mes engagements, par ma mémoire, je continue à tisser ce lien fragile mais précieux entre les mondes. Non pas pour réparer quelque chose, mais pour honorer ce que je suis : une fille de l'exil, une fille de Jaffna, une fille de France.



Entre Paris et Jaffna, une jeune femme tamoule incarne le pont entre deux identités.

Son regard tourné vers ses racines témoigne d'un exil habité, mais jamais oublié.

***Par Vithusa Vasiddan,***

***26 ans, Ingénieure d'affaires à Paris (France)***





A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 42 5/27/2025 8:21:08 AM

# Un pays jamais vu, une famille jamais connue

Je ferme les yeux et j'imagine. J'imagine ce que serait ma vie si j'avais un jour mis les pieds au Sri Lanka, ce pays qui aurait dû être le mien. Mais la réalité, c'est que je n'y suis jamais allé. Pas une seule fois. Pas même pour voir mes grands-parents avant qu'ils ne s'en aillent.

Le Sri Lanka, je le connais à travers les récits de mes parents, à travers les photos jaunies qu'ils conservent précieusement. C'est une terre qui vit en moi sans que je puisse la toucher, une maison dont je n'ai jamais poussé la porte. Chaque fois que j'y pense, une pointe de tristesse s'installe. Il y a tant de visages que je ne connaîtrai jamais, tant de voix que je n'entendrai pas.

Pourquoi n'ai-je jamais eu le temps d'y aller ? Parce qu'ici, en France, il faut se battre. Il faut travailler sans relâche pour avoir une place, pour construire quelque chose. Il n'y a pas de place pour les voyages, pour le luxe de retrouver ses racines. On reporte, on se dit «plus tard», et puis il est trop tard. On se réveille un jour en apprenant que les grands-parents qu'on rêvait de serrer dans nos bras ne sont plus là. Que le village où ils ont grandi a changé, que les voix qui auraient pu nous raconter notre histoire se sont tues.

Je ne suis pas française aux yeux de l'administration, et parfois, je me demande si je suis vraiment tamoule, si je peux revendiquer cette identité que je vis à distance. Parler la langue à la maison ne suffit pas. Manger les plats de mon enfance ne comble pas l'absence de souvenirs réels avec ceux qui m'attendaient de l'autre côté de l'océan.

Et pourtant, je porte en moi leur histoire. Je suis l'héritage d'un passé que je n'ai pas vécu. Je suis le prolongement de ces vies qui ont existé sans moi. Et c'est à travers mes parents, à travers leurs mots, que j'essaie de reconstruire ce pont invisible entre moi et ce pays que je n'ai jamais vu, mais qui me définit tant.

Un jour, peut-être, je mettrai enfin les pieds au Sri Lanka. Ce jour-là, je poserai mes mains sur la terre en murmurant un «je suis rentrée», même si je n'y ai jamais vécu. Ce jour-là, j'espère pouvoir sentir, ne serait-ce qu'un instant, la chaleur de ceux qui m'ont aimée sans me connaître.

***Écrit par Jasiga PARAMESWARAN, 24 ans, étudiante en École de Commerce, Paris (France)***





A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 43 5/27/2025 8:21:08 AM

# பொன்விழா

பொன் பூச்சொரிய
நிறம் மாறும் வளாகத்தின் உள்வீதி
என் கனவில்
இன்றும் வருகிறது

சிலவேளை அழகு
சில வேளை அமைதி

பொன் வாழக் குதூகலக் களிப்பில்
திளைப்பது சரிதான்
எனினும்

ஏன் மறந்தோம் எங்கள்
குருதித் துளி எழுதிய வரலாற்றை ?

உயிர்க்கொடையில் ஒளிபெற்ற
மாணவர்கள் கதை எல்லாம்
நீர் எழுத மாட்டீர் —
நாம் எழுதுகின்றோம்.

பேரன்
12.05.2025



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 44 5/27/2025 8:21:10 AM

# பொன் பூச்சொரிய

*நிறம் மாறும் வளாகத்தின் உள்வீதி*
*என் கனவில்*
*இன்றும் வருகிறது*

*சிலவேளை அழகு*
*சிலவேளை அழுகை*

*பொன்விழாக் குதூகலக் களிப்பில்*
*திளைப்பது சரிதான்*
*எனினும்*

*ஏன் மறந்தோம் எங்கள்*
*குருதித்துளி எழுதிய வரலாற்றை?*

*உயிர்க்கொடையில் ஒளிபெற்ற*
*மாணவர்கள் கதை எல்லாம்*
*நீர் எழுத மாட்டீர்*

*நாம் எழுதுகின்றோம்*

*சேரன்*
*12-05-2025*

உருத்ததரமூர்த்தி சேரன் நன்கறியப்பட்ட தமிழ்க் கவிஞர், நாடக ஆசிரியர், பத்திரிகையாளர் மற்றும் பேராசிரியர் ஆவார். அவர் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஏராளமான புத்தகங்களை எழுதியுள்ளார், மேலும் அவரது இலக்கிய மற்றும் மனித உரிமை பங்களிப்புகளுக்காக பல விருதுகளைப் பெற்றுள்ளார். அவரது படைப்புகள் இருபது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞானத்துறையில் BSc பட்டத்தையும், கனடாவின் யோர்க் பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் PhD பட்டத்தையும் பெற்றவர். தற்போது இவர் கனடாவின் வின்ட்சர் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றிவருகிறார்.





A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 45 5/27/2025 8:21:10 AM

# Entre épices et équations: voyage au cœur d'une double culture

***Harish Casinathan***

Étant d'origine sri lankaise et de nationalité française, j'ai la chance de vivre entre deux cultures très différentes, et c'est surtout par la nourriture que cette richesse se ressent le plus.

Au Sri Lanka, la cuisine est un vrai art de vivre. Chaque repas est une explosion de saveurs : des plats parfumés, épicés, colorés, toujours accompagnés de riz, de lentilles, de dosai, de pâtisseries indienne, de légumes cuisinés avec des mélanges d'épices uniques, et des currys aux goûts profonds. C'est une cuisine généreuse, souvent partagée en famille, où le moment du repas est aussi important que la préparation elle-même.

En France, la cuisine est tout aussi riche, mais différente. Ici, les repas varient beaucoup selon les régions, et chaque plat met en avant un produit : un fromage, une viande, une sauce, ou un dessert raffiné. La gastronomie française valorise le dressage, les textures, la précision des goûts, tandis qu'au Sri Lanka c'est la diversité sur la table et le mélange des épices qui priment.

Cette double culture culinaire est pour moi un véritable atout : elle m'a appris à apprécier la variété, à m'adapter à différentes saveurs, et surtout à comprendre qu'un plat raconte toujours une histoire.



Mais au-delà de la nourriture, j'ai aussi grandi entouré de jeux qui demandent réflexion. Au Sri Lanka, les échecs et les jeux de stratégie sont très présents dans la vie de tous les jours : ils forment l'esprit à être patient, observateur et stratégique. En France, j'ai retrouvé cette passion des jeux, mais ils sont plus conviviaux.

Enfin, les mathématiques m'ont appris que la logique est universelle. Peu importe le pays, les chiffres sont les mêmes, mais les méthodes changent : au Sri Lanka, on insiste sur la rapidité et la mémoire, tandis qu'en France on développe plus l'analyse et la rigueur.

Tout cela m'a permis de cultiver une vraie richesse intérieure, entre traditions culinaires, logique mathématique et plaisir du jeu stratégique.



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 46 5/27/2025 8:21:10 AM

# பகிடிவதை முற்றாக ஒழிக்கப்பட வேண்டியது

இலங்கையின் பல்கலைக்கழகங்களில் நடைபெறும் பகிடிவதை பிற்போக் கானது என்ற நிலையைத் தாண்டி மிலேச்சத்தனமான ஒரு பழக்கமாகவே காலம் காலமாக எமது சமூகத்தில் பார்க்கப்பட்டு வருகிறது. எனினும் அதை தடுத்து நிறுத்தக்கூடிய அதிகாரங்களிலும் இயலுமையிலும் உள்ளவர்களின் தனிப்பட்ட அனு சரிப்புகளின் பின்னணியில் இன்னும் அதன் துன்பம் குறைந்த பாடாயில்லை. ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கான மாணவர்களின் உயிரை மட்டுமன்றி ஆயிரக்கணக்கான மாணவ மாணவி களினதும் அவர்கள் பெற்றோரினதும் மனநலத்தையும் பாதித்து வரும் பகிடிவதை உடனடியாக நிறுத்தப்பட வேண்டியது. கல்வியின் உன்னதத்தை வலியுறுத்தவேண்டிய பல்கலைக் கழகங்கள், மறுபுறத்தில் பகிடிவதை அரங்கேறும் மேடையாக மாற்றப் பட்டிருப்பது வேதனை என்று கடந்து போக முடியவில்லை. இனி இது நடக்காதெனும் நிலை ஏற்படும் வரை ஒரு விழிப்பான நாகரிகமான சமூகமாக நாம் எமது எதிர்ப்பை வெளிப்படுத்துவதைப் பொறுத்தே எமது சமூகத்தின் ஆரோக்கியமான மீளுருவாக்கமும் எதிர்காலத்தின் கட்டமைப்பும் அமையப் போகிறது.

இனம், வர்க்கம் பாலினம், சமூகம், பொருளாதாரம் எனபவற்றை கொண்டு சமூகத்தில் கட்டமைக்கப்பட்டிருக்கும் பேதங்களை அடிப்படையாகக் கொண்டு பல குற்றங்கள் நடைபெறுகின்றன. இக்குற்றச் செயல்களுக்கும் பகிடிவதை என்பதற்கும் சட்டத்தின் முன்னால் எந்த வித்தியாசமும் இல்லை. பகிடிவதை என்கிற முகமூடி அணிந்து கொள்ளும் குற்றவாளிகளின் தந்திரத்தையும் பகிடிவதை சேர்த்தே பாதுகாத்து வருகிறது.

மாணவர்களை "ஒழுக்கப்படுத்தும்", நாகரிகப்படுத்தும் என்கிற மாயாஜால சொல்லாடல்களுடன் அவர்களின் அடை யாளங்களையும், தனிமனித சுதந்திரத் தையும் அழிக்கும் வகையிலான இந்நடவடிக்கைகள், சீரான சமூகத்தையும் கல்வி சூழலையும் அழித்துவருகின்றன. இந்த மோசமான நிலையை எமது சமூகம் உணரத் தவறினால் அதன் மீள்கட்டுமானம் என்பது எதிர்பார்க்கும் வேகத்தில் நடக்கும் வாய்ப்பை தவறவிடும் என்பது வெளிப்படையான உண்மை.

*2022*-ஆம் ஆண்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ மற்றும் தொழில்நுட்ப பீடங்களை அடிப்படையாக கொண்டு நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று, *59* வீதமான மாண வர்கள் குறைந்தது ஏதோவொரு வகை பகிடிவதையை அனுபவித் துள்ளதாக தெரிவிக்கிறது. மேலும் *40%* மாணவர்கள் உணர்வு ரீதியான, அச்சுறுத்தும் பாணியிலான மற்றும் வெறுப்பு பேச்சு அடிப்படையிலான பகிடிவதையை எதிர் கொண்டதாகவும், *11%* உடல் ரீதியான பகிடிவதையையும், மற்றும் *13%* மாணவர்கள் பாலியல் தொந்தரவுகளுடனான பகிடிவதையை



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 47 5/27/2025 8:21:10 AM

அனுபவித்திருந்ததாகவும் தெரிவிக்கிறது.

பகிடிவதை ஏற்படுத்தும் மனநிலை ரீதியிலான பாதிப்புகள் நீண்டகால தாக்கத்தை தரக்கூடியவை. மாணவர்கள் மன அழுத்தம், தூக்கமின்மை, படிப்பில் ஆர்வக் குறைவு, தனிமை உணர்வு போன்ற பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்வதற்கான அடிப்படைக் காரணமாக பகிடிவதையும் இருக்கிறது. பாதிப்புக்குள்ளாகும் மாணவர்கள் தமக்கான பாதுகாப்பை பொதுவாக நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடமே தேடுகின்றனர் என்பதும் பல்கலைக் வதையை தடுக்கும் பொறுப்பை ஏற்கவேண்டிய பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் நிர்வாகிகளின் அசமந்தமும் மறைமுக அனுசரணையும் சட்டங்கள் நடை முறையில் சாத்தியமற்ற வையாவும் பலவீனமானவையாகவும் போக காரணங்களாக அமைகின்றன.

பொதுமக்களைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழக மாணவர்களை உயர்ந்த அந்தஸ்தில் பார்க்கின்றனர். இந்த அணுகுமுறை பொதுமக்களுக்கும் மாணவர்களுக்குமிடையில் ஒரு விபரீத

## ☆எமது சமூகத்தை மெல்ல மெல்லக் கொல்லும் விசம்.

கழக அதிகாரிகள் அல்லது சட்ட உதவிகளை நாடுவதில் மாணவர்களுக்கு தயக்கம் இருக்கிறது என்பதும் அதிகார மையம் குறித்த பயமும் நம்பிக்கை யின்மையையுமே வெளிப் படுத்துகிறது.

பகிடிவதை குறித்த பல்கலைக்கழக நிர்வாகங்களின் அலட்சியப் போக்கு மற்றும் சட்ட நடவடிக்கைகள் ஊடாக பகிடிவதையை எதிர்ப்பதில் அவர்கள் காட்டும் அக்கறையின்மை என்பவை பகிடிவதையை ஒழிக்கும் முயற்சிகளை மேலும் சிக்கலுக்குரியனவாக வடிவமைக் கின்றன. பல சந்தர்ப்பங்களில் பல்கலைக் கழக நிர்வாகங்கள் இந்த நிகழ்வுகளை “குற்றம் இல்லை” என்ற வகையில் பூசி மெழுகவும் மறைக்கவும் செய்கின்றன.

இலங்கை அரசு, பகிடிவதையை ஒழிக்க சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உயர்நீதி மன்றத்தின் கட்டளைகளும் கடுமையான சட்டங்களும் ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளன. எனினும் பகிடி மான இடைவெளியை உருவாக்கி விடுகிறது. கேள்விகளுக்கு அப்பாற் பட்டவர்களாக சமூக விழுமியங் களுக்கு அப்பாற்பட்டவர்களாக அவர்களின் மனநிலையை கட்டமைக்கிறது. இந்த நிலையானது பகிடிவதையை எதிர்க்கும் முயற்சிகளை தடுக்கும் ஒரு பிரதானமான காரணமாக அமைந்துவிடுகிறது.

“நாம் இந்த உயர் நிலையை அடைந்து விட்டோம்” என்ற மமதையுடன் பெரி யாண்பிள்ளைத்தனம் தலைக்கேற புது மாணவர்களை நசுக்குவதில் சிரேஷ்ட மாணவர்கள் சிலர் மகிழ்ச்சி அடை கின்றனர். அது தவிர பகிடிவதையின் காரணமாக அவர்களுக்கு ஏற்பட்ட முன் மனத்தாக்கங்களின் பின்னணியிலும் சில மூத்த மாண வர்கள், தாங்கள் அனுபவித்த வலியை மற்றவர்களுக்கும் ஏற்படுத்த வேண்டும் என்கிற மனப்பிரள்வு நோயின் தாக்கத்தாலும் பகிடிவதையை தொடர்ந்து மேற்கொள்கின்றனர். இந்த நடைமுறைகள் தலைமுறை கடந்து



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 48 5/27/2025 8:21:10 AM

நாட்பட்ட மனக்காயங்களாக மாறும் பகிடிவதையின் பாதிப்புகள் நாளடைவில் வன்முறையான மனநிலையைக் கட்டமைப்பன என்பது உளவியல் நமக்குணர்த்தும் உண்மையாகும்.

பகிடிவதையை எதிர்க்கின்ற காலம் கடந்து அவசரமாக ஒழித்துவிட வேண்டிய நிலைக்கு எமது சமூகம் தள்ளப்பட்டிருக்கிறது. இதனை சாத்தியப்படுத்த வேண்டுமாயின் சமூகத்தின் ஒட்டுமொத்த பங்களிப்பு அவசியமாகிறது. மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் அனைவரும் இணைந்து செயல்படுதல் கட்டாயமானது

உண்மையில் சமூகமயப்படாத, வக்கிரங்கள் நிறைந்த மனப்பிறழ்வான கலாசாரத்தை வேரோடு பிடுங்கி அழிக்க வேண்டிய அவசரமான காலம் இது.

சமீபத்தில் சபரகமுவ பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற சம்பவம் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். பொறியியல் மாணவரான சாரித் தில்ஷான் பகிடிவதையால் ஏற்பட்ட மன வேதனையால் தற்கொலை செய்து கொண்டார். இது தற்காலிக ஆவேசத்தின் விளைவல்ல, மாறாக, பல ஆண்டுகளாக நிர்வாக அலட்சியத்தாலும், சமூகத்தின் அசமந்தத்தாலும் உருவான ஒரு கட்டமைப்பு சார்ந்த குறைபாட்டின் வெளிப்பாடாகும். மேலும், அதே பல்கலைக்கழகத்தில் ஒரு பெண் மாணவியிடம் பகிடிவதை நிகழ்த்திய ஆறு மாணவர்கள் கைது செய்யப்பட்ட

## ⭐இலங்கையின் உயர்கல்வி நிறுவனங்கள் யாவிலும் புரையோடிக் கிடக்கும் கொடூரம்.

நடவடிக்கைகளை நாகரிகமானதாகவும் சமூகப்புரட்சியாகவும் நிறுவும் பிற்போக்குத்தனம் தான் இந்த பகிடிவதையின் பின்னால் ஒளிந்து கொண்டுள்ளது என்கிற புரிதல் பொதுச் சமூகத்திடம் கட்டமைக்கப்பட வேண்டும். பகிடிவதை ஒரு “பாரம்பரியம்” என்று கருதும் மனப்பான்மையை பல்கலைக்கழகத்தில் இருந்து துடைத்தெறிய வேண்டும். உயர்கல்வி நிலையங்கள், கல்வியின் ஒளியை பரப்பும் தளமாக இருக்க வேண்டுமே அன்றி எவருக்கும் வலி தரும் இடமாக இருக்க முடியாது. நிர்வாகம், அரசு, மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து இந்த வன்முறைக் சம்பவமானது பெண்கள் பகிடிவதை போர்வையில் எதிர்கொள்ளும் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையின் உண்மை முகத்தை வெளிக்கொணர்வதாக இருக்கிறது.

இத்தகைய நிகழ்வுகள், பல்கலைக்கழக நிர்வாகங்களின் தூண்டுதலோடு அல்லது அதைக் கண்டிக்காத செயல்பாடுகளோடு தொடர்புபட்டிருப்பதை பொதுசமூகம் விளங்கிக் கொள்ளவேண்டும். தவிர தமக்கு இருக்கும் பொறுப்பினையும் உணர்ந்துகொள்ள வேண்டும் பல்கலைக் கழகங்கள் பொதுமக்களின் பொது நிதியிலேயே இயங்குகின்றன. அவை மக்களின் சொத்துகள் என்பதும் பொதுமக்களே அதன் உரித்தாளர்கள்



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 49 5/27/2025 8:21:10 AM

என்பதும் உணர்வு நிலை பெறவேண்டும். பொதுமக்களின் விழிப்புணர்வும் சமூகத்திலுள்ள அமுக்க குழுக்களின் கோரிக்கைகளுமே பகிடிவதையை ஒழிக்கும் அஸ்திரங்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஏனெனில் பல நேரங்களில், பல்கலைக் கழக நிர்வாகங்கள் இந்த பகிடிவதை நிகழ்வுகளை "குற்றம் இல்லை" என்ற வகையில் மறைக்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றன. அத்தோடு பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப்படும் மானியங்கள் மற்றும் நிதிச் சலுகைகளின் மூலம் மக்களின் பொதுப்பணத்தைப் பெற்றுக்கொள்ளும் அரச அதிகாரிகள் மற்றும் ஆணைக்குழுக்கள், நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்த கட்டமைக்கப்பட்ட தொடர்ச்சியான பகிடிவதை பழக்கங்களைத் தட்டிக் கொடுக்கின்றன என்பது பொதுமக்களின் கவனத்தைப் பெறவேண்டும். அதன் வழியாகவே ஆரோக்கியமான எதிர் காலத்தை கட்டமைக்கமுடியும்.

பொதுமக்கள், பல்கலைக்கழக மாணவர் களை எளிதில் அணுக முடியாத உயர்ந்த அந்தஸ்தில் பார்க்கின்றனர். இது ஒரு விபரீதமான இடைவெளியை உருவாக்கி கேள்விகளுக்கு அப்பாற்பட்ட ஒரு தறிகெட்ட செருக்கை மாணவர்கள் மத்தியில் விதைத்துவிட்டிருக்கிறது. பல்கலைக்கழக வளாகங்களுக்குள் காவல்துறை நுழைய முடியாது என்கின்ற எழுதப்படாத விதியை பேராசிரியர்களும், மாணவர்களும் காபாந்து பண்ணிக்கொள்வதில் மிகுந்த கரிசனை காட்டுவதும் பகிடிவதையை ஒழிப்பதில் பெருஞ்சவாலாக முன் நிற்கிறது.

இதற்கு எதிராக இலங்கை அரசாங்கம் *Attorney General's Guidelines* மற்றும் உச்ச நீதிமன்றத் தீர்மானங்கள் போன்றன சட்ட நடவடிக்கைகளை எடுத்தாலும், அவை நடைமுறையில் பலனளிக்காத பலவீனமான நடவடிக்கைகளாக போவதற்கு இந்த எசமானர் மனநிலையே காரணமாக இருக்கிறது. ஆனால் மறுபுறத்தில் பகிடிவதையை முழுமையாக ஒழிக்க முடியவில்லை என்றால், மாணவர்களின் உயிரையும் எதிர்காலத்தையும் பாதுகாக்க முடியாது என்பதே உண்மை.

இதற்கு, பகிடிவதையை 'பாரம்பரியம்', 'பழக்கம்', 'மகிழ்ச்சிக்கான வழி' என நீடிக்கச் செய்யும் மனப்பான்மையிலிருந்து விடுபட வேண்டியது அவசியம். உயர்கல்வி நிலையங்கள், கல்வியின் ஒளியை பரப்பும் தளமாகவே இருக்க வேண்டும், எவருக்கும் வலிதரும் இடமாக அல்ல என்னும் புரிந்துணர்வு மாணவர்களுக்கு மட்டுமன்றி பொதுப்பரப்பிலும் செல்வாக்குப் பெறவேண்டியிருக்கிறது. பல்கலைக் கழக நிர்வாகம், அரசு, மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து இந்த வன்முறைக் கலாசாரத்தை நிறுத்த ஓரணியில் திரள வேண்டிய நேரம் இது.

இது, ஒரு மாணவரின் உயிரை மட்டுமல்லாது, ஒரு சமூகத்தின் எதிர்காலத்தையும் பாதுகாக்கும் முயற்சி.

**அனித்தா ரவீந்திரன்**
**34ஆம் அணி, பொருளியல் துறை,**
**கலைப்பீடம்**



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 50 5/27/2025 8:21:11 AM

# ஐயமிட்டுண்

## – தமிழர் சமூக வளர்ச்சிக்கான வழிகாட்டும் நடைமுறை

இலங்கையில் பொருளாதாரத்தில் பின் தங்கிய குழந்தைகள் எதிர்கொள்ளும் பட்டினி மற்றும் கல்வி சமத்துவமின்மையின் தடைகளை அகற்றுவதை நோக்கமாக கொண்டு ஆரம்பிக்கப்பட்டதே "ஐயமிட்டுண்".

சத்தான உணவு மற்றும் தரமான கல்வி ஆகிய வளங்களுக்கான நிலையான அணுகுமுறை ஒன்றை வழங்குவதன் மூலம் அடுத்த தலைமுறையினருக்கு பிரகாசமானதும் ஆரோக்கியமானதுமான எதிர்காலத்தை கட்டமைக்க முடியும் என்பதே இந்த வலையமைப்பில் இணைந்துள்ளவர்களின் அசையாத நம்பிக்கை.

சமூக ஈடுபாடு மற்றும் சாத்தியப்பாடான நடைமுறைகள் மூலம், ஒவ்வொரு குழந்தையும் அவர்களின் சமூகப் பொருளாதார நிலையைப் பொருட்படுத்தாமல் கற்கவும், வளரவும், கூடிய வாய்ப்புள்ள சூழலை உருவாக்குவதே இந்த முயற்சிக்கு தொடக்கப்புள்ளி என்பது ஆரம்பித்தவர்களில் ஒருவரும் யாழ் பல்கலைக்கழக பழைய மாணவருமான முரளிதரன் செல்வராஜா அவர்களின் கருத்து.

இலங்கையில் உள்ள ஒவ்வொரு குழந்தையும், அவர்களின் சமூக பொருளாதார பின்னணியைப் பொருட்படுத்தாமல், கல்வி மற்றும் சுகாதாரத்தின் வலுவான அடித்தளத்துடன் தங்கள் கனவுகளைத் தொடர ஐயமிட்டுண் உதவுகிறது. நீண்ட கனவுடன் சமூக மாற்றத்திற்கான ஊக்கியாக இருக்க முயற்சிக்கிறது. மதிப்புமிக்க சமூகத்தை வளர்க்கவும், அதன் இளைய உறுப்பினர்களின் நல்வாழ்வு மற்றும் வளர்ச்சியை தீவிரமாக ஆதரிக்கும் அமைப்பாக வளர்ந்து வருகிறது.

சமூகத்தின் தேவைகளை அந்த சமூகத்தின் முனைப்பை ஊக்கியாக்கி அதன்மூலம் ஒரு நிரந்தர தீர்வை எட்டும் இந்த அமைப்பினரின் பொறிமுறை ஒரு முன்னுதாரணமான செயற்பாடாகும்.

இலங்கையில் ஏற்பட்ட இனவாதப்போர், தமிழ் மக்களின் வாழ்க்கைமுறையை மட்டுமன்றி எமது சமூக கட்டமைப்புகளையும் முற்றிலுமாக பாதித்து விட்டிருக்கிறது, போரும் அதன் விளைவுகளும், ஒரு சமுதாயத்தின் இயல்பு நிலையை முற்றிலும் மாற்றக்கூடியவை என்பது அதனியல்புதான் எனினும் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முப்பது வருடங்களாக நடந்து முடிந்த கொடிய இனவாதப் போரின் காரணத்தால் தமிழர் சமூகம் இன்று மீள்கட்டமைப்பு பாதையில் பயணிக்க வேண்டியிருக்கிறது இத்தகைய மீள்கட்டுமான நடைமுறை



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 51 5/27/2025 8:21:11 AM

களைத் திட்டமிடும்போது எமது சமூகம் எதிர்நோக்கும் உடனடித் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்வதோடு நின்றுவிடாமல், நீடித்த சமூக மேம்பாட்டையும் கருத்திலெடுத்து அதை நோக்கிச் சமூகத்தை வழிநடத்த வேண்டிய கட்டாயமும் இன்று உணரப்பட்டிருக்கிறது

போர் முடிவடைந்ததும், எம்மக்களில் பலரும் வெளிநாடுகளின் பெருநகரங் களை நோக்கிச் செல்வதையே தெரிவாக கொண்டனர். அத்தகைய வாய்ப்புகளின்றி. இயலுமைகளின்றி தாய் நிலத்தை மட்டுமே நம்பியிருக்கும் பெருமளவான தமிழ் மக்களை கருத்தில் கொண்டு திட்டமிடல்கள் செய்யப்படவேண்டும். உள்ளூர் சமூகங்களின் வேரைப் பலப்படுத்த, சமூக கட்டமைப்புகளிலும் அடித்தளங்களிலும் தொடர்ந்து ஊக்குவிப்பு வழங்கும் அவசியத்தை நாம் உணரவேண்டும்.

இத்தகைய முன்னெடுப்புகளின் வரிசை யில் "ஐயமிட்டுண்" என்ற சமூகத்திட்டம், ஒரு புதுமையான வழிகாட்டியாக விளங்குகிறது எனலாம். 'ஐயமிட்டுண்' என்பது, ஒருவருக்காக மற்றவர் தன்னார்வமாக வழங்கும் அன்பையும் அக்கறையையும் அடிப்படையாக கொண்டே கட்டமைக்கப்பட்டுள்ளது. உதவும் மனப்பான்மையையே மூலதனமாக கொண்டியங்கும் இந்த அமைப்பு, வறிய மற்றும் தேவையுடைய மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

பாடசாலை சமூகத்துடன் இணைந்து பெற்றோர், ஆசிரியர்கள், மற்றும் மாணவர்கள் இணைந்து செயல்படுவது ஐயமிட்டுண் திட்டத்தின் தனிச் சிறப்பாகக் குறிப்பிடக்கூடிய விடய மாகும்.

கனடாவின் ஒன்ராறியோ மாகாண அரசு, அவுஸ்திரேலிய அரச குடும்பம் உட்படப் பல்வேறு பாராட்டுகளைப் பெற்ற இத்திட்டம் எமது சமூகத்தின் மத்தியிலும் பெரு வரவேற்பை பெற்றுள்ளது. இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து அவுஸ்ரேலியாவில் வசிக்கும் யாழ் பல்கலைக்கழகத்தின் பழையமாணவர்களான திரு. முரளிரதரன் மற்றும் திரு. ரூபன் ஆகியோரின் முன்முனைப்பில் தமிழ் சமூகத்தின் பல்வேறு ஆளுமைகளும் இணைந்து கொள்ள ஐயமிட்டுண் இன்று பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கிறது.

உதவி என்பது மேல்நிலையில் இருந்து வழங்கப்படும் ஒன்றல்ல மாறாக, உதவிகள் மூலம் சமூகத்தில் ஒற்று மையும், சமூகநீதியும் சம உரிமையும் உருவாக வழிசெய்ய வேண்டும் என்பதே இவர்களின் உதவித்திட்ட அணுகுமுறையின் அடிப்படை.

உதவி பெறுநர்களை சுயமாக இயங்கக் கூடியவர்களாக மாற்றும் பொறி முறையை உதவிகள் கட்டமைக்க வேண் டும். அத்தகைய உதவிகளே உண்மைப் பயன் விளைவிப்பவை என்பது காலங்கள் கடந்தும் நிலைத்து நிற்கும் தமிழர்களின் சித்தாந்தம். அதனையே ஐயமிட்டுண் நடைமுறைப்படுத்துகிறது.

அவர்களின் செயற்றிட்டத்தில் பாடசாலையின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணியில் அந்தந்த பாடசாலைகளின் பெற்றோரும் பாட சாலை நிர்வாகமும் நேரடியாக பங்கெடுக்கிறார்கள். இது மாணவர் களுக்கு மட்டுமல்ல, குடும்பங் களுக்கும் ஒரு சமூகத்திற்குமாக கூட்டுச் சிந்தனைக்கான வழியை ஏற்படுத்திக் கொடுக்கிறது.



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 52 5/27/2025 8:21:11 AM

ஐயமிட்டுண் தனது சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் அடுத்த படிநிலையாக கல்வி செயற்பாடுகளின் நடைமுறையில் சிறு பிரதேச மற்றும் கிராமிய நிலையில் எதிர்நோக்கப்படும் சவால்களை இனம் கண்டு அவற்றுக்கான தீர்வுகளை காண்கிறது. தொழிநுட்ப வளர்ச்சியுடன் இணைந்த இணையவழி கல்வி வாயிலாக கல்வியைப் பரப்பும் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெருமளவு பிரச்சனைகளைத் தீர்க்கிறது. பெருநகரப் பகுதிகளில் வசிக்கும் மாணவர்களுக்கு நவீன கல்வி மற்றும் தொழில்நுட்பம் எளிதாகக் கிடைக்கின்றன. ஆனால், புறநகரம் மற்றும் கிராமப்புறங்களைச் சேர்ந்த மாணவர்கள் இன்னும் இதை அடைய முடியா நிலையிலேயே இருக்கிறார்கள்.

இந்தச் சிக்கலைக் குறைக்கும் முகமாக மாணவர்களுக்கு நேரடி பயிற்சி வழங்குவதோடு மட்டுமல்லாமல், அவர்களின் கல்வியறிவை மேம்படுத்தவும், உலகின் மற்றைய பாகங்களில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளோடு தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு தன்னம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்கிச் செல்லவும் ஐயமிட்டுண் சமூகத்தோடு இணைகிறது.

இத்தகைய முயற்சிகள், தமிழர் சமூகத்தின் தன்னிறைவு முயற்சிகளுக்கான சிறந்த அடித்தளங்களாக அமைகின்றன. குறிப்பாக, கல்வி வாயிலாக ஏற்படும் மேம்பாடு, எதிர்கால சமூக கட்டமைப்பை உறுதிப்படுத்தக்கூடிய வலுவான சக்தியாக அமைகிறது.

ஐயமிட்டுண் திட்டத்தின் வெற்றிக்கு பிரதான காரணமாக அமைவது அதன் பின்னணியில் செயற்படும் தன்னார்வலர்கள் மற்றும் சமூக ஆளுமைகளின் பங்களிப்பு ஆகும். பல்வேறு துறைகளில் உள்ள நிபுணர்களும் இந்த சமூக சேவையில் தாமாக முன்வந்து இணைந்துகொண்டு செயற்படுகின்றனர் என்பது இந்த அமைப்பின் பலமாக இருக்கிறது.

ஒரு சிறிய திட்டமாகத் தொடங்கிய இந்த முயற்சி, இன்று தமிழ்ப் பகுதிகள் பலவற்றில் பரந்து செயல்படுகிறது.

ஒரு சமூகத்தின் மேம்பாடு, வெறும் பொருளாதார மேம்பாட்டால் மட்டுமே நிகழாது. உண்மையான மேம்பாடு என்பது சமூகத்தின் ஈடுபாட்டிலும் ஒற்றுமையிலும், செயல்பாடுகளிலும் நிலைத்திருக்க வேண்டும். அந்த வகையில், ஐயமிட்டுண் போன்ற திட்டங்கள், தமிழர் சமூகத்திற்கு ஒரு நம்பிக்கையாக தெரிகின்றன.

இளைஞர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என அனைவரும் இது போன்ற திட்டங்களில் பங்கேற்கும் பொழுது, சமூகத்தில் ஒரு புதிய புரட்சி ஏற்படும். நீடித்த வளர்ச்சியும், நம்பிக்கையும், எதிர்காலத் திட்டமிடலும் இவற்றின் வழியாக உருவாகும்.

எனவே, ஐயமிட்டுண் போன்ற திட்டங்களைதொடர்ந்து ஊக்குவிக்கவும், இது போன்ற மேலும் பல முயற்சிகளை உருவாக்கவும் இன்றைய காலத்தின் தேவை எம்மை வலியுறுத்துகிறது.

**லக்சினி ரூபநந்தன்**
*2007- 2011*
பொருளியல் துறை, கலைப்பீடம்.



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 53 5/27/2025 8:21:11 AM

# Ma Connexion au Sri Lanka : Une Histoire d'Origine et de Nostalgie

Mes racines plongent profondément dans le sol du Sri Lanka, cette île de l'océan Indien marquée par sa beauté, son histoire, mais aussi ses blessures. C'est de là que viennent mes parents, tamouls originaires du nord du pays. Ils ont grandi dans un contexte difficile, où la guerre civile a bouleversé leur quotidien. Vers la fin des années 1980, confrontés à l'instabilité et à l'insécurité, ils ont pris la décision de quitter leur terre natale. Ce déracinement, aussi douloureux que nécessaire, les a menés jusqu'en France, à Paris, où ils ont tenté de reconstruire une vie loin de leur pays d'origine.

C'est là que je suis né, dans une culture hybride. D'un côté, le cadre français, mon quotidien, l'école, la langue, la société. De l'autre, la culture tamoule transmise à la maison, à travers la langue, les repas, les valeurs et les souvenirs racontés. Malgré la distance avec le Sri Lanka, mes parents ont toujours fait l'effort de garder cette culture vivante. L'un des éléments les plus marquants pour moi a été l'apprentissage de la langue tamoule.

De l'âge de 6 ans à 17 ans, j'ai suivi des cours au Tamil Cholai. Tous les week-ends, j'apprenais à lire, écrire et comprendre cette langue, à travers des textes classiques, de la grammaire, mais aussi des poèmes et des maximes de sagesse. Ces années ont joué un rôle essentiel dans mon identité. Elles m'ont permis non seulement de communiquer avec mes proches restés au pays, mais aussi de comprendre la profondeur de la culture tamoule. J'ai également participé à des concours de Thirukkural, où je devais réciter des kurals — ces courtes phrases pleines de philosophie — devant un public. Ces tournois m'ont appris la rigueur, la mémoire, mais aussi la fierté de représenter ma culture dans un cadre francophone.

Ma connexion au monde tamoul passe aussi par le cinéma, qui a toujours eu une place importante dans ma vie. Depuis pe-





A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 54 5/27/2025 8:21:11 AM

tit, je regarde des films tamouls avec ma famille. Ces œuvres, bien qu'indiennes dans leur origine, reflètent les valeurs, les histoires, les émotions du peuple tamoul. Un acteur en particulier m'a toujours inspiré : Vijay. À travers ses rôles, il incarne des idéaux auxquels je m'identifie : la détermination, le respect de la famille, le courage face à l'injustice. Son charisme, sa présence à l'écran, sa manière de faire passer des messages puissants ont fait de lui une figure marquante pour moi. Il représente, à sa manière, un lien moderne avec mes racines.

Et pourtant, malgré tout ce bagage culturel transmis ici en France, une partie de moi a toujours ressenti un manque. Je ne suis allé au Sri Lanka qu'une seule fois, il y a 13 ans. Ce voyage reste gravé dans ma mémoire. J'étais jeune, mais je me souviens encore des maisons que mes parents m'ont montrées, des routes qu'ils empruntaient, des paysages qu'ils décrivaient depuis des années. Voir en vrai ce qu'ils m'avaient raconté pendant toute mon enfance a été une expérience à la fois émouvante et troublante. Cela m'a permis de mettre des images sur des souvenirs que je n'avais jamais vécus moi-même.

Depuis, ce voyage m'habite. J'ai un désir profond d'y retourner. Aujourd'hui, je suis en train de préparer un nouveau voyage au Sri Lanka, avec une perspective différente. Ce n'est plus seulement la terre de mes parents, c'est aussi une part de mon identité que je veux explorer. Je veux comprendre davantage l'histoire du pays, découvrir ses paysages, ses villes, ses habitants, et aussi m'ouvrir aux autres cultures présentes sur l'île. Le bouddhisme, par exemple, est très ancré au Sri Lanka. Même si je suis tamoul, j'ai envie de comprendre cette spiritualité, d'en apprendre plus sur ses temples, ses pratiques, sa place dans la société sri-lankaise.

Ce projet de retour n'est pas simplement touristique. C'est une démarche personnelle, presque nécessaire. C'est un moyen de me reconnecter avec mes racines, de comprendre d'où je viens, et de mieux savoir où je vais. Le Sri Lanka n'est pas qu'un souvenir transmis par mes parents. C'est un pays que je veux redécouvrir par moi-même, avec mes yeux, mon esprit, et mon cœur.

***VASIDDAN Agash***

*étudiant en 2ième année à l'ESTP PARIS.*





A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 55 5/27/2025 8:21:12 AM

# பேர்சரிக் காசில் வந்த ‘அம்பலம்’

‘பேர்சரி வரும்போது மட்டும் சிற்றிதழ்’ என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஆனால் அப்படியும் ஒரு சிற்றிதழ், யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்து தான் இருக்கின்றது.

இலக்கியச் சஞ்சிகைகள், சிற்றிதழ்கள் என்பன வெளிவரும்போது ஒரு காலக்கிரமத்தைக் கடைப்பிடிப்பதுண்டு. வார இதழ், மாத இதழ், காலாண்டிதழ், அரையாண்டிதழ், ஒரு வருடத்துக்கு ஒருமுறை என்று இந்த இதழ்கள் வெளியாகும் காலக்கிரமம் அவற்றின் ஆசிரியர்குழுவால் தீர்மானிக்கப்படும்., தமிழகத்தில் ஒரு சிற்றிதழ் இந்தக் காலக்கிரமத்தைக் கைக்கொள்ள முடியா மல் ‘நினைத்தபோது வரும் சிற்றிதழ்’ என்று வித்தியாசமான ஒரு காலக் கிரமத்தைப் பிரகடனப்படுத்திக்கொண்டு வெளிவந்தது. ஆசிரியர்களுக்கு எப்போது அந்த இதழை வெளியிடலாம் என்ற சூழல் அமைகின்றதோ அப்போதுதான் அது வெளியாகும். அதுவரைக்கும் வாசகர்கள் ‘எப்போது அடுத்த இதழ் வெளியாகும்?’ என மூக்குச் சாத்திரம் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதுதான்.

கிட்டத்தட்ட அதேபோன்ற புதுமையான காலக்கிரமத்தை வரித்துக்கொண்ட சிற்றி தழ்தான் அம்பலம்.

ஊர்கூடித் தேரிழுப்போம் என்ற மகுடவாசகத்தோடு 2002 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இப்படி ஒரு சிற்றிதழ்









வெளிவந்தது கூட தற்செயல்தான். நாங்கள் பல்கலைக்கழகத்துக்குப் போனபோது, எல்லாமே ஒருவித இயந்திரத்தனத்தோடு நடப்பதாக உணர்ந்தேன். விரிவுரைகள், அது முடிய ஒப்படைகள், உணவுவேளை, நண்பர்களுடன் அரட்டை, வீடு திரும்பல்



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 56 5/27/2025 8:21:12 AM

இப்படி ஒரே வட்டத்திலேயே பல மாதங்கள் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தேன். அம்மா ஒவ்வொரு நாளும் பொக்கற்றில் வைத்துவிடும் 50 ரூபாவுக்குள் தான் ஒருநாள் வாழ்க்கையை எப்படியேனும் சமாளிக்கவேண்டும். சாப்பாடு, தேத்தண்ணி, கொப்பி, பேனை, போட்டோக்கொப்பிச் செலவு என எல்லாமே அந்த 50 ரூபாவுக்குள் தான். வீட்டில் இருந்து 15 கிலோ மீற்றர் சைக்கிள் ஓடி கம்பஸுக்குள் வரவே நாக்குத் தள்ளிவிடும். அதைவிட வியர்வை முழுதாக என்னையும், சட்டையையும் நனைத்து ஊறவைத் திருக்கும். ஆட்டுமந்தைகள் போல வருவதும்,விரிவுரையாளர்கள் சொல் வதைக் கேட்பதும், போவதுமாக இருப்பதுதான் கம்பஸ் வாழ்க்கையா? என்ற சலிப்பு மேலெழத் தொடங்கியது. பல்கலைக்கழகம் வருவதற்கு முன்னர் நிறையக் கனவுகள் இருந்தன. கம்பஸுக்குப் போனால், இந்த உலகத்தையே பிரட்டிப் போட்டுவிட லாம் என்றெல்லாம் அந்தக் கனவுக் குதிரைகளில் ஏறிப் பாய்ந்திருக்கிறேன். ஆனால் யதார்த்தமோ ஒரு நொண்டிக் குதிரையில் கூட ஏறவிடவில்லை. மாறாக செக்குமாட்டில் ஏற்றிவிட்டு, ஒரே வட்டத்தில் சுற்றச்செய்து கைகொட்டிச் சிரித்தது காலம்.

காலத்தையும், செக்குவட்டத்தையும் உடைக்கவேண்டும். அப்போதுதான் ஏதும் அற்புதம் நிகழும். அந்த அற்புதம் அம்பலமாக மாறும் என்பது அப்போது நான் நினைத்திருக்கவே இல்லை. நான் நாடகத்துறை என்பதால், பத்திரிகையில் வந்த விளம்பரம் ஒன்றைப் பார்த்து விட்டு, நாடகமொன்றில் பகுதிநேரமாக இணைந்துகொண்டேன். நாடகப்பயிற்சி யொன்றின்போதுதான் நானும், லக்ஷ்மணனும் (லக்கி) நட்பானோம். இருவருமே யாழ். பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் ஒரே வருட அணியாக இருந்தாலும், நாடகப்பயிற்சியின் போது தான் ஆளையாள் அறிந்து கொண்டோம். அந்த நட்பு போர், ஊர், உலகம் என்று எங்கெல்லாமோ சென்று கடைசியில் இலக்கியம் என்ற முட்டுச்சந்தில் வந்து நின்றுகொண்டது.

இருவரும் நாங்கள் வாசித்தவற்றை, ஆச்சரியப்பட வைத்த படைப்பாளி களைப் பற்றி இரவு பகலாகப் பகிரத் தொடங்கினோம். ஒருநாள் லக்கியின் வீட்டில் படுத்திருந்தபடி கதைத்துக் கொண்டிருந்தபோது 'ஏன் நாங்கள் ஒரு இலக்கிய சஞ்சிகை தொடங்கக் கூடாது?' என்று நான் கேட்க, லக்கியும் போர்வையை உதறிவிட்டு 'நல்ல ஐடியா, ஆனால் கனகாசு தேவைப்படும்' என்று எழுந்துவிட்டான். எனக்கு சிறுவயதில் இருந்தே சஞ்சிகைகள் வெளியிடுவதில் ஆர்வம் அதிகம். பள்ளிக்கூடங்களில் நிறையக் கையெ ழுத்துச் சஞ்சிகைகளை தனியனாக நானே தயாரித்திருந்தேன். அதன் பின்னர் அடங்கிக் கிடந்த அந்தச் சஞ்சிகை ஆர்வம் மீண்டும் உயிர்பெற்றது. அன்றைய இரவு முழுதும் சஞ்சிகை பற்றிய கதையாடல்களோடு கரைந்து போனது. தனியே இலக்கியம் மட்டு மல்லாமல் சமூகம் சார்ந்த விடயங்களும், இருக்கவேண்டுமென முடிவெடுத்தோம். ஆனால் அந்த ஓரிரவுக்குள் சஞ்சிகைக்கு 'அம்பலம்' என்ற பெயரும் வைத்து, அதில் என்னென்ன விடயங்கள் வரவேண்டும், 10 ரூபாவுக்குத்தான் விற்கவேண்டும் என்றெல்லாம் முடிவு செய்துவிட்டோம்.

அடுத்தநாள் காலையே அச்சகம் தேடும் படலம். அடிமுடி தேடிய விஷ்ணுவும், பிரமாவும் போல லக்கி ஒருபுறமும், நான் இன்னொரு



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 57 5/27/2025 8:21:13 AM

புறமுமாக மலிவான விலையில் அச்சிட்டுத்தரக்கூடியவர்களைத் தேடினோம். நாங்கள் முதலே தீர்மானித்ததன்படி *10* ரூபாவுக்குள் *40* பக்கங்கள் கொண்ட சஞ்சிகையை அச்சிட எல்லோருமே தயங்கினர். ஆனாலும் கடைசியில் எமக்கென ஒரு அச்சகம் (பிள்ளையார் அச்சகம்) வாய்த்தது. அல்லது அவர்களுக்கு நாம் வாய்த்தோமோ தெரியவில்லை. இதுவரையும் கண்ணீர் அஞ்சலி நோட்டீஸைத் தவிர வேறெதையும் அச்சிட்டிராத, தொழில்முறையிலான அச்சியந்திரங்கள் இல்லாத அந்த அச்சகத்தில் தான் அம்பலம் உருவானது. வெறும் போட்டோக் கொப்பி இயந்திரத்தில்தான் அத்தனை பக்கங்களும் அச்சிடப்பட்டன. அட்டைப் படம் வர்ணம் என்பதால் அதைமட்டும் வேறொரு அச்சகத்தில் அச்சிட்டோம். எமக்குப் பழக்கமான படைப்பாளி களிடம் கெஞ்சிக் கூத்தாடி ஆக்கங்களைப் பெற்றுக்கொண்டோம். நாங்களும் எழுதினோம். எல்லாம் சரி. இப்போது காசு கொடுத்தால்தான் புத்தகத்தை வெளியே எடுக்கலாம், ஆனால் காசில்லையே. உழைத்தால் மட்டுமல்ல, யோசித்தாலும் காசு வரலாம். அப்படி நாங்கள் யோசித்துக் காசுக்காக கண்டுபிடித்த வழிதான் ‘பேர்சரிக் காசு’.

பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாண வர்களில் நல்ல பெறுபேறு பெற்றவர் களுக்கு அரசாங்கம் மஹாபொல உதவிப்பணம் கொடுக்கும். அந்த உதவிப்பணம் கிடைக்காத (சிறந்த பெறுபேற்றை அடையாத எம்மைப் போன்ற) ஏனைய எல்லோருக்கும் மாதாந்தம் *2000* ரூபா உதவிப்பணம் கிடைக்கும். ஆனால் அந்தப் பணத்தை நான்கைந்து மாதங்களுக்கு ஒருமுறை தான் சேர்த்துவைத்துத் தருவார்கள். அதனால் ஒரேயடியாக கையில் ஆறாயிரம், எட்டாயிரம் என்று வரும். அடுத்தடுத்த கிழமைகளில் நல்ல சாப்பாட்டோடு பொழுதுகளோடு, காசும் கரையும். பிறகு பழைய குருடி கதவைத் திறவடிதான். பிளேன்-ரீயும், வீச்சு-ரொட்டியும் என்று உண்டியைச் சுருக்கவேண்டியதுதான்.

இப்படி மாதாந்த உதவிப்பணம் கிடைப்பது பொதுவாக வீட்டுக்காரருக்கு (பெற்றோருக்கு) தெரியாது. அதனால் துணிந்து அந்தக் காசை அம்பலத்துக்குப் போட முடிவெடுத்தோம். ஆனாலும் அந்தமுறை இருமாதக் காசாக ஆளுக்கு நாலாயிரமே கிடைத்தது. ஆயிரம் புத்தகத்துக்கும் பத்தாயிரம் வேண்டும். அதனால் எம்மோடு இணைந்து ஊர் கூடித் தேரிழுக்க பல்கலைக்கழக நண்பர்கள் சிலருக்கு கோரிக்கை விடுத்தோம். ‘நீங்களும் ஆளுக்கு ஆயிரம் ஆயிரம் எண்டு போட்டால், புத்தகம் வித்துமுடிய அந்தக் காசை நாங்கள் தாறம்’ என்று சொல்லிப்பார்த்தோம்.

‘மச்சான் புத்தகம் வாங்கிறதெண்டால் சொல்லு. வாங்கிறம். ஆனால் உந்த இலக்கியம், சஞ்சிகை எல்லாம் எங்களுக்குச் சரி வராது. நடேசப்பாவுக்கு குடுக்கவே இந்தக் காசு காணாது’ என்று அவர்கள் பின்வாங்கிக் கொண்டு, பின்னேரங்களில் நடேசப்பாவின் ‘கள்கலைக்கழகத்தில்’ அந்தக் காசை தண்ணீராக இறைத்தனர். ஒருமாதிரி கைமாற்றாக சிலரிடம் இரண்டாயிரம் ரூபாவைப் புரட்டி, முதலாவது அம்பலத்தை வெளியே கொண்டு வந்தோம். போட்ட காசை எடுக்கவேண்டுமே. கம்பஸ் விரிவுரைகள் முடிந்ததுமே பெட்டியில் அம்பலத்தை அள்ளிப்போட்டுக்கொண்டு, கடை கடையாக, வீடு வீடாக ஏறி இறங்கத்



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 58 5/27/2025 8:21:13 AM

தொடங்கினோம். ஒரு மாதத்துக்குள் அவ்வளவு புத்தகங்களையும் விற்க முடியாதென்பது விளங்கிவிட்டது. ஆனால் முழுப் புத்தககங்களையும் விற்றால் தான் அடுத்த இதழை அச்சடிக்க முடியும். அடுத்த 'பேர்சரி காசு' வரவும் இன்னும் நாலைந்து மாதங்கள் ஆகிவிடும். என்றாலும் எப்படியோ ஒருமாதிரி ஒருவித ஓர்மத்தோடு முக்கால்வாசி புத்தகங்களை விற்றுவிட்டோம். அந்தக்காசை முற்பணமாகக் கொடுத்து, இரண்டாவது புத்தகத்தையும் வெளிக் கொண்டுவந்தோம். ஆனால் அதற்குப் பின்னர் இந்த மாத இதழ் என்ற வரையறைக்குள் நின்று கதகளியாட முடியவில்லை. அதன் பின்னர் தான் 'இப்பிடி ஒவ்வொருமாதமும் கஷ்டப்பட ஏலாது. நாங்கள் எப்பவெல்லாம் எங்களுக்கு பேர்சரி வருகுதோ அப்ப அம்பலத்தை அடிப்பம்' என்று முடிவெடுத்தோம்.

அதன்பின்னர் இரு இதழ்கள் இப்படி எப்போது வருமென எங்களுக்கே தெரியாமல் இருந்தன. அவை எப்போது வெளிவரவேண்டும் என்பதை பேர்சரிப் பணம் கொடுக்கும் வங்கிதான் தீர்மானித்தது. முதலில் சிறுபிள்ளைத் தனமாக வெளிவந்த அம்பலம் மூன்றாவது இதழில் இருந்து ஒரு தீவிர இலக்கிய சிற்றிதழாக பரிணமித்தது. ஈழத்து இலக்கிய உலகின் ஒரு அடையாளமாகவும் மாறியது. ஆனால் அதன் காலக்கிரமமற்ற வருகை வாசகர் மட்டத்தில் நம்பிக்கையீனத்தை உருவாக் கியது. அவர்களுக்குத் தெரியுமா, அம்பலத்தின் வருகை எங்கள் கையில் இல்லை பேர்சரிக் காசின் கையில் தான் உள்ளதென்று?

லக்கி பொதுக்கலை மாணவன் என்பதால் மூன்றாம் வருடத்தோடு அவன் வெளியேற, அதன் பின்னர் அவனுக்கு பேர்சரிக்காசு இல்லை. எனது காசை மட்டும் வைத்து அம்பலத்தை நடத்தவும் முடியாது. எனவே மூன்றாம் வருடத்தோடு, நான்கு இதழ்களோடு அம்பலம் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளி வருவது நின்று போனது.

### சில வருடங்களுக்குப் பின்னர்:

இப்போது லக்கி கனடாவில். நானும் ஒரு உத்தியோகத்தில். எங்கள் ஆசைப்படி அம்பலத்தின் இரு இதழ்கள் பல்கலைக்கழக வாழ்வுக்குப் பின்னர் வெளிவந்தன. அதன் அடுத்தகட்டமாக அம்பலம் பதிப்பகம் உருப்பெற்று இதுவரை மூன்று எழுத்தாளர்களின் அதுவும் அவர்களின் முதலாவது நூலை வெளியிட்டுள்ளது.

அம்பலம் நடுகை என்ற கவிதைக்கான தனி இதழையும் வெளியிட்டு வருகிறது.

**த. பிரபாகரன்** *(B.A hons(drama), |M.A(Tamil), Dip. in Jouranlism, Dip in Film Technology)*
பிரதம ஆசிரியர், உதயன் - சஞ்சீவி
யாழ்ப்பாணம்.





A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 59 5/27/2025 8:21:13 AM

# une enfant de la diaspora

***Akshaya Dhayabaran***

Je suis une adolescente de 16ans, née en France dans une famille tamoule. Bien que mes parents soient originaires du Tamil Eelam, je n'ai jamais eu l'occasion d'y aller.

Pourtant, cela ne m'a pas empêché de m'approprier la culture et de grandir avec. Vivre en France en tant qu'enfant d'immigrés n'a jamais été une tâche facile, surtout quand la différence entre les deux coutumes est flagrante : la culture française que je vis au quotidien en France ; et la culture tamoule que je retrouve à la maison, dans ma famille.

Je trouve ça même enrichissant de savoir parler deux langues, d'avoir deux visions du monde différentes, et de s'y adapter. À la maison, je parle tamoule avec ma famille, je mange les plats traditionnels, je participe aux fêtes culturelles et religieuses, et je vis selon les valeurs différentes que je vois généralement à l'extérieur. C'est une richesse, mais parfois aussi une pression, parce qu'on veut décevoir ni sa famille, ni les attentes de la société française. En dehors de la maison, je suis une lycéenne comme les autres, qui parle français, qui étudie, qui a des amis etc. Mais cette double identité est parfois dure à gérer.

C'est comme devoir jouer deux rôles différents, et ne même plus se sentir soi-même nulle part.

Être une jeune tamoule en France, c'est devoir confronter au quotidien des questions souvent déplacées, bien qu'elles puissent paraître inoffensives. À l'école, on me demande souvent "Tu viens d'où ?". Et quand je réponds "je suis née ici", cela ne suffit jamais. Il faut toujours que je me justifie, que je dise "mes parents sont originaires du Sri Lanka". On me rappelle sans cesse que je ne suis pas vraiment d'ici, que je suis qu'une simple étrangère. C'est blessant, surtout quand on a grandi ici, qu'on connait ce pays et ses coutumes par cœur, mais de ne jamais en faire réellement partie.

Et c'est d'autant plus difficile quand j'ai fait la moitié de ma scolarité dans une école privée catholique, où la diversité n'est pas toujours acceptée. Les remarques racistes sur les origines, la couleur de peau, et même la religion, sont parfois déguisées par de "simples blagues". On apprend très tôt à se taire, à encaisser, et même à en rigoler, car c'est ainsi que nos parents ont toujours fait. Malheureusement, ce genre de situation est très normalisé. Depuis la primaire, je subis et je grandis avec. Encore aujourd'hui, c'est quelque chose qui est devenu presque "banal" pour moi. Quand on est "différent", on n'a pas vraiment le choix ; s'adapter, c'est aussi apprendre à avancer, même si au fond, ça laisse des traces. Mais je n'ai pas envie qu'on me définisse par ces remarques. Je suis fière de qui je suis, d'où mes parents viennent, malgré des moments de doute. J'essaie de me dire que ma différence, c'est aussi ma force. Porter deux cultures, c'est un avantage précieux,



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 60 5/27/2025 8:21:13 AM

et il ne faut pas que j'en ai honte. C'est cette complexité qui nous rend unique. Et plus je grandis, plus je me rends compte du danger extérieur, de l'indifférence, du jugement des autres, et cette impression constante de devoir justifier ta place en société plus que les autres. Malgré tout, cette double identité m'a permis d'être beaucoup plus ouverte d'esprit et de forger ma personnalité. J'arrive à comprendre les différences culturelles, de m'adapter à des environnements variés, et de voir le monde sous plusieurs aspects.

Être bilingue par exemple, c'est un vrai atout. Ça me permet de parler avec mes parents ou mes grands-parents sans filtre, de comprendre leurs émotions et des expressions qu'on ne retrouve pas en français.

Avoir deux cultures, c'est aussi avoir un capital culturel bien plus développé que les autres (les films, les musiques, les fêtes etc). Ce sont ces petites choses qui nous permettent de nous démarquer et qui rendent notre parcours beaucoup plus intéressant.

Être tamoule en France, c'est aussi avoir une famille très soudée. Dans ma culture, la famille a une place centrale dans nos vies. Les décisions importantes sont prises ensemble, les générations vivent proches, et le respect des ainés est essentiel. Ce sont des valeurs qu'on acquiert tous depuis petits, et qu'on a accepté. Quand je compare cette structure familiale à celle des familles en France, je remarque l'écart profond entre les deux mondes. Et parfois, j'en souffre, surtout quand il s'agit d'expliquer à mes parents les "normes" de la société française, car ils y sont très éloignés. Ils ne comprennent pas toujours ce que je vis au quotidien, mais je n'ose pas leur dire pour éviter que ça leur fasse de la peine. Ils ont tout sacrifié pour que je puisse grandir dans un pays sans guerre – leurs études, leur chez-soi, leur famille, leurs amis – ils ont dû laisser derrière eux leurs chances de vivre comme nous. Alors je culpabilise parfois de ne pas pouvoir leur faire comprendre.

Malgré tout, ce n'est pas pour autant que je n'assume pas ma culture. J'ai conscience que dans notre monde actuel, il faut se battre chaque jour un peu plus fort pour se sentir légitime, et ne pas laisser les autres nous définir. Certes c'est injuste, mais cette réalité concerne beaucoup d'entre nous. Encore une fois, je suis fière de mes origines, et je continuerai à en apprendre davantage sur ma culture à travers les histoires de ma famille, les musiques, les films, et bien plus encore. C'est ma façon de rester connecté à mes racines, à des terres que je ne connais pas encore ; Et un jour, j'aimerai m'y rendre pour pouvoir enfin ressentir ce sentiment d'appartenance sans avoir à me justifier. En tant que jeunes générations tamoules, nous avons la responsabilité de porter notre

culture, de préserver notre héritage, le vivre pleinement et de pouvoir le transmettre aux générations futures.

Naandri vanakkam



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 61 5/27/2025 8:21:13 AM

# தமிழ் மொழியைப் பாதுகாப்பதில் உலகத் தமிழர்களின் சமூகப் பொறுப்பு

தமிழ் என்பது இனம், மொழி ஆகியவற்றை அடையாளப்படுத்தும் ஒற்றைச் சொல்லாகும்.

தமிழ் மொழி என்பது வெறும் வார்த்தைகளின் தொகுப்பாக, தொடர் பாடலுக்கு மட்டும் உரியதாக இல்லாமல் அது சமூகத்தின் சிந்தனை, உணர்ச்சி, அடையாளம் ஆகியவற்றின் பிரதிபலிப்பதாக இருக்கிறது. தமிழ் மொழியின் இத்தகைய பண்புகளே உலகமெங்கும் பரவியுள்ள தமிழர்களை பல்மொழி கலாசாரங்களுக்கு மத்தியில் தனிச்சிறப்பு மிக்கதாக அடையாளப் படுத்தி நிற்கிறது

முதலாம் நூற்றாண்டிலேயே தமிழர் நாகரிகம் தென்கிழக்கு ஆசியா, அரபு நாடுகள், மற்றும் சீனா வரை பரவியதை வரலாறு நிறுவுகிறது. கடல் வழியாக வணிகம் செய்த தமிழர்களும் பரந்து விரிந்திருந்த தமிழர் நிலப்பரப்பினோடு வர்த்தக தொடர்புகளை கொண்டிருந்த ஏனைய காரணிகளாலும் தமிழ் மொழியும் தமிழர் பண்பாடும் உலகின் பல பாகங்களுக்கும் பரவின. எனினும், 17-ம் நூற்றாண்டில் ஐரோப்பியப் பேரரசுகள் இந்தியா மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளை ஆட்சி செய்த போது, தமிழர்களை கூலித்தொழிலாளர்களாக பல்வேறு நாடுகளுக்கு அழைத்துச் சென்றனர். குறிப்பாக, பிரிட்டிஷ், பிரஞ்சு மற்றும் டச்சு ஆட்சியாளர்கள் தமிழர் களை சிங்கப்பூர், மலேசியா, மொரிசியஸ், ரியூனியன், குவாடிலூப், மார்டினிக், தென் ஆப்பிரிக்கா, பிஜி, கயானா, சுரினாம் போன்ற நாடுகளுக்கு இடம்பெயர்த்தினர்.

ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார தேவைகளுக்காக தாம் காலனித்துவ நாடுகளாக வைத்திருந்த பகுதிகளில் இருந்து ஐரோப்பிய பேரரசுகளும் அவர்களின் கொம்பனியாரும் கூலித் தொழிலாளர்களை கொண்டு சென்று குடியேற்றினார்கள்.

இந்தக் குடியேற்றங்கள் கட்டாய இடம் பெயர்வுகளாக இருந்தாலும், தமிழர்கள் தங்கள் கலாசார அடையாளங்களை பறிகொடுக்கவில்லை. அவர்கள் தங்கள் கோயில்களை, திருவிழாக்களை, சமய நம்பிக்கைகளை, மிக முக்கியமாக தமது தாய்மொழியான தமிழை, தங்கள் வாழ்வில் பாதுகாத்து வந்தனர். பல்தேசிய இனங்களின் கலாசாரங்களும் பண்பாடுகளும் பரிச்சய மான பின்பும் தமிழ் மக்கள் தமது பண்பாட்டின் மேன்மை கருதி அதைக் காத்து வந்தனர். இவ்வாறு குடிபெயர்ந்தவர்களின் சந்ததியினர் இன்றும் இந்த நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். மலேசியாவில் மட்டும் சுமார் 20 லட்சம் தமிழர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் இந்து மதத்தை பின்பற்றுபவர்களாகவும்,



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 62 5/27/2025 8:21:13 AM

இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதங்களை பின்பற்றுபவர்களாகவும் உள்ளனர். சிங்கப்பூரில் தமிழ் தேசிய மொழிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அரசு ஊடகங்கள், பள்ளிகள் மற்றும் பத்திரிகைகளில் தமிழ் அங்கீகாரம் பெற்றிருக்கிறது.

மொரிசியஸில் இன்னும் ஒருபடி மேலே சென்று தமிழ் இலக்கங்கள் அந்த நாட்டின் பணத்தாள்களில் இடம்பெறுகின்றன. இங்கு குடியேறிய தமிழர்கள் 125க்கும் மேற்பட்ட கோயில்களைக் கட்டியுள் ளனர். ஒவ்வொரு ஆண்டும் பொங்கல், தீமிதி, தைப்பூசம் போன்ற தமிழர் களின் பாரம்பரிய திருவிழாக்கள் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப் படுகின்றன. ரியூனியன் தீவிலும், தமிழர் வழிபாடுகள், காவடி எடுத்தல், முருகன் வழிபாடு ஆகியவை இன்னும் பின்பற்றப்படும் கலாசாரங்களாக இருக் கின்றன.

குவாடிலூப் மற்றும் மாட்டினிக் ஆகிய கரீபியன் தீவுகளைப் பொறுத்தவரையில் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்னிந்தியாவில் இருந்து கூலித்தொழிலாளர்களாக வந்து குடியேறிய தமிழர்களின் வாழ்விடமாக மாறிய தீவுகளாக இருக்கின்றன. இங்குள்ளவர்கள் பெரும்பாலும் புதுச் சேரி, காரைக்கால், மற்றும் மதராசு பிரதேசங்களில் இருந்து வந்தனர். பிரான்சிய ஆட்சியின்கீழ், 1853 முதல் 1885 வரை, சுமார் 42,000 இந்தியர்கள் குவாடிலூப்புக்கும் 25,000 இந்தியர்கள் மாட்டினிக்குக்கும் கொண்டு வரப்பட்ட தாக பதிவுகள் கிடைக்கின்றன.

இந்தக் குடியிருப்புகள் மேற்குலகில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட பண்ணை வேலை களுக்கான தொழிலாளர் தேவையை நிவர்த்திசெய்யும் நோக்கத்தில் நடை பெற்றவை. தொழிலாளர்கள், ஐந்து ஆண்டுகள் வேலை செய்யும் ஒப்பந் தத்தின் கீழ், இலவச பயணம் மற்றும் சம்பளத்துடன் கொண்டு வரப்பட்டனர். ஆனால், வந்த இடத்தில் கடுமையான வேலை மற்றும் வாழ்வாதார சிக்கல்களால், பலர் உயிரிழந்தனர். குவாடிலூப்பில் மட்டும், சுமார் பத்தாயி ரம்பேர் வரையில் இறந்து போனதாக அங்குள்ள தகவல்கள் மூலம் அறியமுடிகிறது.

வாழ்வாராதங்களில் பல்வேறு சமூகச் சிக்கல்களையும் கலாசார நெருக்கடி களையும் சந்தித்து வந்த போதிலும் தமிழர்கள், தங்கள் கலாசாரத்தையும் சமய நம்பிக்கைகளையும் உயிருக்கு நிகராய் தமது தாய்மொழியையும், பாதுகாத்து வந்தனர். குவாடிலூப்பில், பல கோயில்கள் கட்டப்பட்டன, அத்தோடு தமிழ் பாடல்கள், பிரார்த்தனைகள், பூசை வழிபாடுகள் இன்னும் சமய நிகழ்வுகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இருப்பினும் கால ஓட்டத்தில், சமூக தேவைகள், தொடர்பாடல் மூலமாக பிரெஞ்சு மற்றும் கிரியோல் மொழிகள் அதிக முக்கியத்துவம் பெற்ற சூழலில் தமிழ் மொழியின் பயன்பாடு படிப்படியாக குறைந்தது. இன்றைய தலைமுறையில், தமிழ் பேசுபவர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். எனினும், சமீபத்திய ஆண்டுகளில், தமிழ் மொழி மற்றும் கலாசாரத்தை மீண்டும் உயிர்ப்பிக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் உலகத்தமிழ் சமூகத்தின் ஆதரவுடன் அந்தமுயற்சிகள்



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 63 5/27/2025 8:21:13 AM

ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

மாட்டினிக்கிலும், தமிழ் கலாசாரம் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ‘இந்தியத்துவம்’ *(indianité)* என்ற இயக்கத்தின் கீழ், மக்கள் தங்கள் இந்திய மூலங்களை மீண்டும் அறிந்து கொள்ள முயற்சிக்கின்றனர். மட்டினிக்கில் உள்ள இந்துக் கோயில்கள் மற்றும் திருவிழாக்கள், தமிழ் கலாசாரத்தின் மீளுருவாக்கத்திற்கு பக்கபலமாக இருக்கின்றன.

குவாடிலூப் மற்றும் மாட்டினிக் தீவுகளில் வாழும் தமிழர்கள், பல சவால்களை எதிர்கொண்டும், தங்கள் கலாசாரத்தை, மதத்தை, மற்றும் மொழியை பாதுகாத்து வந்துள்ளனர்.

இன்றைய தலைமுறையில், தமிழ் மொழி மற்றும் கலாசாரத்தை மீண்டும் உயிர்ப்பிக்க, உலகத் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இது, எதிர்கால சந்ததிக்கு தமிழ் அடையாளத்தை உறுதியாக கடத்திட உதவும்.

இந்நிலையில், தமிழர் பகுதிகள் தவிர்த்து இந்தியாவின் பிற பகுதிகளில் இருக்கும் குறிப்பாக வட இந்தியாவின் கலாசார ஆதிக்கங்களை இந்து மதம் என்கிற அடிப்படையில் இந்த இடங்களில் புகுத்தி விட இந்திய அரசின் திட்டங்கள் பொருட் செலவுகளோடு முன்னெடுக்கப்பட்டு வருவது தமிழர்களின் அடையாளங் களை நசுக்க முயல்வதான குற்றச் சாட்டுகள் உண்டு. குறிப்பாக, ஹிந்தி மொழியை இந்தியாவின் மொழியாக கருத்துருவாக்கம் செய்து தாய் நிலத்தோடு தொடர்பும் பரிச்சயமும் இல்லாத மூன்றாம் தலைமுறை தமிழ் சமூகத்தை குழப்பத்திற்குள்ளாக்கி ஹிந்தியை திணிக்கும் இந்திய மத்திய அரசின் தந்திரத்திற்கு எதிராக தமிழ் சமூகம் ஒன்றாக வேண்டும்.

இந்திய அரசின் 'நம் இந்தியா திட்டம்', ‘காசி தமிழ் சங்கமம்’ போன்ற திட்டங்கள் ஒருபுறம் நல்ல நோக்கத்துடன் நடத்தப் படுவதாக கூறப்பட்டாலும் உண்மையில் தமிழர்களின் அடையாளங்களை பொது வான ‘இந்தியர்’ என்ற அடையாளத்தில் ஒழுங்குபடுத்த முயற்சிக்கின்றன என்ற விமர்சனத்திலும் உண்மையிருக்கிறது. எனவேதான் தமிழ் மொழியின் தனிச் சிறப்பை மங்கச் செய்யும் இவ்வாறான ஆபத்தான நிலைமைகளை இனங் கண்டு உலகதமிழ் சமூகம் விழித்துக் கொள்ளவேண்டும்.

இத் தலைமுறையை நாம் கவனிக்காமல் விட்டுவிட்டால், அதன் பின் வரும் சந்ததிகளுக்கு தமிழ் ஒரு அந்நிய மொழியாக மாறிவிடும் அபாயம் உள்ளது. தமிழ்மொழி மற்றும் கலாசாரத்தைக் கற்பிக்கும் முயற்சிகளை உலகளவில் செயல்படுத்த உலகத் தமிழ்ச் சமூகம் கட்டமைப்புகளைச் செய்ய வேண்டும்.

தமிழ் மொழியின் இருப்பும் தொடர்ச் சியும் உலகத் தமிழர்களின் செயல் பாடுகளால் மட்டுமே நிலைத்திருக்க முடியும். ஆகவே, நாம் அனைவரும் தமிழ் மொழியின் தூண்களாக, அதை பாதுகாக்கும் காவலர்களாக இருக்க வேண்டும்.

**சிந்துஜா செரோன்**
*31ஆம் அணி, கலைப்பீடம்*



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 64 5/27/2025 8:21:13 AM

# புலம் பெயர் நாடுகளில்

## பிள்ளைகளை வளர்ப்பதில் தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்

புலம்பெயர்வு என்பது ஒருவன் தான் வாழும் சூழலில் இருந்து முற்றிலும் வேறுபட்ட சூழலில் (தரைத்தோற்றம், அரசியல், சமூகவியல், பண்பாடு, காலநிலை) வாழ்வதனைக்குறிக்கும்.

தாயகத்தில் முப்பது வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்ற உரிமைக்கான போராட்டம், பல இலட்சக்கணக்கான உயிர்களை காவு கொண்டது. ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டனர். எஞ்சிய தமிழர் தலைமுறை தலைமுறையாக தாம் பிறந்து வளர்ந்த தாய் நாட்டையும் உயிருக்கு உயிராக நேசித்த உறவுகளையும் பிரிந்து மனங்களில் வலிகளைச் சுமந்தபடி பூமிப்பந்தெங்கும் சிதறிப்போயினர்.

போரின் மனவடுக்களுடன் தாயகத்தை பிரிந்து வந்தவர்கள் நம் தமிழ் உறவுகள். வந்த கடனை அடைக்கவும் தாயகத்தில் உள்ள தம் உறவுகளின் கண்ணீரை துடைக்கவும் கணவன் மனைவி என இருவரும் இரவு பகல் ஓய்வின்றி உழைக்கவேண்டியவர்களாக உள்ளனர். இதனால் பெற்றோரின் மடிகளில் வளராமல் குழந்தைகள் காப்பகங்களில் வளர்கின்றனர்.

இயந்திரத்தனமான ஐரோப்பிய வாழ்க்கையில் எம் பிள்ளைகளுடன் நேரத்தை செலவிட்டு அன்பையும் மன உணர்வுகளையும் பகிர்ந்து கொள்ள முடிவதில்லை. அதனால் பிள்ளைகளின் விருப்பு, வெறுப்புக்களையும் தேவைகளையும் தெரிந்து கொள்வதற்கான மனம்திறந்த ஆரோக்கிய மான தொடர்பாடல் எம் குடும்பங்களில் நிகழ்வதில்லை. இதனால் பெற்றோரும் பிள்ளைகளும் தனித்தனித் தீவுகளாகி விடுகின்றனர்.

இதற்கு மொழி ஒரு முக்கியமான தடையாக உள்ளது. இங்கு பெற்றோர் பேசும் தமிழ் பிள்ளைகளுக்கு முழுவதுமாக புரிவதில்லை. பிள்ளைகள் பேசும் வாழிட மொழி பெரும்பாலான பெற்றோருக்கு இலகுவாக விளங்குவதில்லை. இது வேதனைக்குரியது.

பெற்றோரின் மொழியறிவின்மையை பயன்படுத்தி சில பிள்ளைகள் தவறிழைத்து விடுகின்றனர் தன் காதலை ஏற்க மறுத்ததால், தன் பெற்றோர் இனவாதம் பேசுவதாக பொலீஸில் பொய்யாக முறைப்பாடு செய்து அவர்களை சிறைக்கு அனுப்பிய இளைஞர்களும் இங்குண்டு.

இங்கு பிள்ளைகளை வளர்ப்பது பெரும் சவாலானது. கத்தி முனையில் நடப்பதைப் போன்றது. ஏனெனில், நாம் பல் (மொழி, இனம், மதம்) கலாசாரச் சூழலில் வாழ்கின்றோம். நம் வீடுகளுக்குள் தமிழ் கலாசாரத்தை பின்பற்றுகின்றோம். ஆனால், நம் பெரும்பாலான பிள்ளைகள் மேலைத்தேய கலாசாரத்தை பின்பற்றவே விரும்புகின்றனர். வெளியே தம் நண்பர்களைப் போன்று தாமும் நடந்து கொள்ள முயற்சித்து, நாகரிகம் என்ற போர்வையில் முகம் சுழிக்க வைக்கும் செயல்களில் ஈடுபடுகின்றனர். சில தவறான நட்புக்களால், தவறான பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகி தம்



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 65 5/27/2025 8:21:13 AM

வாழ்வையும் அழித்து, பெற்றோரின் நிம்மதியையும் தொலைத்து விடுகின்றனர்.

எல்லா கலாசாரங்களிலும் நன்மைகளும் தீமைகளும் உண்டு. ஆனால், இரண்டும் கெட்ட வயதுகளில் எதை எடுப்பது? எதை தவிர்ப்பது? என்று தெரியாமல் தடுமாறித் தடம்மாறிப் போகிறது அவர்களது வாழ்க்கை. அதற்கு நவீன தொழில்நுட்ப சாதனங்களும் தவிர்க்க முடியாத காரணமாகி விடுகின்றன.

தாம் விரும்பிய எந்த ஒன்றும் உடனடியாக கிடைத்து விட வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கும் பிள்ளைகள் தம் பெற்றோரின் தியாகத்தையும் உழைப்பையும் புரிந்து கொள்வதில்லை. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் 16 வயதில் சாரதி அனுமதிப்பத்திரம் எடுப்பதற்குரிய வாய்ப்பு இருக்கின்றது. அதிக விபத்துக்களும் விபரீதங்களும் அரங்கேற இதுவும் வழி வகுக்கிறது.

இன்று வேண்டுமானால் நம்மவரில் பலர் இங்கு, தொழில் அதிபர்களாக, பல கோடி சொத்துக்களுக்கு சொந்தக்காரர்களாக இருக்கலாம். ஆனால், இந் நாடுகளுக்கு வந்திறங்கியபோது, எப்படி வந்தார்கள்? என்பது அவர்களுக்கு மட்டுமே தெரியும். தாய் மண்ணில் இருந்து விரட்டி அடிக்கப்பட்டு ஒற்றைப் பையுடன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வந்தவர்கள்தான் நம் தமிழர்.

ஆனால், பெரும்பாலான பிள்ளைகள் இன்று தாம் வாழும் ஆடம்பரமான வாழ்க்கையும் உண்ணும் உணவும் உடுத்தும் உடையும் படிக்கும் படிப்பும் தம் பெற்றோரின் கடின உழைப்பினால் தான் கிடைத்தது என்பதை உணர்வதும் இல்லை. பணத்தின் பெறுமதியை மதிப்பதும் இல்லை. ஏனெனில், எல்லாமே அவர்களுக்கு இலகுவாக கிடைத்து விடுகிறது. பெற்றோரும் அதை உணர்த்தத் தவறிவிடுகின்றனர்.

புலம்பெயர்ந்த எந்த ஒரு தமிழனும் இதனை இறுதி வரை மறக்கமாட்டான். மொழி தெரியாத ஐரோப்பிய நாடுகளில் வந்திறங்கி விசா இன்றி, வேலை தேடி எத்தனை நாட்கள் தெருக்களில் அலைந்திருப்பான்! வந்த கடனை அடைக்க முடியாமல் எத்தனை இரவுகளை கண்ணீரில் கரைத்திருப்பான்! பட்ட அவமானம், தோல்வி, வேதனை, மனக்காயம் என்பவற்றை மறக்கவும் முடியாமல் மறைக்கவும் முடியாமல் எப்படி தவித்திருப்பான்! இவற்றில் சிலவற்றையேனும் தம் பிள்ளைகளுக்கு சொல்ல வேண்டும். இது வழி தவறிப் போகிற நம் பிள்ளைகள் சரியான பாதையில் நடக்க வழிகாட்டியாக இருக்கும்.

பனிக்குளிரில் நடுங்கியபடி அதிகாலை வேளை சென்று நள்ளிரவில் வீடு திரும்பும் அப்பாக்களின் உழைப்பையும் உணர்வுகளையும் அநேக பிள்ளைகள் தெரிந்து கொள்வதுமில்லை. அப்பாக்கள் அவற்றை சொல்வதும் இல்லை.

ஒவ்வொரு பிள்ளைக்கும் 5 வயது வரை அப்பா ஒரு கதாநாயகன், 18வயதில் அவர் எதிரி, 40 வயதிற்கு மேல் அப்பா தெய்வம் ஆகிறார். தாம் பார்க்காத உலகத்தையும் தம் பிள்ளைகள் பார்த்துவிட வேண்டும் என ஆசைப்படுகின்றனர் பெற்றோர். தம் பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்ற உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையிலும்: விடுமுறை நாட்களிலும் கூட வேலை களுக்கு செல்லும் பெற்றோர் அநேகர் நம்மில் உள்ளனர்.

கல்லூரி மாணவர்களுடன் சுற்றுலா செல்லும் தம் பெண் பிள்ளைகளுக்கு கூடவே கருத்தடை சாதனத்தையும் வாங்கி கொடுத்து அனுப்ப வேண்டிய நிலை சில ஐரோப்பிய நாடுகளில் நிலவுகிறது. இங்கு பெற்றோரின் மன நிலை எப்படி இருக்கும் என எண்ணிப் பாருங்கள்.



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 66 5/27/2025 8:21:13 AM

பிள்ளைகளின் தவறான நடத்தைகளால் முதுமைக்காலத்தில் தம்முள் முரண் பட்டுக் கொண்டு விவாகரத்தாகி தனித்து வாழும் பெற்றோர்களும் இங்குள்ளனர். தம் பிள்ளைகள் ஆசைப்பட்டார்கள் என்பதற்காக பிறந்த நாள் பூப்பு புனித நீராட்டு விழா என்பவற்றை வட்டிக்கு கடன் வாங்கி ஆடம்பரமாக கொண்டாடுகின்றனர். பின் வாங்கிய கடனை அடைக்க வழி தெரியாமல் போதைக்கு அடிமையாகி, மன நலம் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை !

தாயையும் தாய்மண்ணையும் பிரிந்து வந்து, ஒற்றை அறையில் வாழ்க்கையை தொடங்கிய எம்மவர்கள். தகவல் தொழில்நுட்பத்தால் உலகம் உள்ளங் கைக்குள் வந்தது உண்மை தான். அதேவேளை நான்கு சுவருக்குள் இருந்தும் பெற்றோரையும் பிள்ளை களையும் ஆளுக்கொரு மூலையில் தொலைத்து விட்டதும் இத் தொலைபேசி தான். இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரிய வரப்பிரசாதம் இன்று கொரோனாவை விட மிகவும் கொடியதாக மாறி விட்டது.! நம் பிள்ளைகளின் கைகளில் இருக்கும் தொலைபேசி பெற்றோரின் நிம்மதியை தொலைத்து விட்டது. நம் பிள்ளைகளின் கைகளில் நாமே கூரான ஆயுதங்களை கொடுத்துள்ளோம். அது எதை வெட்டப் போகிறது என்பது அவர்களின் கைகளில் தான் தங்கியுள்து.

பிள்ளைகளும் அவர்கள் கையாளும் சமூக வலைத்தளங்களும் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் வரை எல்லாம் சுகமானது தான். அது எப்போது நம் கட்டுப்பாட்டை உடைத்துக்கொண்டு போகின்றதோ அப் போது அது சுமையாகவும் சாபமாகவும் மாறிவிடுகின்றது.

இன்று எம் பிள்ளைகள் உயிர் அற்ற கருவிகளுடன் வாழப் பழகிவிட்டார்கள். அவற்றிற்கு கொடுக்கும் மதிப்பில் கடுகளவேனும் உயிருடன் இருக்கும் மனித உறவுகளுக்கு கொடுப்பதில்லை. அதற்கு எம்பெற்றோரின் வளர்ப்பு முறையும் மனப்பாங்கும் தான் காரணமாகிறது. சில பெற்றோர் அளவுக்கு அதிகமான கண்டிப்பும் அதிகாரமும் செலுத்தி வளர்க்கின்றனர். இல்லையேல் தம் பிள்ளைகளை கண்மூடித்தனமாக நம்பி தேவைக்கு மீறிய சுதந்திரத்தை கொடுத்து சீரழித்துவிடுகின்றனர். தனக்கு கிடைக்காத எல்லாம் தன் பிள்ளைக்கு கிடைத்து விட வேண்டும் என்ற பேரோசையும் அளவு கடந்த பாசமும் அவர்களிற்கே ஆபத்தாகி விடுகிறது.

பிள்ளைகளை எப்படி வளர்ப்பது? என்று ஆயிரம் புத்தகங்கள் எழுதலாம். ஆலோசனைகள் கூறலாம். சமூக வலைத்தளங்களில் பதிவும் செய்யலாம். அதனைப் படிக்கவும் கேட்கவும் சுகமாக இருக்கலாம் ஆனால் நடைமுறையில் இந் நாடுகளில் பிள்ளைகளை வளர்ப்பது சவாலானதே.

**திருமதி மலர்ச்செல்வி வில்வராஜா**
*1993/1994 கல்வியாண்டு*
*கலைப்பீடம், பிரான்ஸ்*





A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 67 5/27/2025 8:21:13 AM

# Entre deux mondes un seul cœur

Je suis citoyenne française et lycéenne.
Mes ancêtres sont tamouls.
Vivre entre ces deux cultures m'offre chaque jour de nouvelles expériences, des découvertes, des émotions.
Aujourd'hui, j'aimerais les partager.
Mon identité, je la construis chaque jour entre héritage et avenir.
Je suis née en France, dans un pays où mes racines n'avaient pas encore poussé.
Et pourtant, elles sont là. Invisibles. Profondes.
Ancrées quelque part entre ce que ma famille m'a transmis et les rêves que je fais la nuit.
Je suis tamoule. Et je suis française.
Entre ces deux mondes, j'avance.
Avec mes doutes, mes forces, et tout ce que je ne dis pas toujours à voix haute.
La France a accueilli mes parents avec bienveillance.
Elle leur a offert une nouvelle vie, paisible, libre, digne.
Ici, ils ont pu reconstruire leur avenir, poser les fondations de notre famille.
Et ici, moi, j'ai grandi dans les valeurs de liberté, d'égalité et de fraternité.
À la maison, on parle tamoul.
On vit au rythme de notre culture, de nos prières, de nos plats aux mille épices.
J'ai grandi entourée de traditions, bercée par des chants que ma mère fredonnait, et des
histoires racontées dans une langue que mes amis d'école ne comprennent pas.
Dehors, c'est un autre monde.
Celui de l'école républicaine.
Celui qui m'a appris à réfléchir, à m'exprimer, à rêver plus grand.Grâce aux professeurs que j'ai rencontrés, à leur bienveillance, à leur écoute, j'ai pu croire
en mes capacités, m'épanouir, me projeter.
Ils m'ont accompagnée, soutenue, encouragée.






A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 68 5/27/2025 8:21:13 AM

La France, à travers son système éducatif, a toujours été un appui solide dans mon chemin.
Un jour, j'ai chanté La Marseillaise pour la commémoration de l'Armistice.
C'était un moment fort. Je me sentais entière, à ma place.
Fière d'être française.
Une remarque blessante ce jour-là m'a rappelé que certains regards restent fermés.
Mais je n'ai rien dit.
J'ai observé. J'ai compris.
Et en silence, j'ai planté une racine de plus dans cette terre qui m'a tant donné.
Je suis restée debout. Avec dignité.
Comme on me l'a appris.
Mon père rêvait de devenir ingénieur. Il excellait en sciences et avait obtenu son baccalauréat dans son pays d'origine.
Mais les circonstances de la vie l'ont amené à tout quitter.
Il a dû laisser derrière lui ses études, ses ambitions, et prendre un autre chemin.
Aujourd'hui, c'est moi qui porte ce rêve.
Et grâce à la France, j'ai les moyens de le poursuivre.
Je veux devenir scientifique, pour comprendre, soigner, inventer. Et peut-être, un jour, aider
là-bas, là où mes parents ont tout laissé.
Depuis toujours, je vis entre deux mondes.
Et cette double vie, parfois, elle pèse.
Mais elle me construit.
La France me donne les outils pour transformer ce mélange en force.
Je rêve d'un lieu que je n'ai jamais vu, mais qui vit en moi comme un souvenir ancien :
Le Sri Lanka. L'Île Sacrée.
Je sais qu'un jour, j'irai.J'en ai souvent entendu parler, j'en ai respiré l'âme à travers les récits, les parfums, les
danses, les silences.
Je rêve de marcher pieds nus dans les temples, de visiter les terres de mes ancêtres, de
sentir que je suis chez moi là-bas aussi.
Mais c'est ici, en France, que je construis mon avenir.
Je porte une histoire qui dépasse ma vie.
Un héritage tissé dans l'exil, dans la survie, dans la dignité.
Et je suis fière de ceux qui m'ont précédée.
Je suis leur voix.
Être une jeune Tamoule en France, ce n'est pas toujours facile.
Mais c'est une richesse immense.
Je suis le lien entre deux cultures, deux langues, deux histoires.
Et je suis reconnaissante à la France de m'avoir offert un foyer, une éducation, un avenir.
Je suis le pont.
Je suis la flamme qu'on croyait éteinte.
Je suis la réponse à ceux qui m'ont dit de partir.
Je suis là.
Et je suis fière.
Je suis née entre deux mondes,
mais aujourd'hui, c'est moi qui les relie,
avec la force de mes racines et le soutien d'une
République qui m'a toujours tendu la main.

***THEVAGNANAM Tharshika***
***Lycée Émile Dubois.***


A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 69 5/27/2025 8:21:14 AM

# எதிர்ப்பு உணர்வை உரிமைக் குரலாக்கிய அரங்கு –

பொதுவாக நாடகங்களின் உருவாக்கமும் நிகழ்த்துகைகளும் அநீதிகளுக்கு எதிராக விரல் நீட்டும் பின்புலத்திலேயே நிகழ்கின்றன. ஏனைய கலை வடிவங் களோடு ஒப்பிடுகையில் நாடகத்துக்கு எதிர்க்கும் வீரியமும் வாய்ப்பும் இயல்பிலேயே அமைந்துவிட்டது எனலாம்

யாழ்ப்பாணத்தில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையும் இடப்பெயர்வும் மீளக் குடியேற்றமும் நிகழ்ந்த 1995 - 2001 காலப்பகுதி யாழ்ப்பாண குடாநாட்டின் மற்றுமொரு முக்கியமான காலப்பகுதி. நெருக்கடிகள் நிறைந்த இந்தக் காலப்பகுதியின் வாழ்க்கை முறையை யும், மன உணர்வுகளையும் அரங்கு வெளிப்படுத்திய பாங்கை பகிர்வதாக இக்கட்டுரை அமைகிறது.

சமாதானத்துகான போர் ஒட்டுமொத்த மக்களையும் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரே நாளில் இடம்பெயரச் செய்தது. சமூக பொருளாதார பண்பாட்டு ரீதியான பெரும் சிதைவுகளுக்கு அடிப்படையாக அமைந்த இந்த நிகழ்வு மக்களை உளவியல் தாக்கங்களுக்கு உட்படுத்தியது. இத்தகைய நெருக்கடிகள் 1996 இல் மக்கள் தமது ஊர்களில் மீளக்குடியேறத் தொடங் கியதும் குறைவதற்குப் பதிலாக மேலும் பல பரிணாமங்களுடன் தொடர்ந்தது. மக்கள் எல்லாவிதமான நெருக்கடிக ளோடும் வாழப்பழக வேண்டியிருந்தது. மௌனமாயிருக்கப் பழகினார்கள். அதுவே நாளடைவில் உளவியல் ரீதியான பாதிப்புகளை சமூகத்தில் விதைத்து விட்டிருந்தது.

இத்தகைய பின்னணியில் ஒப்பீட் டளவில் மிகக் குறைந்தளவாய் இடம் பெற்ற அரங்க ஆற்றுகைகள் அன்றைய யாழ் சமூகத்தில் வீரியமான கருத்து களாக, ஏதோ எதிர்ப்புணர்வை கொட்டிவிட்ட திருப்திதரும் உள ஆற்றுப் படுத்துகைகளாக பதிவாகின.

பல்கலைக்கழக மாணவர்கள் என்கிற அடையாளத்தை மட்டுமே பாதுகாப்பாக நம்பி ஒருவித அசட்டுத் தைரியத்தில் இந்த நாடகங்களை பல்கலைக்கழக மாணவர்கள் மேடையேற்றினார்கள். அரச இயந்திரத்தை நாடகம் மூலம் எதிர்த்தார்கள். குழந்தை ம. சண்முக லிங்கம் என்ற நாடகப் பேராளுமை அப்போது நாடகமும் அரங்கியலும் துறையின் பலமாக இருந்தார்.

பல்கலைக்கழகத்தின் பல்வேறு பீடங் களைச் சேர்ந்த மாணவர்கள் இந்த நாடகங்களில் இணைந்திருந்தார்கள். அரசை எதிர்ப்பதில் இருக்கும் ஆபத்தை உணர்ந்திருந்தும் தன்னலமற்று ஆர்வத் துடன் அவர்கள் இணைந்து செயற்





A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 70 5/27/2025 8:21:14 AM

பட்டார்கள். எல்லோருக்கும் பல்கலைக் கழக மாணவர்கள் என்ற அடையாளமே பலமான பாதுகாப்பாய் இருப்பது என நம்பினார்கள்.

இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய பின்னர் பல்கலைக்கழக வளாகத்தில் முதலா வதாக 1997 இல் விஞ்ஞானபீட மாணவர்களால் மேடையேற்றப்பட்ட "ஆத்ம தரிசனம்" - நாடகம் கவனம் பெற்றது.

சமாதானத்துக்கானது என்ற இனிப்புத் தடவிய போர் அப்போதும் நடந்து கொண்டிருந்தது. வெளிப்படையான இராணுவ மயப்பட்ட நிர்வாகத்தின் கீழ் யாழ் மக்கள் வாழ வேண்டியிருந்தது. விடைகள் தெரியாக் கேள்விகளோடு எதிர்ப்புணர்வுகளை மனதிற்குள் புதைத்து விட்டபடி வாழத்தலைப்பட்டுக் கிடந்தது யாழ்ப்பாணம். போரால் பாதிக்கப்பட்ட மக்களிடம் மனிதபண்புகள் தொலைந்து போதலை அடிப்படையாக கொண்டதாக இந்த நாடகம் இருந்தது. சுயவிசாரணை செய்தபடி மனித விழுமியங்கள் இல்லாத மீள்கட்டுமானம் பயனற்றது என ஒரு எதிர்ப்புக்குரலாக வெளிப்பட்டது.

அன்றிருந்த சூழலில் உளவியல் ரீதியி லான ஒரு வடிகாலாகவும் அதேவேளை பார்வையாளர்களிடம் பெரு வரவேற் பையும் பெற்ற நாடகத்தின் அனுபவம் அடுத்த வருடமும் 1998 லும் அதே பாணியிலான நாடக உருவாக்கத்தை விஞ்ஞானபீட மாணவர்களைத் தூண்டி யது. சூழலில் நாளாந்தம் கண்டு எதுவும் செய்ய முடியா கையறுநிலையில் ஒரு பொறுப்பு வாய்ந்த இளைஞர் சமூகமாக அவற்றை "விழிச்சுடர்" நாடகமாக்கினர். இந்த நாடகம் பல்கலைக்கழகத்தில் மட்டுமன்றி நெல்லியடி, உடுவில், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றிலும் மேடையேற்றப்பட்டு எதிர்ப்புக்குரலாக பதிவாகியது. நாட்டுப்புற மாஜாஜால கதைப்பாணியில் காட்சிகளாக விரியும் இந்த நாடகம் பார்வையாளர்களை அவர்கள் எதிர்நோக்கிய யதார்த்தங் களுக்கு நெருக்கமாக்கியது. சாதாரண மக்களின் சமூக எதிர்ப்பின் பிரதி பலிப்பாக இந்த நாடகம் தன்னை பதிவாக்கியது.

1999 இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் உத்தியோகபூர்வமாக தனித்த பல்கலைக்கழகமாக இயங்க ஆரம்பித்து 25 வருடங்களை நிறைவு செய்தது. அதை வெள்ளிவிழாவாக கொண்டாடும் முகமாக நான்கு நாட்கள் கல்விக் கண்காட்சி ஒன்றை மாணவர் அமைப் புகளும் பல்கலைக்கழக நிர்வாகத்தினரும் ஒழுங்கு செய்தனர்.

இந்த கண்காட்சியில் நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்கள் தமது பங்கிற்கு காட்சிப்படுத்த "உண்மை கொடிது" நாடகம் உருவானது. 20 நிமிடங்கள், மூடிய இருண்ட அறைக்குள் சமகாலத்து துன்ப நிகழ்வுகளை பேசியது நாடகம். அதுவரையில் யாரும் பேசுவதற்கு பயந்த போரின் விளைவுகளை பேசியபோது அசையவே முடியாது என்ற நிலையில் இருந்து





A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 71 5/27/2025 8:21:15 AM

அசையமுடியும், சிந்திப்பதற்கான வெளியொன்றை உருவாக்க முடியும் என்ற நிலைக்கு பார்வையாளர்கள் நகர்த்தப்பட்டார்கள். கட்டுகள் அறுக்கும் சிந்தனைகளோடு 20 நிமிடங்களில் பார்வையாளர்கள் வெளியேற அடுத்த காட்சியின் பார்வையாளர்களோடு மீண்டும் ஆரம்பமானது ஆற்றுகை. நான்கு நாட்கள் தொடர்ச்சியாக யாழ் சமூகத்தின் மனதிற்குள் புகைந்து கொண்டிருந்த உணர்வுகளைப் பேசி அதிகாரத்தின் அடக்குமுறைகளை எதிர்க்கும் குரலாக ஒலித்தது இந்த நாடகம்.

இவ்வாறான நிலையில் மெல்ல மெல்ல நம்பிக்கை உருப்பெற்று உரம்பெற்று அன்றைக்கும் இருந்த கொடிய வலி ஒன்றை 2000ம் ஆண்டில் துணிந்து பேசியது "அக்னிப் பெருமூச்சு" நாடகம். 1996 இல் மீளக் குடியேறத் தொடங்கிய போது இளவயதினர் வேண்டுமென்றே காணாமலாக்கப்பட்டனர். அப்பாவி இளைஞர்களை காவு வாங்கியது இனவாதம். பெற்றவர்கள் இராணுவ முகாம்களுக்கு முன்னாலும் மனித உரிமை ஆணைக்குழு முன்னாலும் காத்திருந்தது எந்த விடைகளையும் கொடுக்கவில்லை. கவனயீர்ப்பு போராட்டங்கள் பயனற்றுப்போயின. அந்தப் பின்னணியில் மக்களின் மனதுக்குள் எரிந்து கொண்டிருந்த நெருப்பை மேடையில் விரித்தது "அக்னி பெருமூச்சு".

நவீன அரங்கின் கட்புலங்களையும் படிமங்களையும் உருவாக்கி அதன் வழியாக பாத்திரங்கள் அதிகாரத்தை நோக்கியும் சமூகத்தை நோக்கியும் கைநீட்டிப் பேசும் எதிர்ப்பு அரங்கின் எல்லாப் பரிமாணங்களையும் கொண்டிருந்தது இந்த நாடகம்.

2000ஆம் ஆண்டில் கைலாசபதி அரங்கில் மேடையேறிய இந்த நாடகம் இன்று வரை நாட்டின் பல பகுதிகளிலும் மேடையேறியிருக்கிறது. இதன் தொடர்ச்சியாக 2001 இல் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீட மாணவர்களால் எனது நெறியாள்கையில் மேடையேற்றப்பட்ட "உயிர்விசை" நாடகமும் அமைந்திருந்தது. எங்களை வாழவிடுங்கள் என்று கோரும் குரலாக அதிகாரத்தின் அடக்குமுறையை எதிர்த்து பதிவாகியது இந்த நாடகம்.

இவ்வாறு சமூக நெருக்கடிகளை நாடகம் மூலம் பேசி அதன் வழியாக தீர்வுகள் காணும் சிந்தனைப் போக்கு வளர்ந்து வந்த சூழலில் நாடகமும் அரங்கியலும் மாணவர்களால் நடத்தப்பட்ட "ஆன்ம விசாரம்" நாடகம் ஆற்றுகையின் முடிவில் கலந்துரையாடலுக்கான களத்தை திறந்து விட்டது என்பதும் அதிலிருந்து தொடர்ந்த கலந்துரையாடல்கள் ஒட்டுமொத்த யாழ் சமூகத்தையும் பல்தேசிய தொண்டு நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து 2001 இல் பொங்கு தமிழ் ஆகப் பரிணமித்தது என்பதும் வரலாறு.

**லக்ஷ்மன் குலசிங்கம்**
*2001- 2004 கலைப்பீடம்*





A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 72 5/27/2025 8:21:16 AM

# la langue tamoule, dans la dispora

La langue est bien plus qu'un simple moyen de communication; elle est un héritage, un symbole de l'identité culturelle et un lien puissant avec nos racines. Pour les enfants Sri Lankais vivant hors de leur pays d'origine, parler Tamoul n'est pas seulement une compétence linguistique mais une manière essentielle de préserver leur Identité et de maintenir un lien profond avec leur histoire familiale..

Le tamoul est une langue riche portée par des siècles de littérature de tradition et de valeurs qui on façonné l'histoire du Sri Lanka. Apprendre et parler tamoul permet aux jeunes générations de comprendre leurs origines, d'apprécier les récits de leurs ancêtres et de se connecter à leur communauté. Une langue porte en elle les coutumes, les croyances et les émotions d'un peuple.

Perdre cette langue, c'est risqué d'effacer une partie de son identité.

La transmission du tamoul par les parents, les écoles ou les associations culturelles jouent un rôle clé. Les histoires racontées par les grands-parents, les chansons traditionnelles et les fêtes célébrées dans la langue maternelle (Thai Pongal, Maveerar Naal...) renforce le lien en parlant Tamoul, les jeunes peuvent échanger avec leurs aînés, apprendre les valeurs de leur culture et ressentir un sentiment d'appartenance. De plus la préservation du Tamoul est un devoir envers le passé.

Les jeunes Sri Lankais qui parlent Tamoul pourront un jour transmettre cet héritage à à leur propres enfant, perpétuant ainsi une identité fière et vivante il est donc essentiel d'encourager l'apprentissage et la pratique de tamoul chez les jeunes générations. Cela permet de rester connecté à leur racines, d'honorer l'histoire de leur famille et de renforcer leurs sentiments d'appartenance.

Parce que parler Tamoul, c'est plus qu'une langue; c'est une porte vers une culture riche et une identité forte.

***Rukshie VILVARAJAH***

*France, 14 ans*





A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 73 5/27/2025 8:21:16 AM

# வேரடி மண்ணுக்கு நீர் பாய்ச்சும் புலம்பெயர் தேசம் . . .

பல்லாயிரமாண்டுகள் பழைமையான வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட தமிழினம் அண்மைக்காலங்களில் பேரழிவையும், அகதி வாழ்வையும் இன்னும் விபரிக்க முடியாத இன்னல் களையும் எதிர்கொண்டு நிற்கிறது. அதன் உச்சமாக இலங்கையில் நடைபெற்ற இனத்தின் பேரழிப்பு ஒட்டுமொத்தமாக சமூகத்தின் எல்லா கட்டுமானங்களையும் சிதைத்துள்ளது. இந்தப் பேரவலத்திலிருந்து மீண்டு வருதல் அவ்வளவு சுலபமானதல்ல. ஆனால் பீனிக்ஸ் போல நாமும் எரித்த சாம்பலில் இருது மீண்டும் சிரித்தமுகத்துடன் ஓரளவுக்கேனும் மீள்வதற்கான எத்தனிப்புகளை நிகழ்த்திக் கொண்டுதானிருக்கிறோம்.

முப்பது வருடப் போரின் தாக்கங்களில் இருந்து மீண்டு தொடர்ச்சியாக இன மற்றும் கலாசார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துவரும் ஒரு சமூகமாக நாம் எதிர்கொள்ளும் சவால்கள் பல. இந்த பின்னணியில் எமது பாரம்பரியத்தையும் பண்பாட்டின் ஆழமான கலாசாரக் கூறுகளையும் கனதியான திட்டமிடல்கள் மூலமே சாத்தியப்படுத்த முடியும்.

முதலில் உணவு, உடை, உறைவிடம் என்கிற மாஸ்லோவின் தேவைத் தத்துவத்திலான அடிப்படை தேவைகள் மீள்கட்டுமானம் செய்யப்படவேண்டும். எமது சமூகத்தில் அந்த நிலை ஓரளவுக்கேனும் திருப்தி தரக்கூடிய நிலையில் முன்னெடுக்கப்பட்டிருப்பதை எண்ணி திருப்தி கொள்ளலாம். எனினும் எமது சமூகம் அந்த நிலையே போதுமென எண்ணிக்கொண்டு தறுக்கணித்துப் போய் விடக்கூடாது. எமது சமூகத்தைப் பொறுத்தவரையில் போருக்கு முன்னதாக சமூக வளர்ச்சியின் ஏணிப்படிகளில் உயர்நிலையில் இருந்த ஒரு சமூகமாகும். தொடர்ச்சியாக பண்பாட்டிலும் விஞ்ஞானத்திலும் இன்னும் பொருளாதார கட்டமைப்பிலும் வளர்ந்து வந்தவொரு இனம். அந்தவொரு காரணத்துக்காகவே இனவாதத்தின் கொடிய கரங்களில் சிக்கி திட்டமிடப்பட்ட சிதைவுகளை சந்திக்கும் ஒரு இனம். எனவே தான் எமது தமிழ் இனத்தின் மீள்கட்டுமானம் தனித்துவங்களோடு அணுக வேண்டிய நிலைக்கு எம்மை நிர்ப்பந்திக்கிறது. கடந்த காலங்களில் எம்மிடம் இருந்த எல்லா வளங்களையும் நல்லவற்றையும் ஒரு புள்ளியில் இணைத்தபடி புலம் பெயர்ந்த தளத்திலும் தாயகத்திலும் இயங்கி வந்த வளர்ச்சிக் கட்டமைப்பு இனவாதத்தின் வெற்றியோடு சிதையுண்டு, சிதறுண்டு போயிற்று.

ஆனாலும் வரலாற்று நெடுகிலும் அநீதிகளையும் அழிவுகளையும் சந்தித்த காழ்ப்புணர்வுகளாலும், துரோகங்களாலும் பாதிக்கப்பட்ட தமிழினம் தன்னை தக்கவைத்துக் கொள்ளத் தலையெடுத்தது. புலம்பெயர் தேசங்களில் இருந்து கிடைத்த ஆதரவு மீண்டும் எமது வேரடி மண்ணுக்கு உரமாகப் பாய்ச்சத் தொடங்க நாம் துளிர் விடத்தொடங்கிவிட்டோம்.

உடனடித் தேவைகள் அதற்கான உதவிகள் என்ற நிலையைத் தாண்டி நிலையான



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 74 5/27/2025 8:21:16 AM

ஆதரவு என்கிற தளத்தில் எமது சமூகம் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறது. தொலை நோக்கமுள்ள நிலையானதும், அறிவு பூர்வமானதுமான பங்களிப்புக்களாக இந்த ஆதரவுத்தளம் விரிவு பெற்றிருக் கிறது.

சமூகப் பிரச்சினைகள் விஞ்ஞான ஆய்வுகளோ அணுகப்பட்டு தீர்வுகள் வரையப்படுகின்றன. ஒப்பீட்டளவில் இது மிகச்சிறிய அளவிலே நடக்கிறது எனினும் நம்பிக்கை தரும் தொடக்கம் என்பதில் மாற்றுக் கருத் தில்லை. தாயகத்தில் நிலவும் தொழில் வாய்ப்பு பற்றாக்குறை, கல்விக்கான வசதிக் குறைபாடுகள், சுகாதார மருத் துவ வசதிகளின் போதாமை போன்ற பின்தங்கிய நிலைகள் ஆய்வுப் பின் புலங்களோடு நிரந்தரத் தீர்வுகள் எட்டப் படுவதற்கு எமது சமூகம் ஒன்றிணைய வேண்டும். இன்றைய காலத்தில் இது மிக மிக அவசியமான ஒன்றாக உணரப்படுகிறது.

சிறு, குறு தொழிற்துறைகளில் முதலீடு செய்வதும் விவசாயம், கடற்றொழில், மீன்பிடித்துறையில் ஊக்கம் கொடுப் பதும் பெருமளவு கூட்டுப்பண்ணை களை உருவாக்கி தொழிற்துறையை பெருக்குவதும் சமூக மீள்கட்டுமா னத்தில் ஓரளவு அடைவுநிலைகளை கொடுத்துள்ளன. எனினும் தன்னிறைவு கொண்ட ஒரு விடுதலைச்சமூகமாக எமது இனம் தன்னை வடிவமைத்துக் கொள்ள ஆழமான கருத்துருவாக்கங்களும் அதன டிப்படையிலான திட்டமிடல்களுமே அவசியமானவை. இந்த நிலையிலேயே சமூக விஞ்ஞான மற்றும் பௌதிக விஞ்ஞான நிலையிலான ஆய்வுகள் எமக்கு கைகொடுக்கின்றன.

பொருளாதார மேம்பாடு என்பது எமது சமூகத்தில் மக்களின் வாழ்வியலையும், தன்னம்பிக்கையையும் மீட்டெடுக்கும் அர்த்தப்பாட்டோடு அணுகப்படுகிறது. தோல்வியில் ஒடுங்கிய மனப்பதிவுகளில் இருந்து சமூகத்தை மீட்டெடுக்க வேண்டியிருக்கிறது. அதற்காக பண்பாடு கலாசார தளங்களிலும் உறுதியான திட்டமிடல்களை செய்ய வேண்டி யிருக்கிறது.

இத்தகைய மிகப்பெரிய பொறுப்பும் கடப்பாடும் தாயகத்தில் உள்ளவர்களைப் போலவே புலம்பெயர் தேசங்களில் வசிக்கும் எம் தமிழினச் சமூகத்தின் மீதும் தார்மீகமாக கையளிக்கப்பட்டிருக்கிறது.

எமது இளையவர்கள் ஏற்கனவே எமது சமூகத்திலிருக்கும் எதிர்மறையான, வளர்ச்சிக்குத் தடையாய் இருக்கின்ற நடைமுறைகளை, முட்டுக்கட்டைகளை இனங்கண்டு களைய வேண்டும். சாதியம், பிரதேசவாதம், மதவாதம் போன்றவற்றை விழிப்புணர்வோடு அணுக வேண்டியது எதிர்கால சந்ததியின் கட்டாயம். இத்தகைய சகதிக்குள் சிக்கிக்கொள்வது இலக்கு நோக்கிய பயணத்தை கடின மாக்கும் என்பதையும் மடைமாற்றும் என்பதையும் கருத்தில் கொண்டு மீள்கட்டுமானம்,ஆதரவு, திட்டமிடல்கள் அமையவேண்டியது கட்டாயமானது.

"நம்முடைய வேர்கள் ஆழமாக இருக்கும்போது, எந்தப் புயலும் நம்மை அசைக்க முடியாது என்பதை நம்பும் சமூகமாக நாம் உருமாறவேண்டும்."

பிரான்சில் வாழும் ஈழத்தமிழர்களில் மருத்துவர்கள், ஆய்வாளர்கள், கல்வியா ளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் என தம்மை



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 75 5/27/2025 8:21:16 AM

வளர்த்துக் கொண்ட பலர் இருக்கிறார்கள். இந்த அறிவுஜீவிகள் அனைவரும் தமது அறிவையும் அனுபவத்தையும் இனத்தின் மீள்கட்டுமானத்துக்கு வழங்க வேண்டிய நேரமிது.

பிரான்ஸ் மட்டுமன்றி ஐரோப்பாவிலும் வட அமெரிக்க நாடுகளிலும் வாழ்கின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பழைய மாணவர்கள், ஏனைய பல்கலைக்கழக மாணவர்கள் எல்லோரும் ஓரணியில் திரண்டு வளங்களைப் பகிர்ந்து செயற்பட வேண்டியது காலம் முன்வைத்திருக்கும் தேவையாகியிருக்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஈழத் தமிழரின் அறிவுத் தளங்களில் ஒன்று. பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் இன்று உலகின் பல்வேறு முன்னணி நிறுவனங்களில் பணியாற்றுகிறார்கள். அவர்கள் பெற்ற கல்வி, அனுபவம், உலகளாவிய பார்வை என்பன எம் இனத்தின் வளர்ச்சிக்கு வலிமையான சக்தியாக இருக்க வேண்டும்; இருக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

இவர்கள் தங்களின் தொழில்முறை திறன்களை ஒருங்கிணைத்து, ஒரு அறிவுசார் குழுவை உருவாக்கி கல்வி, தொழில்நுட்பம், சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் தாயகத்துடன் தகவல் - அறிவுப் பரிமாற்றம், ஆராய்ச்சி நிலைகளில் தமது பங்களிப்பை செய்ய முனைப்புப் பெறவேண்டும் அதுவே தொடர்ச்சியாக அடுத்த தலைமுறையினரையும் எமது தாயக நிலத்துடன் தொடர்புபடுத்தி ஆதரவுத்தளத்தை நெறிப்படுத்த வசதியாக அமையும்.

பிரான்ஸ், ஈழத்தமிழர் பெரும் எண்ணிக்கையில் குடியேறிய முதன்மை நாடுகளில் ஒன்று. கல்வி வாய்ப்புகள், குடியுரிமை வசதிகள், சமூக பாதுகாப்பு என பல்வேறு சூழல்களின் பின்னணியில் எம்மினத்தவர் தமது அறிவுத் திறனையும் ஆளுமைகளையும் வளர்த்திருக்கின்றனர். இன்று இங்கு நூற்றுக்கணக்கான தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் படிக்கின்றனர். ஏராளமானோர் அரசதுறைகளில் மருத்துவம், கணினி, சமூகத் துறை, தொழில்நுட்பம் போன்ற துறைகளில் செம்மையான பங்களிப்புச் செலுத்துகிறார்கள்.

இந்த திறன்கள் அனைத்தும் எமது இனத்தின் மீள்பிறப்புக்கு பங்களிக்கும் வகையில் ஒழுங்கமைப்பும், கட்டமைப்பும் வடிவமைக்கப்பட வேண்டும். ஏனெனில், தற்காலிகமாக உணர்ச்சி வெப்பத்தில் உதவும் நடவடிக்கைகளை விட, நீடித்த, திட்டமிடப்பட்ட, பொறுப்புடைமையுள்ள அறிவுத்திட்டங்கள் ஒரு கூட்டு அறிவின் மூலமே சாத்தியப்படும்.

யாழ் . பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கங்கள் பிரான்சில் உள்ள தமிழ் கல்விச் சங்கங்கள், சமூக அமைப்புகள், மாணவர் அமைப்புகள் எனபவற்றுடன் இணைவதன் மூலம் ஒருங்கிணைந்த அறிவுசார் கூட்டமைப்பு பொறிமுறையை உருவாக்க முடியும். ஏனெனில், எமது இனத்தின் எழுச்சி என்பது அதனுடைய போர்க்குணத்திலும் வன்மையிலும் மட்டுமே தங்கியிருப்பதில்லை, மாறாக அறிவின் வழியாகவே அது நிர்ணயிக்கப்படுகிறது. புலம்பெயர் நிலத்தில் பெருகியோடும் அறிவூற்று கொஞ்சம் ஈழத்துக்கும் பாயட்டுமே!

**யோகானந்தி ரஜிதன்**
ஆசிரியர்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 76 5/27/2025 8:21:16 AM

# RÉFUGIÉS SRI-LANKAISE DANS LA DIASPORA

Je suis né en France en 2012 et grandi en France. Mes proches au Sri-Lanka m'appellent "Française". Mais ici, on me qualifie de "réfugié Sri Lankaise"

Qui suis-je vraiment ? cette question me traverse souvent l'esprit.

La migration est le processus de vie dans un environnement totalement différente de notre paysage, langue, culture, structure sociale, politique et climat. Les gens migrent partout dans le monde pour diverses raisons.

Des Tamouls Vivent en Europe. Notre pays d'origine est Eelam Tamoul. Une lutte pour nos droits qui a duré plus de 30 ans. Des centaines de milliards de Tamouls ont été tués et des milliers de personnes ont disparu.

Les Tamouls ont quitté leur pays et leur famille pour émigrer vers d'autres pays, accablés de chagrin. Mes parents ont émigrés et vivent en France.



C'est douloureux de constater que même si nos parents ont étudié et obtenu les diplômes dans leur propre pays et ont occupé des nombreux postes, ils occupent dans ces pays des emploie qu'ils ne veulent pas et pour lesquels ils ne sont pas adaptés.

Le plus gros obstacle est la langue. Mes parents et surtout mon père vit à l'étranger pendant plus de trente ans. Il n'a jamais pu retourner dans son pays natal ni revoir sa mère. Il y a peut-être beaucoup de pères comme le mien dans ces pays. Je comprends leurs désirs et les douleurs. C'est pourquoi il est de notre devoir, et en tant qu' enfant de la diaspora de porter leurs rêves avec nous.

Comme eux, nous éprouvons aussi des regrets et des souffrances. Mes grands parents vivent dans leur pays d'origine. Cependant, ils ne peuvent pas les câliner, les toucher ou leur parler.

Nous ne pouvons ni jouer ni parler à mes cousins qui vivent dans des pays différents car ils ne comprennent pas la langue de l'autre.

Je sais que notre pays est une île de beauté naturelle. C'est là que se trouvent les trésors des Tamouls comme la bibliothèque et les temples Nallur Murugan. J'aimerais les visiter et les apprécier.

J'aimerais nager dans la mer de Keerimalai et découvrir le port naturel de Trincomalee.

Nous ne pouvons pas nous y rendre parce que nous sommes des réfugiés Sri-Lankais. Le temps changera un jour. Un avenir radieux nous appartient pour cela nous devrons travailler ensemble.

***Mlle VILVARAJAH Ritisha***
*12 ans, France.*



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 77 5/27/2025 8:21:16 AM

# Un plaidoyer pour ma culture

«La réaction est beaucoup plus répandue et véhémente que jamais. L'éruption de violence a été si rapide que nous avons soupçonné qu'il a peut-être été planifié à l'avance.» Ces mots ne sont tirés d'un simple article de presse ou d'une thèse d'un auteur engagé, mais bien d'un document déclassifié de la CIA, écrit en août 1983, soit au lendemain des événements qui actionneront la guerre civile dans mon pays lointain. Ma relation avec ce pays mystique n'a réellement commencé qu'à la découverte de ce document. Mes 3 voyages dans mon pays d'origine n'ont en réalité pas contribué à tisser ce lien précieux avec mon pays. Aller voir sa famille qu'on ne voit qu'une fois tous les deux mois sur un écran, leur dire qu'on va bien et repartir bredouille ne m'a pas ouvert les yeux sur l'impressionnante culture du pays.

On pourrait alors s'étonner que la CIA soit celle qui m'a mis sur le chemin de mes origines. Pourtant, je n'en ai jamais autant découvert depuis mes propres recherches que durant toute ma vie. Si par le passé, les nôtres ont vécu des violences importantes à cette époque, c'est leur culture qui est encore saignée de nos jours.

L'université de Jaffna, dont on fête les 50 ans cette année, n'est pas simplement l'incarnation de l'excellence de ce pays en matière d'éducation, mais aussi l'incarnation d'une volonté : l'enseignement des cultures qui servent de fondation au pays insulaire. Pourtant, si le massacre des corps s'est bien arrêté, le massacre des âmes perdure toujours. Un évènement fort, qui marqua le début d'un désossement perpétuel de notre culture, s'est déroulé le 1er juin 1981 : l'incendie de la bibliothèque de Jaffna. Cette bibliothèque avait comme projet initial de conserver les ouvrages principalement de notre langue, de manière à les rendre accessible à cette minorité ethnique, qui ne profite pas de l'enseignement littéraire dû à la barrière de la langue imposée. Le tragique incendie, donc le caractère criminel n'est pas remis en cause, a emporté dans les flammes autant les livres riches en contenu sur l'histoire et la langue des nôtres que leurs larmes, qui pour une fois ne se sont pas mélangé avec le sang des victimes, mais avec l'encre des ouvrages consumés par la haine de l'autre. Notons que l'incendie de la bibliothèque de Jaffna partageait le même objectif que celui des Nazis lors de la Nuit de cristal en Allemagne en 1938, où des livres, des commerces et des synagogues juifs ont été détruites par les Nazis pour attaquer la mémoire juive.

Cet incendie, comme je l'ai dit plus tôt, n'a rien de ponctuel, puisque les atteintes à notre culture ont perduré jusqu'à nos jours, malgré la fin du conflit, qui n'a d'ailleurs rien d'une paix. Les mouvements de mémoire sont annuellement prohibés par les autorités, et la loi PTA (Protection of Terrorism Act) permet encore d'arrêter, sans mandat officiel, n'importe qui pour soupçon de terrorisme. Dès lors, un constat fort doit être posé : dans mon pays, ma culture est censurée. Sachant que cette censure est partisane, subjective, volontaire et malintentionnée, ma culture est aussi bafouée et presque moquée par ceux qui souhaitent son démantèlement.



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 78 5/27/2025 8:21:16 AM

Face à cette observation, je ne peux qu'avoir peur. Oui, j'ai peur que bientôt, j'en sache plus sur mon pays qu'une personne qui y vit. Peur que quand j'y retourne, on me prenne pour un fou ou conspirationniste parce que plus personne, y compris les descendants même des martyrs de notre passé, ne connaît le réel passé de notre pays. Peur que plus personne n'ait la force de se battre face à la continuelle répression commise contre ma culture. Enfin, je crains par-dessus tout que ce ne soit pas le réchauffement climatique ou la guerre nucléaire qui mettent fin à cette culture autant qu'à l'humanité, mais bien l'oubli qu'on aura nous-mêmes commis de celle-ci.

Une culture qui n'est que temporaire n'en est plus une. Dès lors, il faut agir aussi vite et collectivement que possible. La solution à moyen terme est l'enseignement, et l'Université de Jaffna en est le symbole autant régional que national. Notre culture doit être mise à disposition des étudiants, qui la diffuseront ensuite autant dans le pays qu'à l'international. Il ne suffit pas de simplement se battre pour le maintien de la culture, mais il faut également la travailler, l'étudier, l'exploiter et la propager pour qu'elle se prolonge avec l'évolution du monde. Que ce soit au niveau de l'histoire, de la langue, de la science ou même de l'économie, notre langue a toujours quelque chose à offrir. Se restreindre à l'enseigner serait, au-delà du coup porté à la culture, un affront pour le progrès.

Pour ma part, je ne délègue à personne ma propre part du travail. J'œuvre, comme je vous le demande, à faire exister ma culture. En tant qu'étudiant en droit à l'Université Paris Panthéon Assas, je fais de cette langue mon projet de vie. J'espère ainsi étudier les voies de recours en droit qui existent à notre époque pour dénoncer et condamner les actes passés sous silence contre les nôtres. Aussi, l'incroyable réseau d'information accordé à l'étudiant universitaire que je suis me permet d'explorer en profondeur, là où beaucoup se sont désintéressés, des détails qui permettront de refonder les bases de notre culture. Enfin, j'ai insufflé dans mes perspectives personnelles en France le désir de donner corps au mérite et à la gloire des nôtres. J'ambitionne un futur où notre langue, d'abord chez nous, puis dans le monde, n'est pas vue avec pitié, mais avec admiration. Cette ambition, je ne dois pas être seul à la porter. J'ai la certitude que beaucoup de jeunes étudiants, autant à l'Université de Jaffna que dans le reste du monde, partagent cette conviction, et il suffit de la faire résonner pour qu'on puisse concrètement se rassembler et mettre pleinement en œuvre des projets pour faire vivre notre culture à nouveau.

Pour résumer, notre culture est malade. Étudiantes, étudiants, notre vocation n'est pas de favoriser une source sur une autre, mais de tous les étudier pour faire évoluer nos sociétés. Un livre n'a rien à envier d'un autre, parce que les deux sont nécessaires pour consolider nos connaissances. Les universitaires doivent dépasser ces clivages encore enracinés pour offrir des enseignements qui ambitionnent à l'existence de toutes les cultures, et donc notre culture également.

***S. Thierry***



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 79 5/27/2025 8:21:16 AM

# பல்கலைக்கழக வரலாற்றில் மைல்கல் – கலைப்பீடத்தின் பொன்விழா

**_Prof. (Ms).Subathini Ramesh_**
*Professor in Linguistics*
*Dept. of Linguistics and English*
*University of Jaffna.*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடம் தனது 50ஆவது ஆண்டு நிறைவின் சிறப்பு நிகழ்வை விமரிசையாக கொண்டாடியது. இந்த நிகழ்வு கல்விச் சிறப்பு, கலாசாரப் பங்களிப்பு என்ப வற்றை வெளிப்படுத்தியதன் ஊடாக சமூக வளர்ச்சியில் கலைப்பீடத்தின் பங் களிப்பை பெருமையுடன் பதிவு செய்தது.

கலைப்பீடத்தின் உறுப்பினர்கள், மாண வர்கள், பழைய மாணவர்கள் மற்றும் கௌரவ விருந்தினர்களின் பங்கேற்புடன், இந்த விழா சிறப்பாக நடைபெற்றது.

மூன்று பகுதிகளாக இந்த பொன் விழா நிகழ்வுகள் ஒழுங்கு படுத்தப்பட்டி ருந்தன. கலைப்பீடத்தின் ஒவ்வொரு பரிமாணங்களையும் விளக்கும் வகையில் இந்த நிகழ்வின் நிகழ்ச்சிகள் தனித்துவத் தோடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

முதல்நாள் அமர்வுகள் மங்கல விளக்கேற்றல், தமிழ்த்தாய் வாழ்த்து முதலிய பாரம்பரியங்களுடன் ஆரம் பமானது. பேராசிரியர் சுபாதினி ரமேஷ் இந்நிகழ்வைத் தலைமை தாங்கி நடத்தினார். அவர் தனது உரையில் விழாவினை ஏற்பாடு செய்த குழுவினரின் உழைப்பையும் அர்ப்பணிப்பையும் வியந்து பாராட்டிப் பேசினார்.

தொடர்ந்து கலைப்பீடத்தின் வளர்ச்சிப் பாதையை விளக்கும் ஆவணப்படம் ஒன்றும் திரையிடப்பட்டது. கால ஓட்டத்தில் நடைபெற்ற நிகழ்வுகளில் 60க்கும் மேற்பட்ட முக்கிய நிகழ்வுகளை மிகவும் நேர்த்தியாக படமாக்கியிருந்தனர். தொடர்ந்து உரையாற்றிய கலைப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் கலைப்பீட மாணவர்கள், விரிவுரையா ளர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் நிகழ்த்திய வரலாற்று சாதனைகளை குறிப்பிட்டுப் பேசினார். தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் சிறீசற்குணராஜா அவர்கள் கலைப்பீட பொன்விழா மலரினை வெளியிட்டு வைத்து உரையாற்றும் போது வடமாகாணத்தின் கட்டமைப்பில் எல்லா நிலைகளிலும் யாழ் பல்கலைக்கழக கலைப் பீடத்தின் தாக்கத்தையும் செல்வாக்கையும் விபரித்துப் பேசினார். இந்த நிகழ்வு கலாநிதி பா. அகிலன் வழங்கிய நன்றியுரையோடு நிறைவு பெற்றது.

இரண்டாவது பகுதி நிகழ்வுகள் ஆவண புகைப்பட கண்காட்சியோடு ஆரம்பமானது. இதில் இடம்பெற்றிருந்த புகைப்படங்கள் கலைப்பீடத்தை மட்டு மல்லாது யாழ் பல்கலைக்கழகத்தின் ஆரம்ப நாட்களை பதிவு செய்வதாகவும் அமைந்தது. பிரதி நூலகர் கலாநிதி மைதிலி விசாகரூபன் தலைமையிலான குழுவினர் இந்த வரலாற்றுக் காட்சிகளை தேடித் தொகுத்திருந்தார்கள்.



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 80 5/27/2025 8:21:16 AM

பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வித்தியானந்தன் ஞாபகார்த்த நூலகத்திலிருந்தும், மாணவர் அமைப்புகளிடம் இருந்தும் பழைய மாணவர்களிடமிருந்தும் முக்கியமான 80க்கு மேற்பட்ட புகைப்படங்கள் சேகரிக்கப்பட்டிருந்தது. துணைவேந்தரால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்ட இந்த நிகழ்வு ஏப்ரல் 28, 29 மற்றும் 30 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது.

கலைப்பீடம் சார்ந்த மாணவர் அமைப்புகள், கழகங்கள், மாணவர்கள் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் வெளியிட்ட நூல்களை தொகுத்து காட்சிப்படுத்திய நிகழ்வு இந்த கொண்டாட்டத்தின் மூன்றாவது பகுதியாக இருந்தது. திருமதி பிரதிபா விபுலன், கலாநிதி மைதிலி விசாகரூபன் ஆகியோர் இந்த ஒழுங்கமைப்பில் முன்னின்று உழைத்திருந்தனர். 550 க்கும் அதிகளவான புத்தகங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன.

வரலாறு, தமிழியல், சமூகவியல் மொழிபெயர்ப்புகள் மற்றும் பல துறை வெளியீடுகள், மாத இதழ்கள், மற்றும் மாநாட்டுத் தொகுப்புகள் என பல வகையான நூல்களை இந்நிகழ்வில் பார்க்க கிடைத்தது.

*கட்டுரை ஆசிரியரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கட்டுரையின் தமிழ்மொழிச் சுருக்கம்.*









A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 81 5/27/2025 8:21:19 AM

# Les jeunes issus de l'immigration sri-lankaise en France : les défis d'une génération.

Depuis les années 1980, la France a connu plusieurs vagues d'immigration sri-lankaise, principalement en raison du conflit armé et des persécutions subies par le peuple tamoul au Sri Lanka entre 1983 et 2009. La communauté sri-lankaise en France est donc majoritairement tamoule, avec une diversité de confessions : hindouiste, musulmane ou encore catholique. En fuyant ce climat de persécution, de nombreuses familles ont tenté de reconstruire leur vie dans différents pays d'accueil. La diaspora tamoule sri-lankaise s'est ainsi installée principalement en Europe, au Canada et en Australie.

Aujourd'hui, les enfants issus de cette immigration grandissent en France, souvent pris entre deux cultures. S'ils bénéficient des opportunités offertes par leur pays d'accueil, ils doivent aussi relever de nombreux défis, tant sur le plan social qu'économique et identitaire.

L'un des premiers obstacles est l'intégration sociale, souvent entravée par des discriminations, des stéréotypes ou une méconnaissance de leur culture d'origine. Dès le plus jeune âge, ces enfants, dont la langue maternelle est le tamoul, peuvent rencontrer des difficultés linguistiques en français et sont fréquemment orientés vers des orthophonistes pour affiner leur maîtrise de la langue. À l'école, certains sont confrontés au racisme ordinaire ou à des moqueries liées à leurs origines, ce qui peut nuire à leur estime de soi et à leur sentiment d'appartenance.

Dans le cadre académique, les jeunes d'origine sri-lankaise rencontrent souvent des difficultés liées à la méconnaissance du système administratif et éducatif français de la part de leurs parents. Ces derniers, peu familiarisés avec les spécificités des parcours scolaires en France, ont tendance à orienter leurs enfants vers des filières qu'ils connaissent ou perçoivent comme sûres, notamment les voies scientifiques. De ce fait, des métiers tels qu'ingénieur, médecin ou avocat continuent d'incarner, à leurs yeux, des gages de réussite et de reconnaissance sociale. Il ya tout de même une implication de la part des parents qui se traduit par l'existence de nombreuses institutions communautaires sri-lankaises dédiées au soutien scolaire, reflet d'une cohésion collective importante.

Par ailleurs, les enfants jouent fréquemment un rôle d'intermédiaire dans les démarches administratives du quotidien, en aidant leurs parents à comprendre et remplir des documents, prendre des rendez-vous ou effectuer des procédures en ligne, ce qui ajoute une charge supplémentaire à leur parcours personnel.

Sur le plan économique, malgré une réussite scolaire souvent au rendez-vous, l'accès à l'enseignement supérieur ou à des postes qualifiés reste inégal. L'absence de réseaux professionnels établis peut freiner leur mobilité sociale. Issus d'une immigration relativement récente, ces jeunes



A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 82 5/27/2025 8:21:19 AM

connaissent une ascension sociale marquée, en accédant à des postes de cadres ou à des fonctions élevées. Toutefois, les codes sociaux français, parfois absents du cadre familial, doivent être appris seuls, ce qui complexifie leur parcours.

Enfin, la question identitaire est souvent délicate. Beaucoup ressentent un tiraillement entre leur héritage culturel sri-lankais et leur identité française. Certains s'éloignent partiellement de la culture de leurs parents pour mieux s'intégrer, tandis que d'autres cherchent à renouer avec leurs racines, malgré le manque de points d'ancrage clairs en France. Il existe néanmoins quelques repères communautaires comme La Chapelle, certains cinémas ou lieux de culte, qui permettent de maintenir un lien avec la culture d'origine.

Face à ces défis, de nombreux jeunes sri-lankais en France font preuve de résilience, de créativité et d'initiative. Des projets communautaires émergent pour soutenir la réussite scolaire, valoriser la culture tamoule et renforcer les liens intergénérationnels. Malgré les obstacles, ces jeunes participent activement à la société française et contribuent à la construction d'un modèle plus diversifié et inclusif.



***Birunthan Sivasiri***

*Titulaire d'un Master en Optique et Photonique de l'Imperial College of London, ainsi que d'un Master en Optique et Photonique de l'Institut d'Optique Graduate School (IOGS)*

***Suminthra Shanmukarajah***

*Titulaire d'un Master en Médias, Genre et Cultural Studies de La Sorbonne Nouvelle, ainsi que d'un Master en Stratégies de la Communication au CELSA*





A_UoJ_Golden_Ceremoney_Magazine_France.indd 83 5/27/2025 8:21:19 AM

# LIFT FOUNDATION

எமது சமூகம் காலங் காலமாக எதிர்நோக்கி வருகின்ற சமூகப் பிரச்சனைகளை உடனடித் தீர்வு, தற்காலிகத்தீர்வு என்ற அடிப்படையிலேயே அணுகிவருகிறது. அதனாலேயே அந்தப் பிரச்சினைகளும் தீராத நோயாகி எப்போதும் எம்மிடையே தங்கிவிடுவதைக் காண்கிறோம்.

பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வுகள் சமூக, விஞ்ஞான ஆய்வுகளின் அடிப்படையில் கல்விப் பின்புலத்தோடு தர்க்கரீதியாக அணுகப்பட வேண்டியவை.

இத்தகைய ஆய்வுகளுக்காக வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களையும் மேலைத்தேய உயர்கல்வி நிறுவனங்களையும் நாம் எதிர்பார்த்திருக்கும் போது கால தாமதங்களும், முன்னுரிமை புரிதலில் ஏற்படும் சிரமங்களும் குறைவான இணக்கப்பாட்டையே கொண்டிருப்பதைக்கடந்தகாலங்களில்அனுபவமாகப் பெற்றிருக்கிறோம்.

எனவேதான் எமக்கான பிரச்சனைகளை இனங்காணவும், அதன் மூலங்களை நாமே கண்டறிந்து எமது சமூகத்துக்குப் பொருந்தக் கூடியதான அணுகுமுறைகளைக் கொண்ட ஆய்வுகளைத் திறந்து விடுவதற்கான நிறுவனக் கட்டமைப்பு, எமக்கு மிகப் பலம்வாய்ந்த ஒன்றாகத் தேவைப்படுகிறது.

எமது பல்கலைக்கழகப் பட்டதாரிகள் வளர்ந்த நாடுகளுக்கு உயர் படிப்புக்காகவோ, அன்றி வேலை வாய்ப்புகளுக்காகவோ இடம்பெயரும்போது உலகத்தரம்மிக்க ஆய்வாளர்களாகவும்தொழில்சார் வல்லுநர்களாகவும்திகழ்ந்து, அந்தந்த நாடுகளில் பிரைச்சினைகளுக்குத் தீர்வு வழங்குநர்களாகவும், அந் நாடுகளின் முன்னேற்றத்துக்கு துணை நிற்பவர்களாகவும் இருப்பது நம்மவர்களுக்குக் கிடைக்கின்ற அடிப்படைக் கல்வியறிவுக்குச் சான்றாக அமைகின்றது. நம் பல்கலைக்கழகங்களின் கல்விசார் வளங்களும், நிதி நிலைமைகளுமே நம் பிரைச்சினைகளை நாமே தீர்க்கத் தடைக்கல்லாக இருக்கின்றனவென்று கூறினால் அது மிகைப்படாது.

எமது பிரதேசங்களைப் பொறுத்தவரையில் எமக்கான பிரதான ஆய்வு மூலமாக, அங்கீகரிக்கப்பட்ட மூலமாக பல்கலைக்கழகங்கள் உள்ளன. ஆய்வுகளுக்கான கல்வி மூலங்களும், வளங்களும் கொண்டதாக இருக்கும் இந்த உயர்கல்விக் கட்டுமானங்களின் வழிநடத்துகையோடு சமூகத்திலுள்ள தன்னார்வலர்களும், நலன்விரும்பிகளும் கூட இத்தகைய பிரச்சனைகளை இனங்கண்டு ஆய்வுகளை முன்னெடுத்து தீர்வுகளை நோக்கி நகர முடியும்.

அந்தவகையில் ஆய்வுகளுக்கான நிதிப்பங்களிப்பினை செய்வதற்கான கட்டமைப்புகள் எமக்குத் தேவைப் படுகின்றன. இத் தேவையினை ஓரளவுக்கேனும் நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் உருவான அமைப்பே *LIFT* அமைப்பாகும். எமது சமூகத்திலிருக்கும் தன்னார்வலர்கள், சமூக அக்கறைகொண்ட தனவந்தர்கள், பல்கலைக்கழகப் பழைய மாணவர்கள், கல்விமான்கள் எனப் பலரும் இணைந்து கூட்டாக உருவாக்கிய அமைப்பாக *LIFT* இன் பலம் அமைகிறது.

இது எமது பல்கலைக்கழகங்களின் சர்வதேச வலையமைப்பைக் கொண்டு, உறுதியான அடித்தளமிடப்பட்டுள்ள நிதி மூலமாக இருக்கின்றது. அத்துடன், நிலைபேறாக உறுதியோடு இயங்கக் கூடிய நிர்வாகப் பொறிமுறையினால் கட்டமைக்கப் பட்டிருக்கிறது. தலைமுறை கடந்தும் இதன் பங்களிப்பு எமது தமிழ்ப் பிரதேசங்களுக்கும் எமது மக்களுக்கும் கிடைக்கும் வகையில் நிர்வாக சரத்துகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பது இதன் பலமும் நம்பிக்கையுமாகும்.

பல்கலைக்கழகங்களில் இருந்து வருடாவருடம் வெளியேறும் எமது மாணவர்கள், ஆய்வாளர்களாகும் வாய்ப்புகளின்றி வெறுமனே சேவைத்துறைகளுள் முடங்கிப் போவதால் நமது சமுதாயத்தின் மூளை வளம் விரயமாகின்றது. *LIFT* போன்ற அமைப்புகள் இந்த நிலையை எமது சமூகத்தில் இருந்து அகற்றுவதற்கான பாதையைத் திறந்துவிட வல்லன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதன் மூலம் எதிர்காலத்தில் எமது சமூகம் ஆரோக்கியமான, வளர்ச்சியடைந்த சமுகமாக உருவாகத் தாங்கும் தூணாக இந்த அமைப்பு இருக்கும் என்பதில் ஐயமில்லை.

LEAD
INSPIRE
FOCUS
TENACITY

**Empowering Researchers to Achieve More**